
கல்கி

KALKI

26-11-1967





40 காசு


டி.எஸ்.ஆர் & கோ.,
மதராஸ்–16, கும்பகோணம்.
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER
'கோகுல்'
ஸான்டால் டாய்லெட் பவுடர்
ஸான்டல் வுட் டாய்லெட் பவுடர்
Criterion-TSR-1507


அன்றாடம்
இருபது
லட்சத்திற்கு
மேற்பட்ட மக்களை
மகிழ்விப்பது
கோல்ட்
ஸ்பாட்
GOLD
SPOT
இந்தியாவின்
உன்னத
விற்பனையுள்ள
பானம்

கல்கி



பொருளடக்கம்

பிலவங்க, கார்த்திகை 10 - நவம்பர் 26

திட்டத்தின் தோல்வி தெளிவு...— 5
மஸானி எழுதுகிறார் — 6
ராஜாஜியின் கருத்துக்கள் — 7
நல்லுறவை நாடும் கிலெங்கர் — 11
வணங்கி வரவேற்கிறோம் — 12
விக்ஸர் மன்னன் வி.கே. நாயுடு — 13
அரசியல் சாஸனத்தின் சோதனை... 14
அமெரிக்காவில் ஒரு ராஜ்காட் — 18
யாரோ இவர் யாரோ? — 21
பல்கலைப் பக்கம் — 30
கல்லுக்குள் ஈரம் — 33
யாரை நம்புவது? — 38
சித்திரமும் நகப்பழக்கம் — 45
மணக் கோலம் — 46
பூவிதழ்கள் — 54
அர்னால்டு குட்டிக்கதைகள் — 62
பெண்ணை அனுப்பாதீர்.... — 66
வெறும் மனிதன் — 72
படித்துப் பாருங்கள் — 79
வட்டமேஜை — 80

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


நிழல் நீளுகிறது!
அணு ஆயுத சர்வ நாசம்
குண்டு வெடிக்கும் சமயம்
நெருங்கிவிட்டது!
உலகமே, தூங்குகிறாயே!
கொர்...ர்..ர்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 ★ இதழ் 17

திட்டத்தின் தோல்வி தெளிவு தருமா?

நான்காம் திட்டத்தை இப்போது அமல்படுத்த முடியாது என்பதால் 1969 ஏப்ரலுக்குத் தள்ளிப் போட்டிருக்கிறார்கள். இதன் பொருள் என்ன?

இந்தத் திட்டத்துக்குத் தேவைப்படும் கோடாநு கோடி ரூபாய்களைத் திரட்ட உள் நாட்டில் வசதியில்லை; வெளியாரிடமிருந்து கடன் பெறுகிற சாத்தியக் கூறுகளும் குறைந்து விட்டன.

மூன்று திட்டங்களைப் போட்டுப் பதினாயிரம் கோடி ரூபாய்க்குமேல் செலவழித்ததன் விளைவாக, இத் திட்டங்களே யில்லாமல் இயற்கையாக ஏற்பட்டிருக்கக் கூடிய அபிவிருத்தி கூடப் பாதிக்கப்பட்டுத் தொழில் துறையில் மந்தமும் உற்பத்திச் சுணக்கமும் ஏற்பட்டுள்ளன. இது காரணமாக அடுத்த திட்டத்துக்குப் போதிய நிதி திரளாது என்பதால் நான்காம் திட்டத்தை ஒத்திப் போட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

'மத்தியத் திட்டங்களினால் பொது மக்களுக்குப் பயனே ஏற்படாது. இவை நாட்டின் சாரத்தை உறிஞ்சி வருவதோடு சரி. இந்தத் திட்ட முறையை, அடியோடு கைவிட வேண்டும்' என்று சுதந்திரக் கட்சி விடாமல் எடுத்துரைத்து வந்திருக்கிறது. ஆயினும் காங்கிரஸ் ஆட்சியாளர் காதிருந்தும் செவிடராகத் தாங்கள் சென்ற அழிவுப்பாதையிலேயே தொடர்ந்தனர். இவர்கள் திட்டங்களைக் கைவிடுமாறு செய்ய வழியே இல்லையே என்று நன்மக்கள் ஏங்கிய சமயத்தில் ராஜாஜி எழுதினார்: ''இன்றையத் திட்டங்கள் நாளாவட்டத்தில் தங்களது தலைக்கனமே தாளாமல் தாமாக முறிந்துவிழும்'' என்று. அது ஆயிரத்தில் ஒரு வார்த்தையாகப் பலித்து விட்டது. மூன்று திட்டங்களின் விளைவாகவே நான்காம் திட்டம் காரிய சாத்தியமற்றதாகி விட்டது.

அந்நியக் கடன்களைப் பெருமளவில் வாங்கித் திட்டங்களை நிறைவேற்றுவதைச் சுதந்திரக் கட்சி என்றுமே கண்டித்து வந்திருக்கிறது. இத்திட்டங்களினால் பலன் கிடைக்குமா என்பது சந்தேகத்துக்கிடமானது; ஆனால் இக் கடன்களைத் தீர்க்க அடுத்த தலைமுறையினர் கோடி கோடியாகத் தவணைகள் செலுத்த வேண்டுமென்பது சர்வநிச்சயம். இன்றைய ஆட்சியாளரின் மதியீனத்துக்காக வருங்காலத்தவர்களைத் தண்டிக்கக் கூடாது என்று அறிஞர்கள் இயம்பி வந்தனர். அப்போதெல்லாம் 'அந்நிய நாடுகள் கடன் தரச் சித்தமாக உள்ளபோது இவர்கள் யார் ஆட்சேபக் குரல் எழுப்புவதற்கு?' என்று காங்கிரஸ் ஜமீன்தார்கள் கேலி செய்தனர். ஆனால் கடன் தந்த நாடுகளுக்கு இப்போது நாம் வட்டி தரவேண்டிய காலம் வந்து விட்டதால் அவர்களுக்கே ஓரளவு உண்மை புரிந்து விட்டது போலும். இல்லாவிடில் திட்டத்தைத் தள்ளிப் போடுவார்களா?

இன்னும் ஒன்றரை வருஷங்களில் தேசத்தின் பொருளாதாரம் சீர் திருந்தி விடும், அப்போது திட்டத்தைத் தொடங்கலாம் என்கிறார் திட்டக் கமிஷனின் உபதலைவர் ஸ்ரீ காட்கில். அவர் எண்ணுவதுபோல் அப்போது பொருளாதாரம் முன்னேறுவதற்கு அநுகூலமாகக் காங்கிரஸாட்சி எதுவுமே செய்து விடவில்லை. அடுத்த பட்ஜெட்டில் வரிகளைக் கணிசமாகக் குறைத்தாலன்றி 1969லும் சேமிப்பு பெருக இடம் இல்லை. இது காட்கிலுக்கும் காங்கிரஸ் ஆட்சியாளருக்கும் தெரிந்தது தான். ஆனால் திட்டத்தை அடியோடு கைவிட்டுத் தங்கள் தோல்வியை அப்பட்டமாகக் காட்டிக் கொள்ள விரும்பாததாலேயே — தோல்வியிலிருந்து படிப்பினை பெற்றுத் திருத்திக் கொள்ளும் திராணி யில்லாததாலேயே — இப்போதைக்கு ஒன்றரை ஆண்டுக்குத் தள்ளிப் போட்டிருக்கிறார்கள்.

அதெப்படியாயினும் மூன்று பிரம்மாண்டமான திட்டங்களைப் போட்டதற்குப் பலனாக நாட்டின் பொருளாதாரம் படுத்து விட்டது என்பது ஐயம் திரிபற வெளியாகி விட்டது. பெரும் திட்டம் கூடாது என்று சுதந்திரக் கட்சி கூறியதை ஆட்சேபித்தவர்கள் இனியாவது தெளிவு பெறட்டும்.

மஸானி எழுதுகிறார்:

ஒரு நாட்டிடம் தீராத துவேஷம் கொண்ட ஒருவரை, அத் துவேஷத்தை வெளிப்பட எடுத்துச் சொன்ன ஒருவரை அந்நாட்டுக்கே தூதுவராக அனுப்புவது உண்டா? இப்படி அனுப்ப மாட்டார்கள் என்றுதான் பதில் கிடைக்கும். ஆனால் நமது பிரதம மந்திரியும் சர்க்காரும் இதையே தான் செய்திருக்கிறார்கள். ஸ்ரீ எஸ். எஸ். தவானை பிரிட்டனில் நமது ஹைகமிஷனராக நியமித்திருப்பது இப்படிப்பட்டதே.

1966 ஜனவரி 29ந் தேதி 'ப்ளிட்'ஸில் ஸ்ரீ தவான் பின்வரும் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்: 'வலுவான ஐக்கிய இந்தியாவுக்கு பிரிட்டன் ஒரு மாற்றவொண்ணாத விரோதி என்பதை நேரு உணரவில்லை.... இந்தியாவுக்கும் பிரிட்டனுக்குமிடையே எதிர்காலத்தில் எப்பொழுதுமே நட்பு நிலவ முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. இந்தியா பிளவுண்டால் அதற்காக பிரிட்டன் கண்ணீர் விடாது.' இந்தியா — பிரிட்டன் நல்லுறவுக்கு எதிர்காலமே இல்லை, பிரிட்டன் நமது மாற்றவொண்ணாத விரோதி என்று எண்ணுபவர், அங்கு நமக்குப் பிரதிநிதியாகிறார்!

காமன்வெல்த்தில் நமது சகா பிரிட்டன்; நமது பரம உத்தமமான நட்பு நாடுகளில் ஒன்று அது; சீன ஆக்கிரமிப்பு நிகழ்ந்த 1962 அக்டோபரில் அது நடந்து கொண்ட முறையே இதற்குச் சான்று; நமக்குக் கணிசமான பொருளாதார உதவி புரியும் நாடு அது.

'பிளிட்'ஸில் ஸ்ரீ தவான் எழுதியது ஏதோ ஒரு தாற்காலிக மனக் கொதிப்பல்ல. லக்னௌவிலுள்ள பிளிட்ஸ் தேசிய அரங்கின் தலைவராயுள்ள அவர், பல்லாண்டுகளாக 'ஸஞ்சயா' என்ற பெயரில் ருஷியாவின் அந்நியக் கொள்கைக்குச் சமாதானம் கூறி 'நேஷனல்ஹெரால்டி'ல் எழுதிவந்திருக்கிறார்.

மாதவன் எழுப்பும் வினா

கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு சமீப காலத்தில் தொழிலாளர் இயக்கங்களில் ஓங்கி யிருப்பதால்தான் தமிழகத்தில் பல தொழிற்சாலைகளில் அமைதியின்மை ஏற்பட்டிருப்பதாகப் பொதுக் கருத்து. கம்யூனிஸ்ட் கட்சியுடன் தி. மு. க. தேர்தல் கூட்டமைத்துக்கொண்டதே கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு வளர்ந்ததற்கு ஒரு காரணம் என்றும் கருதப்படுகிறது. இதைக் குறித்து மந்திரி மாதவன், மத்திய அரசாங்கம் ஓர் அரசியல் கட்சியை ஜனநாயகக் கட்சி என்று அங்கீகரித்துத் தேசத்தில் உலவ விட்ட பின், அத்தகைய கட்சியுடன் தேர்தல் உடன்பாடுகள் முதலியவை செய்துகொள்வதை எப்படி எதிர்க்கலாம் என்று கேட்கிறார். மந்திரி மாதவன் கூறுவதில் 'பசை' இருக்கத்தான் செய்கிறது.

அசைக்க முடியாத காங்கிரசை அசைக்க எல்லோருடைய உதவியும் தேவையாயிருந்ததால் இடதுசாரி கம்யூனிஸ்ட்களுடன் தி. மு. க. உடன்பாடு கொள்ள வேண்டி நேர்ந்தது.

சீனப் படையெடுப்புக்குப் பின் தில்லியில் இருக்கும் மத்திய அரசாங்கமே கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை விதித்திருந்தால் இன்று நிலைமை இவ்வளவு மோசமாகி யிராது.

கம்யூனிஸ்ட் நாடுகளிடமிருந்து ராணுவ தளவாடம் முதலிய எல்லா வகையான உதவிகளையும் பெறும் எகிப்து, தனது நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி இயங்கத் தடை விதித்திருக்கிறது. ஆனால் நமது நாட்டில் அராஜகச் சூழ்நிலை விளைவிக்கும் அக்கட்சிக்குத் தடை விதிக்கத் தயங்குவது ஏனோ?

காமகோடியின் கருணை மொழி

கண்ணாடிக்குள் ஒரு பிரதி பிம்பம் தெரிகிறது. அதன் நெற்றியில் பொட்டு இட்டிருந்தால் அழகா யிருக்கும் என்று தோன்றுகிறது. அப்போது என்ன செய்கிறோம்? பிம்பத்துக்குப் பொட்டிட்டால் கண்ணாடிதான் கறுப்பாகும். அதற்கு மூலமாக வெளியே ஓர் உருவம் இருக்கிறதே. அவ்வுருவத்துக்குப் பொட்டு வைப்பதுதான் புத்திசாலித்தனம். அப்போது பிரதிபிம்பத்துக்கும் பொட்டு இடப்படும்.



ஒவ்வொருவருடைய அந்தக்கரணத்திலும் இப்படித்தான் பரமாத்ம விளக்கத்தின் பிரதி பிம்பம் இருக்கிறது. அந்த பிம்பத்துக்கும் கொஞ்சம் சக்தி இருக்கிறது — உண்மையான சூரியன் உலகம் முழுவதற்கும் வெளிச்சம் தருகிறான் என்றால், தண்ணீரில் தெரிகிற பிரதிபிம்ப சூரியனுக்கும் சிறிது ஒளி இருப்பது போல. பரமாத்மாவின் பிரதிபிம்பமாகிய நமக்குச் சௌக்கியம் உண்டாக்கிக் கொள்வதாக நினைத்து நமக்கு நாமே நன்மை செய்து கொள்வது கண்ணாடிக்குப் பொட்டு வைத்துக் கறுப்பாக்குவது போலத்தான். பரமாத்மாவிடம் ஒன்றைப் பண்ணினால் அதுவே அதன் பிரதி பிம்பமான நமக்கும், சகலப் பிராணிகளுக்கும் பண்ணியதாகும். ஜீவனுக்கு ஆனந்தம் வேண்டுமென்றால், சகல ஜீவராசிகளுக்கும் ஆதாரமான பரமாத்மாவின் சரணத்தை அடைய வேண்டும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

'அலுவல் நேரத்துக்குப் பிற்பாடு தொழிலாளர்கள் வேலை செய்கிற இடத்தில் கூடி, நிர்வாகிகள் தாமாகச் செய்ய விரும்பாத காரியத்தைச் செய்யும்படி நிர்ப்பந்தம் செய்வது குற்றம்' என்று தமிழ் நாட்டு ஹைகோர்ட் தீர்ப்புக்கூறியுள்ளது. இதை ஆட்சேபித்துத் தொழிலாளர்கள் ஹைகோர்ட்டின் முன் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். தொழிலாளிகளும் நிர்வாகிகளும் — பண்டங்களை வாங்குவோரும் உற்பத்தி செய்வோரும்— சிறுபான்மையினரும் பெரும்பான்மையினரும் சேர்ந்ததே தேசம். இப்படிப் பல பகுதிகள் கொண்ட நம் நாடு, அரசியல் சாஸனத்தின் முக்கிய ஸ்தம்பமான நீதிமன்றங்கள் சுதந்திரமாகச் செயலாற்றுவதை விரும்புகிறதா? அல்லது சாஸனத்துக்கும் சமாதானத்துக்கும் முன்னேற்றத்துக்கும் உறுதுணையான நீதிமன்றங்கள் மக்களின் அச்சுறுத்தலுக்கு அடிபணியும் பொம்மையாக வேண்டுமென்று விரும்புகிறதா? இந்தக் கேள்விகளை எழுப்புகிறது சமீபத்திய ஆர்ப்பாட்டம். ஹைகோர்ட் ஏதேனும் ஒரு தீர்ப்பில் தவறு செய்ததாகவே தோன்றினாலும் கூட அதற்கு மேலாக சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ள இடம் இருக்கிறது. அதன்பின் அவசியமென்று தோன்றினால் பார்லிமென்டைக் கொண்டு பழைய சட்டங்களை மாற்றிப் புதுச் சட்டங்கள் செய்து கொள்ளவும் இடமிருக்கிறது. இவ்வாறிருக்க, சுதந்திரமாக முடிவு எடுப்பதற்கு நீதி பரிபாலனம் பெற்றுள்ள உரிமையை மக்கள் பறிமுதல் செய்வதற்கில்லை.

ஓர் அலுவலகக் கட்டிடத்திலோ அல்லது அதைச் சேர்ந்த நிலத்திலோ, வேலை செய்வதற்கின்றி, வேலை நேரத்துக்குப் பிற்பாடு ஒருவரோ அல்லது பலரோ கூடி, சொந்தக்காரர்கள் தாமாகச் செய்யப் பிரியப்படாதவற்றைச் செய்யுமாறு உபத்திரவம் செய்வது, அத்துமீறுகிற குற்றம் என்ற பிரிவின் கீழ் சட்டப்படி வரும். வேலைநிறுத்தம் செய்வதற்கு மேலாக இவ்வித நடவடிக்கைகளை எடுப்பது தொழிலாளருக்குள்ள கூட்டுபேரச் சுதந்திரத்தின் அங்கமாகுமா என்பதற்குக் குற்றச் சட்டப் பிரிவு திருப்திகரமாக விடை சொல்லவில்லை என்று தோன்றினால் இதைப் பார்லிமென்ட் முடிவு கட்டுமாறு விடவேண்டும். ஆனால் மக்களே கூடி ஆர்ப்பாட்டம் செய்து, நீதிபரிபாலனத் துறைக்குச் சட்டங்களை விளக்குவதற்குள்ள சுதந்திரத்தை மறுப்பது எவருக்குமே நன்மை பயக்காது. ஜனநாயகமும் அரசியல் சாஸனத்தின் ஆதாரங்களும் முறிந்து விழ வேண்டுமென்று கம்யூனிஸ்டுகள் விரும்பலாம். ஆனால் நாடு இதை விரும்பவில்லை.

ஃ ஃ ஃ

ஹிட்லர் பாணியில் நம் அரசாங்கம் பறித்துவிட்ட தொழில் சுதந்திரங்களை மீண்டும் வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. இதோடுகூட, தொழில் துறை உறவுகளையும் விவேகமாகச் சீர்திருத்த வேண்டும். அரசியல் கட்சிகள் தொழிலாளரை இயக்கி வைப்பது தவிர்க்கப்பட வேண்டும். இன்றுள்ள தொழிலாளர்கள் தாமே போதிய அறிவு முதிர்ச்சி பெற்றவர்கள். எனவே அவர்கள் அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் தவறான வழியில் செலுத்தும் செல்வாக்கிலிருந்து தங்கள் சங்கங்களை விடுவிக்க வேண்டும். பரஸ்பரம் அன்பான உறவுகள் ஏற்படுவதற்குரிய சூழ்நிலை தயாராக உள்ளது. தொழில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிர்வாகிகள் தொழிலாளருக்கு மிகவும் தாராள மனப்பான்மை காட்டி நடத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. தொழிற்சங்கங்கள் மேலே சொன்னபடி மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதற்கே இந்தச் சாதகமான சூழ்நிலை காத்துக் கொண்டிருக்கிறது. வெளியார் தலையிடுவதற்கும் தலைமை தாங்குவதற்கும் இனி காரணமில்லை. தொழிலாளர்கள் தாங்கள் பெற்றுள்ள முதிர்ச்சியை உணர வேண்டும். சுயநல அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் வெளிக் காப்பிலிருந்து அவர்கள் தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

ஃ ஃ ஃ

ஒரே சர்க்கார் நாடு முழுவதையும் ஆளுகிற யூனிடரி முறையை நமது சாஸனம் கூறவில்லை; ஆட்சிப் பொறுப்பு மத்திய - மாகாண அரசாங்கங்களிடம் பகிர்ந்து தரப்படும் சமஷ்டி முறையையே சாஸனம் அங்கீகரித்திருக்கிறது — இந்த உண்மையைச் சமீபத்திய போக்குகளுக்குப் பின் மத்திய சர்க்கார் எவ்வித மனத் தயக்கமுமின்றி ஒப்புக் கொள்ள வேண்டும். மத்திய - ராஜ்ய சர்க்கார்கள் உரசலில்லாமல் செயலாற்றுவதற்கு கவர்னர் பதவியை ரத்துச் செய்துவிட்டு, அவருக்குப் பதிலாக சமஷ்டிப் பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டுமெனக் கருதுகிறேன். அவர் தமக்கு விதிக்கப்பட்ட பணிக்கு மேலாகச் சொந்த முடிவின் மீது எதுவும் செய்ய வேண்டியதில்லை.

மத்திய (சமஷ்டி) சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்கார்களுக்கும் எந்தெந்த இனங்களில் வருமானம் கிடைக்க வேண்டும் என்பது பற்றிய பட்டியலில் மாறுதல் செய்து, ராஜ்யங்களின் வருமானத்தை அதிகரிக்க வேண்டியிருக்கும். சட்டம், ஒழுங்குப்பாடு இவற்றில் ராஜ்ய சர்க்கார்களின் பொறுப்பு என்ன, சமஷ்டி சர்க்காரின் பொறுப்பு என்ன என்பதை மீண்டும் பரிசீலனை செய்து, உறுதிப்படுத்தினால்தான் தேசம் முழுவதிலும் அமைதி நிலவ வழி பிறக்கும்.

ஃ ஃ ஃ

அரசியல் சாஸனத்தின் உட்கிடையை ஆராய்ந்து சென்ற நவம்பர் எட்டாந் தேதியன்று சென்னையில் முன்னாள் பிரதம நீதிபதி ஸ்ரீ கே. சுப்பா ராவ் அவர்கள் ஓர் உரையாற்றியிருக்கிறார். நமது ஆட்சி முறையை பிரிட்டிஷ் ஆட்சி முறையோடு குழப்பிக்கொண்டு பார்லிமென்டே நாட்டில் எல்லாவற்றுக்கும் மேம்பட்டது என்று விஷய ஞானமில்லாத

வர்கள் பேசுவதை அவர் கண்டித்திருக்கிறார். பார்லிமென்டைக் குறித்து பிரிட்டனின் நிலையும், நமது சாஸனம் கூறுகிற நிலையும் மாறுபட்டவை. அரசியல் சாஸனம், பார்லிமென்ட், நீதிமன்றங்கள் என்ற மூன்று கால்களைக் கொண்ட முக்காலியின் மீது இந்தியா அமைக்கப் பட்டிருக்கிறது.

ஆசனங்களுக்குள் முக்காலியே மிகவும் ஸ்திரமானது என்று கல்லூரி நாட்களில் பௌதிக வகுப்பில் பாடம் கேட்டிருக்கிறேன். தரை சமமாக இல்லாதபோதிலும் முக்காலி உறுதியாக நிற்கும். நமது அரசியல் வாழ்வின் மூன்று கால்களில் ஒன்றான பார்லிமென்ட், வாக்காளர்களில் பெரும்பான்மையினரின் சார்பில் நாட்டு நிருவாகத்தை நடத்தும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. இதற்கு அங்கமாக மந்திரி சபையும், அதிகாரிகளும் கொண்ட நிர்வாக அமைப்பும் அதற்கு உதவுகின்றன. சட்டங்கள் செய்யும் அதிகாரம் பார்லிமென்டுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எல்லாச் சட்டங்களுக்கும் அர்த்தம் செய்கிற உரிமையும், எந்தச் சட்டமும் அமல் செய்யப்படும்போது சரியாகச் செய்யப்படுகிறதா என்று முடிவு செய்யும் அதிகாரமும் நீதித் துறைக்குத் தரப்பட்டுள்ளன. இவ்விஷயங்களில் ஸுப்ரீம் கோர்ட்டின் முடிவே முடிவு.

பார்லிமென்டின் மூலம் வாக்காளர்களில் பெரும்பாலோர் ஆட்சிப் பொறுப்பையும், சட்டம் செய்யும் அதிகாரத்தையும் செலுத்துகின்றனர். ஆனால் தனி மனிதனையும், சிறுபான்மையினரையும் பெரும்பான்மையினரின் முடிவுகளிலிருந்து காக்க நேருவதுமுண்டு. இந்தக் காப்பைத் தர பார்லிமென்டில் நடைபெறும் விவாதம் போதாது. ஏனெனில் விவாதத்தினால் அறிவு விளக்கம்தான் தர முடியுமேயன்றி பெரும்பான்மையோரின் முடிவை மாற்ற முடியாது. தனி மனிதனுக்கும், சிறுபான்மையினருக்கும் இந்தக் காப்பைத் தருவதற்காகத்தான் சாஸனத்திலேயே ஜீவாதார உரிமைகள் சேர்க்கப்பட்டன. அதாவது சாஸனமே அவர்களுக்குக் காப்புத் தந்தது.

ஆனால் கடந்த இருபதாண்டுகளாக சாஸனத்தில் உள்ள இந்த முக்கியமான காப்புப் பிரிவுகள் இடையறாமல் அரித்தெடுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ சுப்பா ராவ் ஆட்சேபிப்பது இதனைத்தான்.

நமது சாஸனம் கூறும் கொள்கை சர்வாதிகாரமல்ல. சர்வாதிகாரப் போக்குகளைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்திலேயே அது திட்டவட்டமாக வகுக்கப்பட்டுள்ளது. சொத்து, தொழில், நஷ்டஈடு ஆகிய விஷயங்களில் பிரஜைகளின் ஜீவாதார உரிமைகளை சாஸனமே வலியுறுத்திக் கூறுகிறது. இவற்றைக் குறுக்குவது சாஸனத்தை மீறுவதேயாகும். சர்வாதிகார ஆட்சியால் பொதுவான சமூகநலனை ஏற்படுத்த முடியாது. ஜனநாயகத்தால்தான் முடியும் என்பது ஐம்பதாண்டுக் கம்யூனிஸ்ட் ஆட்சியின் தோல்வியால் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் ஜனநாயக நாடுகளில் கண்டுள்ள முன்னேற்றமும் திருப்தியும் சுதந்திர உணர்வும் குறிப்பிடத் தக்கவை. கம்யூனிஸம் விதிக்கிற அடிமைத்தனத்துக்கு மக்களைப் பழக்கப்படுத்திவிடலாம்; மேலெழுந்தவாரியில் அம்மக்கள் நிறைவு பெற்றிருப்பதாகவும் தோன்றலாம். ஆனால் அது உண்மை நிறைவல்ல, ஆன்ம நாசமேயாகும்.

ஃ ஃ ஃ

வங்கத்தில் இன்றுள்ள கூட்டணி சர்க்காருக்குப் பதிலாகக் காங்கிரஸாரும், காங்கிரஸிலிருந்து பிரிந்த புரட்சியாளரும் கொண்ட சர்க்காரை ஏற்படுத்த முயன்றால், அந்தப் புதிய சர்க்கார் கம்யூனிஸ்ட்களால் தூண்டிவிடப்பட்ட கிளர்ச்சிக்காரர்களால் அழிவுபடுவதிலேயே முடியும். இது வங்கத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு வெற்றியாவதோடு மட்டுமின்றி, இந்தியா முழுவதுமே கம்யூனிஸ்டுகளுக்கும் அவர்களது அநுதாபிகளுக்கும் வலுத் தரும். இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்தாலொழியச் சட்டமும் ஒழுங்கும் அமைதியும் முன்னேற்றமும் ஏற்பட வழியில்லை.

○ குடகில் உள்ள அம்மாத்திக் கிராமத்தில் அமெரிக்க உதவியுடன் அமைந்த வைத்தியசாலைக்காகச் சமீபத்தில் பெங்களூரில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஓர் உதவிக் கச்சேரி வழங்கினார். தலைமை தாங்கிய அமெரிக்க தூதர் செஸ்டர் பௌல்ஸின் துணைவியார் எம். எஸ்.ஸுக்கு அன்பளிப்பாக வெள்ளித் தட்டொன்றை ஓர் அழகிய பெட்டகத்தில் வைத்து வழங்கினார்.










○ சி. பி. ராமசுவாமி அய்யர் நினைவு நிதி வருடாந்திர விழா கொண்டாடப் பட்டது. அது சமயம் சென்னையில் உள்ள அமெரிக்க தூதர் டாக்டர் ஆல்பர்ட் பிராங்க்ளின் டாக்டர் சி. பி.யின் புத்தகம் ஒன்றை வெளியிட்டு உரை நிகழ்த்தினார். சி. பி. யின் இல்லத்தை இந்திக்கு வழங்கியுள்ளார் அவரது புதல்வர் திரு பட்டாபிராமன்.

○ சென்னை மாதர் சங்கம் தனது பொன் விழாவை ராஜாஜிஹாலில் கொண்டாடியது. விழாவைத் தொடங்கி வைத்து டாக்டர் விஜயலட்சுமி பண்டிட் உரையாற்றுகிறார்.

○ பள்ளியாசிரியர்களுக்கான ராஷ்டிரபதியின் பரிசுகளில் ஒன்றை அச்சிறுப்பாக்கம் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் திரு ஆர். வேங்கடேசன் பெற்றார்.



○ தில்லி பஜனை சமாஜத்தின் ஆதரவில் பாரதத் தலைநகரில் பதினெட்டு நாட்கள் தஞ்சாவூர் சகோதரிகளான குமாரி சாவித்திரி, காமாட்சி, சரஸ்வதி, ராஜேசுவரி ஆகியோரின் சங்கீத உபன்யாசம் சிறப்பாக நடைபெற்றது.



ஜம்ஷெட்பூரில் தொழிற்சாலையின் பாதுகாப்பு பணியின் பகுதி

தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் 75 சதவீதம் தவிர்க்கக் கூடியதாயுள்ளன என்று அனுபவத்தில் தெரியவருகிறது. ஏனெனில் தொழிலாளிகளின் கவனக்குறைவுதான் அவைகளுக்குக் காரணமாகின்றன. அதனால்தான் டாடா ஸ்டீலில் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று ஒவ்வொரு தொழிலாளிக்கும் வலியுறுத்தப்படுகிறது.

டாடா ஸ்டீல் ஆலையில் ஒரு தொழிலாளி முதன் முதலாக வேலையில் சேர்ந்தவுடன் அவருக்கு அறிவிக்கப்படுவது பாதுகாப்பு விதி முறைகள் தான். அப்படி ஆரம்பிக்கப்பட்ட படிப்பினை கடைசி வரை தொடர்ந்த போதனை மூலம் நடைபெற்று வருகிறது. இயந்திரம் இயங்கும் இடங்களின் ஒழுங்கான கண்காணிப்பு, பாதுகாப்பு சாதனங்களை கையாளும் திறன், பாதுகாப்பு எச்சரிக்கை கமிட்டியின் சுறுசுறுப்பான உழைப்பு இவை யெல்லாம் சேர்ந்து கவனக் குறைவால் ஏற்படும் விபத்துகளை முற்றிலும் தவிர்க்க உதவுகின்றன. தொழிலாளிகள் பயமில்லாமல் தொழிற்சாலையில் பணியாற்றும் சூழ் நிலையை உருவாக்குகின்றன. தவிர, பாதுகாப்பு விதிமுறைகளைப் பற்றிய பிரசாரம், பொருட்காட்சிகள், போட்டிகள் எல்லாம் ஒவ்வொரு தொழிலாளியிடமும் பாதுகாப்பு விதிகளை அனுசரிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கி விடுகின்றன.

1961ல் மாதமொன்றுக்கு சுமார் 249 விபத்துகளாக இருந்தது 1966ல் 64 விபத்துகளாகக் குறைந்து விட்டதே இவர்களின் தளரா முயற்சியின் வெற்றியாகும். 1966 ஜூன் மாத முதல் தேதியிலிருந்து 14ம் தேதி வரை தொழிலாளிகள் 24 லட்ச மணிகள் யாதொரு விபத்துமில்லாமல் யந்திரங்களுடன் ஒன்றி பணியாற்றினர். இச்சாதனை நம் நாட்டின் கனரக தொழிற்சாலைகளின் சரித்திரத்தில் கண்டிராத மகத்தான ஒன்றாகும்.

ஜம்ஷெட்பூரில் பாதுகாப்பு என்பது தொழிலாளிகளின் பணியின் பகுதியாக அமைந்துவிட்டது. அதனால்தான் தொழில் துறை வாழ்விற்காக இல்லாமல் அவர்கள் வாழ்வின் ஒரு பகுதியாகவே வளர்ந்து வருகிறது.

டாடா ஸ்டீல்

The Tata Iron and Steel Company Limited

TN 3617A

நல்லுறவை நாடும் கீஸெங்கர்

சுதந்திர இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அயல் நாட்டுத் தலைவர்களின் ஜாபிதா நீண்ட ஒன்று. அதில் இம்மாதம் 20ந் தேதியன்று புது தில்லிக்கு வந்து இரண்டு நாட்கள் தங்கி ரங்கூனுக்குச் சென்ற மேற்கு ஜெர்மனியின் சான்ஸலர் டாக்டர் குர்ட் ஜார்ஜ் கீஸெங்கரின் பெயர் குறிப்பிடத்தக்கதொன்று. இதுதான் மேற்கு ஜெர்மனியின் பிரதமர் இந்தியாவுக்குச் செய்யும்' முதல் விஜயம். (அந்நாட்டு சான்ஸலர் என்பது நமது நாட்டின் பிரதமர் பதவிக்குச் சமம்.)

ஒரு நாட்டின் வளர்ச்சியில் புதுப் புதுப் பிரச்னைகள் தோன்றிக் கொண்டிருப்பது சகஜமே. மேற்கு ஜெர்மனிக்கும் இது பொருந்தும். அந்நாட்டின் பிரச்னைகள் முக்கியமாக இரண்டு. ஐரோப்பிய நாடுகளிடையே மேற்கு ஜெர்மனிக்கு உரிய இடத்தை நிலைநாட்டிக்கொள்ளுதல் முதலாவது. சுதந்திர மேற்கு ஜெர்மனியாகவும் கம்யூனிஸக் கிழக்கு ஜெர்மனியாகவும் பிளவுபட்டுள்ள ஜெர்மனி மக்களை இணைப்பது இரண்டாவது பிரச்னை. இவ்விரண்டுமே இன்று நேற்று தோன்றிய பிரச்னைகள் அல்ல. இரண்டாவது யுத்தம் முடிந்த காலத்திலிருந்தே முதலில் நிற்பவை. 'பெர்லின் சுவர்' என்று உலகப் பிரசித்தி அடைந்துவிட்ட தடைகளும், அவற்றின் இரு மருங்கிலும் நிலவும் மாறுபட்ட அரசியல் கொள்கையும், ஏற்றத் தாழ்வுள்ள மக்களின் வாழ்க்கைத் தரங்களும், ஒரே இன மக்களாயினும் இவர்களை இணைப்பதில் உள்ள சிக்கல்களை எடுத்துக் காட்டுகின்றன. இவற்றைத் தீர்த்துக் கொள்ள மேற்கு ஜெர்மனி மக்களும் தலைவர்களும் அமைதியான முறையையே மேற்கொண்டு வருகின்றனர் என்பதை சான்ஸலர் கீஸெங்கரின் விஜயம் நினைவுகூர்கிறது.

அவர் அவ்வப்போது வெளியிட்டுள்ள கருத்துக்கள், மேற்கு ஜெர்மனியின் இப்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளைத் தெளிவாகவே விளக்கி வைக்கின்றன. உதாரணத்துக்கு முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கே கூறலாம்.

''வெளி நாட்டுக் கொள்கை என்பது ஒவ்வொரு நாட்டின் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் என்று கூறுவதில் உண்மை இருப்பினும், சுதந்திரம் பெற்றுவிட்ட ஒவ்வொரு நாட்டு மக்களின் சுயநலமும் எதிர்காலமும் மற்ற நாடுகளின் முன்னேற்றத்துடன் பிணைந்தே இருத்தலால், எந்த நாட்டின் சுயநலமும் பிற நாட்டின் நலனைப் புறக்கணிக்கவோ, ஒதுக்கவோ முடியாது. ஆகவே, உலக மக்களுடன் ஒன்றியே, சமாதான முறையிலேயே எந்த நாடும் முன்னேற வேண்டும்... பிற நாடுகளுக்கு உதவி அளிக்கும்போது யுத்த தளவாடங்களைப் பெருமளவு கொடுத்து, பொருளாதாரத் துறையில் சிறிய அளவே உதவி தருவது வருந்தத் தக்கது... பொருளாதார உதவி என்பதைத் தங்கள் கோட்பாடுகளைப் பிரசாரம் செய்வதற்கான ஒரு கருவியாகச் செயல்படுத்துவதை விலக்க வேண்டும். உண்மையான கூட்டுறவு முறையில் எந்த முன்னேற்றமும் நடைபெற வேண்டும்.''

இவற்றை டாக்டர் கீஸெங்கர் சொல்லளவில் மட்டும்தான் பேசுகிறார் என்பதில்லை. மேற்கு ஜெர்மனியின் அரசாங்கம் நடைமுறையில் கையாளும் கொள்கையும் இதுவே என்று சொல்ல வேண்டும். எடுத்துக் காட்டாகச்





டாக்டர் கீஸெங்கரும் அவரது மனைவியாரும்

சில உதாரணங்கள் சொல்லாம். 1955—1957 ஆண்டுகளிலேயே சுதந்திர மேற்கு ஜெர்மனிக்கும் கம்யூனிஸ மாஸ்கோவுக்கும் பரஸ்பர தூதராலய உறவுகள் இருந்தன. இப்போது ருமேனியாவுடன் இத்தகைய ஏற்பாடு நிலவுகிறது. வார்ஸா (போலந்து) ப்ராக் (ஸெக்கோஸ்லோவேகியா) முதலிய இடங்களில் மேற்கு ஜெர்மனியின் வர்த்தக தூதரகங்கள் இப்போது ஏற்பட்டுள்ளன.

அணு குண்டுகளையோ கிருமிப் போருக்கான ரசாயனப் பொருள்களையோ மேற்கு ஜெர்மனி உற்பத்தி செய்யாது என்று அதன் அரசாங்கம் உறுதி அளித்திருக்கிறது.

போரில் தோல்வியுற்ற நாடு என்பதால் அது சமாதானத்தை விரும்புவதில் தீவிர சிந்தனை காட்டுவது நியாயமே என்று தோன்றும். ஆனால் உலக அரங்கில் தற்காலிகமாகத் தன் கொள்கைக்குப் பெருமை தேடிக்கொள்வதற்காகவோ, வேறுவித விசேஷ அனுகூலத்துக்காகவோ இக் கொள்கைகளை மேற்கு ஜெர்மனி பின்பற்றவில்லை என்றே சொல்ல வேண்டும். உலக அமைதிக்கு அந்நாடு அளிக்கும் உத்தரவாதமே இது.

தங்கள் நாட்டின் பிளவுபட்ட இரு பகுதிகளை இணைக்கும் லட்சியத்தில் மேற்கு ஜெர்மனி நட்பு நாடுகளின் நல்லெண்ணத்தையும் ஆதரவையும் நாடுகிறது. இந்தியா நடுநிலைமைக் கொள்கை நாடு என்றாலும் மேற்கு ஜெர்மனியின் லட்சியங்களுக்கு ஆதரவளிப்பதில் இந்தியாவுக்குக் குறைவு ஏற்படாது.

வணங்கி வரவேற்கிறோம்

சென்னை ஆஸ்திக ஜனங்களுக்கு, குறிப்பாக மத்வ சித்தாந்தத்தைப் பின்பற்றுபவர்களுக்கு ஸ்ரீ பேஜாவர் மடத் தலைவர் ஸ்ரீ விச்வேசதீர்த்த ஸ்ரீபாதங்களவரு ஸ்வாமிகளைத் தரிசித்து அவரது அனுக்கிரகத்தைப் பெறும் அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

உடுப்பி க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் கிருஷ்ண பரமாத்மாவுக்குப் பூஜை செய்து மக்களுக்கு அருள் பாலிக்கும் பொறுப்பை உடுப்பியிலுள்ள எட்டு மடத்துத் தலைவர்களும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருவராக முறைப்படி ஏற்றுக் கொண்டு தர்ம பரிபாலனம் செய்து வருவது தொன்று



தொட்டு நிலவி வரும் சம்பிரதாயம். இந்த முறைப்படி 1968 ஜனவரி 18ந் தேதியன்று தற்போது ஸ்ரீ பேஜாவர் மடத் தலைமை வகிக்கும் ஸ்ரீவிச்வேச தீர்த்த ஸ்வாமிகள் பரியாய பீடத்தை வகிக்கப் போகிறார். இவ்வைபவத்துக்குப் பூர்வ நடவடிக்கையாக ஸ்ரீ ஸ்வாமிகள் நாட்டின் பல இடங்களுக்கு யாத்திரை செய்து பக்த கோடிகளுக்கு அனுக்கிரகம் செய்து அவர்களைத் தமது பரியாய காலத்தில் உடுப்பி க்ஷேத்திரத்துக்கு கிருஷ்ண பரமாத்ம தரிசனத்துக்கு அழைப்பது சம்பிரதாயம். இதை அனுசரித்து ஸ்ரீ பேஜாவர் ஸ்வாமிகளும் சென்ற இரண்டு வாரங்களாகப் பெங்களூர், தார்வார், பெல்காம், பம்பாய், ஹைதராபாத், விஜயவாடா முதலிய இடங்களுக்கெல்லாம் விஜயம் செய்துவிட்டு இம்மாதம் 22ம் தேதி சென்னைக்கு வந்துள்ளார். நான்கு நாட்கள் சென்னையில் எழும்பூர், ராஜா அண்ணாமலை சாலை, தர்மப் பிரகாஷில் தங்குகிறார்.

சென்னையில் அவருக்கு வரவேற்பு அளிக்கவும், அவருடைய காரியங்களைக் கவனிக்கவும் சிறந்த தர்மிஷ்டரும் தாஸப்பிரகாஷ் அதிபருமான திரு சீதாராமராவ் தலைமையில் ஒரு செயற் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர முன்னாள் நீதிபதி திரு டி. எல். வெங்கடராமய்யர் தலைமையில் பல பிரமுகர்கள் அடங்கிய வரவேற்புக் கமிட்டியும் அமைக்கப்பட்டிருக்கிறது. நவம்பர் 24ந் தேதியன்று மாலை 5—30 மணிக்கு ஸ்ரீஸ்வாமிகளுக்கு மக்கள் சார்பில் தர்மப்ரகாஷில் வரவேற்பு அளிக்கப்படுகிறது. அச்சமயம் செட்டிநாட்டு அரசர் ராஜா ஸர் முத்தையா செட்டியார் சென்னை மக்கள் சார்பில் ஸ்வாமிகளுக்குக் காணிக்கை செலுத்தி வந்தனம் தெரிவித்துக் கொள்வார்.


ஸ்ரீ ஸ்வாமிகள் வயதில் இளையவர்களாயினும் கல்வியிலும் பக்தியிலும் ஞானத்திலும் சிறந்தவர்கள். அவர்களுக்கு நல்ல பேச்சாற்றலும் உண்டு. தேஜஸ் பொலியும் அவரது தூய திரு உருவத்தைக் காணும்போதே பக்தி உண்டாகும்.

பக்தகோடிகள் ஸ்ரீ ஸ்வாமிகளைத் தரிசித்து அனுக்கிரஹத்தைப் பெறுவார்களாக.

ஸிக்ஸர் மன்னன் ஸி. கே. நாயுடு

இந்திய கிரிக்கெட் கோஷ்டி விஜயநகரம் மகாராஜாவின் தலைமையில் 1936ம் வருஷம் இங்கிலாந்துக்கு ஆடச் சென்றது. அப்பொழுது மேஜர் ஸி. கே. நாயுடு, மெர்ச்செண்ட், முஷ்டாக் அலி, நிஸார் ஆகிய பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர்களெல்லாம் இந்தக் கோஷ்டியில் ஆடச் சென்றார்கள். அயிக்பார்த்தில் லங்காஷயர் கோஷ்டிக்கு எதிராக நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் விஜயநகர மகாராஜாவுக்குப் பதிலாக மேஜர் ஸி. கே. நாயுடு இந்திய கோஷ்டிக்குக் காப்டனாக இருந்து வெற்றி பெற்றது மாபெரும் சாதனையாகும். ஸி. கே. நாயுடுவின் காப்டன் திறமையினால் இந்திய கோஷ்டியினர் பௌலிங்கிலும், பீல்டிங்கிலும் தலைசிறந்து விளங்கினார்கள். இங்கிலாந்தில் பலமுள்ள லங்காஷயர் கோஷ்டிக்கு எதிராக. இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொண்டு இணைந்து ஆடியதால் இந்த வெற்றியைப் பெற முடிந்தது.

இந்தக் கிரிக்கெட் பந்தயத்தில் ஒரு மறக்க முடியாத நிகழ்ச்சி இந்திய கோஷ்டியின் பண்பினையும் காப்டனின் சிறப்பையும் எடுத்துக்காட்டியது. இங்கிலாந்து கோஷ்டி ஆட்டக்காரர் லிஸ்டர் ஆடிக் கொண்டிருந்தார். மெர்ச்சண்ட் மிகத் தாழ்வாகப் பறந்து வந்த பந்தைப் பிடித்துவிட்டதாக நினைத்து, அம்பயர் 'அவுட்' கொடுக்க லிஸ்டர் மைதானத்தை விட்டு வெளியேறத் தொடங்கினார். இந்தச் சமயத்தில் காப்டன் ஸி.கே. நாயுடுவின் கோஷ்டியைச் சேர்ந்த மெர்ச்சண்ட் அம்பயரிடம் ஓடி வந்து, "''நான் பந்தை 'காட்ச்' பிடித்து விட்டாலும் பந்து தரையைத் தொட்டுவிட்டது!'' என்று சொல்லி இந்திய கிரிக்கெட் கோஷ்டியின் பண்பாட்டை வெளியிட்டார். அடுத்த பந்திலேயே லிஸ்டர் அவுட்டாகி வெளியேறினார். இந்திய கிரிக்கெட் கோஷ்டியின் பண்பினையும், காப்டன் ஸி. கே. நாயுடுவின் திறமையையும் அன்று ஆங்கில கிரிக்கெட் ரஸிகர்கள் வியந்து கொண்டாடினர். மறுபடியும் ஸி. கே. நாயுடு தலைமையில் டெர்பிஷயருக்கு எதிராக நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.



இங்கிலாந்தில் லெஸ்டர்ஷயரில் நடைபெற்ற பந்தயத்தில் ஸி. கே. நாயுடு நாற்பது ரன்கள் எடுத்து வெகு நன்றாக ஆடிக் கொண்டிருந்தார். அவருக்கு உறுதுணையாக எதிரில் நின்று ஆடிக் கொண்டிருந்த முஷ்டாக் அலி அசிரத்தையுடன் ஆடி 'அவுட்'டாகி வெளியேறி விட்டார். ஆட்டம் முடிந்து இந்திய கோஷ்டியினர் பெவிலியனுக்குள் நுழைந்ததும் இந்திய கோஷ்டி மானேஜர் பிரிட்டன் ஜோன்ஸ் முஷ்டாக் அலியைக் கண்டபடி கோபித்துக் கொண்டு விட்டார். இந்தச் சமயத்தில் ஸி. கே. நாயுடு இடையில் புகுந்து, ''அவரைக் கோபித்துக் கொண்டு என்ன பயன்? ஆட்டத்தில் இது சகஜம்தானே?'' என்று சமாதானப்படுத்தினர். ஸி. கே. நாயுடு அநாவசியமாகத் தலையிட்டு ஒழுங்கினைக் கெடுப்பதாக மானேஜர் பிரிட்டன் ஜோன்ஸ் நினைத்துக் கொண்டாராம். அதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்கவும் முன் வந்து விட்டாராம். ஆனால் ஸி. கே. நாயுடு தைரியமாக நின்று தம் சக ஆட்டக்காரரை விட்டுக் கொடுக்காமல் பேசி, அதனால் தமக்கு ஏற்பட்ட அபகீர்த்தியையும் பொறுத்துக் கொண்டார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற ஒரு கிரிக்கெட் பந்தயத்தில் ஆலனின் 'பம்பர்' பந்துவீச்சில் ஸி. கே. நாயுடு நன்றாக அடிபட்டுச் சிறிது நேரம் மூச்சு விடவும் கஷ்டப்பட்டுப் படுத்து விட்டார். இங்கிலாந்து ஆட்டக்காரர்களான ஹாமண்டும், வெரிட்டியும் ஓடி வந்து, அவரது மார்பைத் தடவிக் கொடுத்து வலியைப் போக்க முயன்றனர். இந்திய கோஷ்டியின் பன்னிரண்டாவது ஆட்டக்காரர் டாலாவர் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க, ஸி. கே. நாயுடு அருந்தினர். மறுகணம் தம் அடியையும் மறந்து ஆட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு, ஒரு பவுண்டரி அடித்து ரஸிகர்கள் உள்ளத்தில் தாம் பட்ட அடியை மறக்கச் செய்தார். இந்தக் கிரிக்கெட் ஆட்டத்தில் ஸி. கே. நாயுடு 295 ரன்களுக்கு இந்திய கோஷ்டியின் எண்ணிக்கையை எடுத்துச் சென்று, தாம் 81 ரன்களை எடுத்தார்.

கிரிக்கெட் என்றால் ஸி. கே. நாயுடு என்று சொல்லுமளவுக்குக் கிரிக்கெட்டில் இந்தியாவுக்கும், இந்தியாவில் கிரிக்கெட்டுக்கும் பெருமை தேடித் தந்தவர். '' 'ஸிக்ஸர்' என்றால் ஸி. கே. நாயுடு'' என்று சொல்லுமளவுக்குப் புகழ் பெற்று விட்டார்.

பல இளம் கிரிக்கெட் ஆட்டக்காரர்களை முன்னணிக்குக் கொண்டு வந்த பத்மபூஷண் ஸி. கே. நாயுடு நம்மை விட்டு மறைந்து விட்டாலும் அவரது பெயர் என்றும் கிரிக்கெட் சரித்திரத்தில் பொன் எழுத்தில் திகழும். இந்தியாவுக்கு கிரிக்கெட் உலகில் ஒரு சிறப்பிடம் தேடித் தந்ததோடு, கிரிக்கெட் சரித்திரமே உருவாகக் காரணமாக இருந்த ஒருவரன்றோ அவர்?

அரசியல் சாஸனத்தின் சோதனைக் காலம்

க. சந்தானம்

இந்திய அரசியல் சாஸனம் உருவான பொழுது அதன் போக்கு பிரிட்டிஷ் அரசியலை அனுசரித்திருக்கும் என்று அரசியல் நிர்ணய சபை எதிர்பார்த்தது. இக்காரணத்தால் பல முக்கிய அம்சங்களைப் பற்றி விதிகள் செய்யாமல், பிரிட்டிஷ் சம்பிரதாயங்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று விட்டு விட்டது. அவற்றுள் முக்கியமானவை: மந்திரி சபை அமைத்தல், அதற்கும் சட்டமன்றத்துக்கும் உள்ள சம்பந்தம், ராஷ்டிரபதி அல்லது கவர்னருக்கும் மந்திரி சபைக்குமிடையே உள்ள உறவுகள்.

பிரிட்டிஷ் பொறுப்பாட்சிச் சம்பிரதாயங்கள் மெல்லமெல்ல இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் உருவானவை. முதலில் மன்னருக்கும் பார்லிமெண்டுக்கும் நடுவில் கடும் பூசல்கள், பின்னர் பிரபுக்கள் சபைக்கும் மக்கள் சபைக்கும் அதிகாரப் போட்டி, வாக்குரிமை சிறு கூட்டத்துக்கு முதலில் அளிக்கப்பட்டுப் பின்னர் படிப்படியாக விரிவடைந்த முறை, ஆகிய இவை அனைத்தும் இந்தச் சம்பிரதாயங்கள் முடிவான நிலை அடைவதற்கு முக்கிய கட்டங்களாக இருந்தன. தனியோர் அரசில் இரு கட்சிகள் கொண்ட பார்லிமெண்டுக்கே இவை முற்றிலும் பொருத்தமானவை.

கூட்டு அரசும், பல கட்சிகள் கொண்டதுமான பாரதத்தில் இந்தச் சம்பிரதாயங்களை அமல் செய்வது சுலபமல்ல.

முதல் பதினேழு வருஷங்களில் காங்கிரஸ் கட்சியே மத்திய அரசாங்கத்திலும், பெரும்பாலான ராஜ்யங்களிலும் ஆட்சி புரிந்ததால் இந்தக் குறைகள் அதிகமாகப் புலப்படவில்லை. பிரிட்டிஷ் சம்பிரதாயப்படி ஆட்சி நடைபெறுவதாகக் காணப்பட்டாலும், ஓர் அரைகுறையான ஏககட்சி யதேச்சாதிகாரமே நிலவி வந்தது.

சென்ற பிப்ரவரியில் நடைபெற்ற நான்காம் பொதுத் தேர்தலின் விளைவாக இந்த நிலை அடியோடு மாறிவிட்டது. மொத்தமுள்ள பதினேழு ராஜ்யங்களில் பத்தில் காங்கிரஸ் ஆட்சி மறைந்துவிட்டது. ஆனால் அவற்றுள் சென்னை ஒன்றிலேயே தனிக் கட்சி அரசு நடைபெறுகிறது. ஒரிஸ்ஸாவில் இருகட்சிகள் சேர்ந்து ஒரு ஸ்திரமான கூட்டு ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. மற்றப் பிரதேசங்களில் பல கட்சிகள் சேர்ந்து மந்திரி சபை அமைத்திருக்கின்றன. உத்தரப் பிரதேசம், பீகார், ஹரியானா, பஞ்சாப் முதலிய பிரதேசங்களில் கொள்கைகளில் முற்றிலும் மாறுபட்ட ஜனசங்க, சோஷலிஸ்ட், கம்யூனிஸ்டுக் கட்சிகள் கூட்டணி வகுத்து அரசு நடத்துவது ஒரு புதுமையாகும். வங்காளத்திலும், கேரளத்திலும் இடதுசாரிக் கட்சிகள் ஒன்று சேர்ந்து கூட்டு மந்திரி சபை அமைத்திருந்தாலும், அவற்றுள் தீவிர வேற்றுமைகள் இருப்பது வெளிப்படை. அவை அனைத்தும் காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற விடக் கூடாது என்ற பிடிவாதத்தாலேயே சமாளித்து வருகின்றன.

சமீப காலத்தில் வங்காள மந்திரி சபையின் விசித்திரப் போக்கே நாட்டின் கவனத்தைக் கவர்ந்து, ஜனநாயகத்தில் பற்றுள்ளவர்களின் மனத்தில் பெரும் கவலையை உண்டாக்கி வருகிறது. வெகு காலம் காங்கிரஸில் தொண்டு செய்து பழுத்த தேச பக்தரான ஸ்ரீ அஜாய் முகர்ஜி முதன் மந்திரியாக இருந்தும், வங்காள மந்திரி சபையில் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மந்திரிகளே அதிக அதிகாரம் செய்து வருகின்றனர். அவர்களுடைய ஆதரவின் பேரிலேயே கேரோ என்ற சட்டத்துக்கு விரோதமான அராஜக முறையைத் தொழிலாளர்களும், அவர்களின் சகாக்களும் கையாளத் தொடங்கி அது நாட்டுக்கே பேராபத்தை விளைவிக்கக் கூடியதாக மற்றப் பிரதேசங்களிலும் பரவி வருகிறது. நமது குற்றச் சட்டங்களின்படி முதலாளிகளையும், நிர்வாகஸ்தர்களையும் காரியாலயங்களில் மடக்கி வெளி வர முடியாமல் தடுத்துத் தமது கோரிக்கைகளுக்கு இணங்கச் செய்வது பெரும் குற்றமாகும். இது ஒரு பிரஜையைப் பலாத்காரமாகச் சிறை செய்வது போலாகும். ஆனால் இந்த முறையைக் கையாளும் தொழிலாளிகளுக்கு எதிராகப் போலீஸ் எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று வங்க உள்நாட்டு மந்திரி கட்டளை இட்டார். இது அரசியல் சட்டத்தையே இழிவுபடுத்துவதாகும். இது தவறு என்று உணர்ந்த போதிலும் கம்யூனிஸ்ட்களுடைய ஆதரவை இழந்தால் மந்திரி சபையைக் கலைத்துத் தாமும் பதவி இழக்க வேண்டும் என்பதால் முதன் மந்திரி விருப்பமில்லாமலே உடந்தையாக இருந்து விட்டார்.

முன்னாளில் ராஜாஜி வங்க கவர்னராக இருந்தபொழுது முதன் மந்திரியாகவிருந்த ஸ்ரீ பி. ஸி. கோஷ் கூட்டு மந்திரி சபையிலிருந்து ராஜிநாமா செய்ய, அவருடன் மற்றும் பலர் சேர்ந்திருக்கின்றனர். கூட்டு அரசுக்குச் சட்டசபையில் மெஜாரிட்டி இல்லாதபடியால் மந்திரிசபை உடனே ராஜிநாமா செய்ய வேண்டும் என்று கேட்கின்றனர். ஆனால் மந்திரி சபையிடம் நம்பிக்கையில்லை என்று சட்டசபை தீர்மானிக்கும் வரையில் அரசியல் சட்டப்படி அதுவே நிர்வாகம் செய்யலாம் என்று கூட்டு மந்திரிசபை வாதிக்கின்றது.

ஹரியானா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம் ஆகிய ராஜ்யங்களில் கூட்டு அணிகளிலிருந்து ராஜிநாமாச் செய்வதாகச் சிலர் பயமுறுத்துவதும் அதற்காகப் புதிய மந்திரிகளை நியமிப்பதும், தமது மனச்சாட்சிக்கு விரோதமான காரியங்களை முதன்மந்திரிகள் செய்வதும் சர்வ சாதாரணமாகி விட்டன.

இந்தக் குழப்பத்துக்கெல்லாம் காரணம் நாட்டில் பல கட்சிகள் இருப்பதென்று கூறலாம். இது உண்மையே. ஆனால் காங்கிரஸ் கட்சி, ஒன்று தானே தனி அரசு செலுத்த வேண்டும், இல்லா விட்டால் யாருடனும் கூட்டுச் சேர முடியாது என்று தீர்மானித்ததா

னது நிலைமையை அநாவசியமாகக் கெடுத்து விட்டது. காங்கிரஸ் கட்சி ஒன்றிரண்டு எதிர்க்கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு கூட்டாக நடத்துவது என்ற கொள்கையை ஏற்றிருந்தால் பல ராஜ்யங்களில் ஒரிஸ்ஸா போல் நிலையான மந்திரி சபைகள் ஏற்பட்டிருக்கும். மத்தியப் பிரதேசத்தில் நடந்தது போல் காங்கிரஸ் கட்சியிலிருந்து முறித்துக் கொண்டு போவோரின் எண்ணிக்கையும் குறைந்திருக்கும்.

கூட்டணிகளை முறியடித்து, சில ஆண்டுகளுக்கு ராஷ்டிரபதி ஆட்சி ஏற்படுத்தி முடிவில் மீண்டும் காங்கிரஸ் தனிக் கட்சியாக ஆட்சி செய்ய வேண்டும் என்று அக்கட்சியின் சில தலைவர்கள் விரும்புகின்றனர். இது மூடத்தனம் என்று கேரள மக்கள் நிரூபித்து விட்டனர். கேரளத்தில் ராஷ்டிரபதி ஆட்சிக்கு வழி செய்த காங்கிரஸ் கட்சி இப்போது அந்த ராஜ்யத்தில் அநேகமாக மறைந்துவிட்டது. இதை மறப்பதற்கில்லை.

இரண்டு பெரும் கட்சிகள் இருக்கும் பிரதேசங்களில் கவர்னர்கள் எளிதில் பிரிட்டிஷ் சம்பிரதாயங்களை அனுசரித்து, ஒரு கௌரவ ராஜ்யாதிபதியாக இருந்துவிட முடியும். ஆனால் சட்டசபை பல சில்லறைக் கட்சிகளாகப் பிரிந்து, அடிக்கடி அக்கட்சி அங்கத்தினர்களின் தொகை கூடியும், குறைந்தும் வரும்பொழுது இந்தச் சம்பிரதாயங்களை அனுசரிப்பது சுலபமல்ல. நிலைமையின் பலவந்தத்தால் கவர்னர் ஒரு முக்கிய அரசியல் சூத்திரதாரியாக மாறி விடுகிறார். ஆடு மாடுகளைப் போல் ஆட்களை எண்ணி மந்திரி சபை அமைப்பதோ, முதன் மந்திரியை நியமிப்பதோ சரியல்ல. பிரதேசத்தின் நலத்தைப் பாதுகாப்பதும், அரசியல் சாஸனத்தின் உட்கருத்தை அமல் செய்வதும் கவர்னருடைய கடமைகளாகின்றன. காங்கிரஸ் ஆட்சி செய்யும் மத்திய அரசாங்கத்தின் புத்திமதியை கவர்னர் கோருவது நியாயமாகாது. ராஷ்டிரபதியை அவர் கலந்து ஆலோசிக்கலாம். சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளைத் தேடலாம். முடிவில் தமது மனச்சாட்சிக்கேற்றவாறே முடிவு செய்ய வேண்டும். மத்தியப் பிரதேசத்தில் முதன் மந்திரிக்காகச் சட்டசபையை ஒத்தி வைத்தது வெளித் தோற்றத்துக்கு பிரிட்டிஷ் சம்பிரதாயமாக இருப்பினும், அது தகாத செயல். கவர்னர் சட்டசபைக்கும் மந்திரிசபைக்கும் நடுவில் புகுந்து ஒரு பக்கத்துக்கு உதவி செய்வது ஜனநாயகத்துக்கு ஒவ்வாது.

வங்காளத்தில் உடனே சட்டசபையைக் கூட்டிக் கட்சிகளின் பலத்தைச் சோதித்து விட வேண்டும் என்ற பிரச்னை கிளம்பியிருக்கிறது. சாதாரணமாக அவசியம் இருக்கும் பொழுது மந்திரி சபையின் கோரிக்கைப்படி கவர்னர் சட்டம் செய்யவோ, பண விவகாரங்களுக்காகவோ சட்டசபையைக் கூட்ட வேண்டும். ஒரு கூட்டம் முடிந்து ஆறு மாதங்களுக்குள் மற்றொரு கூட்டம் கூடியாக வேண்டும். இந்த எல்லைக்குள் சட்டசபை கூட்டுவதை மந்திரிசபை விரும்பாவிட்டாலும், கூட்டுவது கவர்னரின் கடமையாகும். வருஷாந்தர வரவு செலவுத் திட்டத்துக்காகவும் சபையைக் கூட்ட வேண்டும். கட்சிச் சண்டைக்காக அதைக் கூட்டவேண்டிய அவசியம் இல்லை. ஆள்கிற கட்சி எதிர்க்கட்சிகளை அநியாயமாகத் துன்புறுத்தினாலோ, தனது ஆட்சிக் காலம் முடிந்துவிடும் என்ற பயத்தால் ராஜ்யத்துக்குத் தீங்கு விளைவிக்கும் முறைகளைக் கையாண்டாலோ கவர்னர் சட்டசபையைக் கூட்டலாம்.

இவ்விதம் பல சிக்கலான பிரச்னைகளில் பிரிட்டிஷ் சம்பிரதாயங்கள் பொருந்த மாட்டா. புதிய சம்பிரதாயங்களை நடுநிலைமை வகித்து கவர்னர்கள் உருவாக்க வேண்டும். நமது அரசியல் சாஸனத்துக்கு இது ஒரு பெரும் சோதனைக்காலம். அடுத்த பத்தாண்டுகளுக்கு அதைத் திறமையுடன் சமாளித்து விட்டால், மூன்று நான்கு பெரும் கட்சிகள் சில்லறைக் கட்சிகளை விழுங்கிவிட்டு அமைதியுடன் பொறுப்பாட்சியை நன்கு நடத்த வலிமை பெற்றுவிடும்.

பஞ்சாமிர்தம்

'கொக்கி'

யூனியன் மந்திரிசபையில் இலாகாப் பொறுப்பு இல்லாதிருந்து வந்த ஸ்ரீ சத்ய நாராயண சின்ஹாவுக்கு இப்போது வீட்டு வசதி, சுகாதார இலாகாக்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன! —செய்தி

இனி அவர் சுகமாக வீட்டு வசதியுடன் இருந்து கொண்டிருக்கலாம்!

ஃ ஃ ஃ

''வர்ஜீனியா மாதா கோயிலில், ஜனாதிபதி ஜான்ஸனின் வியட்நாம் கொள்கையை அவர் முன்னிலையிலேயே பாதிரியார் கண்டித்துப் பேசியபோது, ஜான்ஸன் அதை அசைவற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார். — செய்தி

வியட்நாம் விஷயத்தில் ஜான்ஸனின் அசைந்து கொடுக்காத உறுதிதான் பிரசித்தமாயிற்றே!

உலக அழகிகள் போட்டியை இம்முறை இந்தியா பகிஷ்கரித்துவிடப் போகிறது! — செய்தி

''அழகுதான் போ! இந்தப் போட்டிக்குத் திருஷ்டி பட்டு விட்டது!'' என்கிறாள் ஒரு பாட்டி.

ஃ ஃ ஃ

''திருமணங்களில் அளிக்கப்படும் பரிசுப் பொருட்களை யாரும் காட்சியாக வைக்கக் கூடாது என்று பாகிஸ்தான் சர்க்கார் உத்தரவிட்டுள்ளது.'' - பாகிஸ்தான் செய்தி


யானை, குதிரைகளைப் பரிசளித்தால் அவற்றை எப்படி மூடி வைக்க முடியும்?

ஃ ஃ ஃ

''கடைசிவரையில் நான் காங்கிரஸிலேயே இருந்து வருவேன்'' — மொரார்ஜி தேசாய்

அதுவரையில் காங்கிரஸ் இருந்து வர வேண்டுமே!





பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு

பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்காரச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414. மதராஸ்-5
தந்தி: 'EVERMANS' போன்: 85834

மதராஸ் சிட்பண்டு 1961 ஆக்ட்படி இழ்க்காணும் சிட்டுகள் நடத்தப்படுகின்றன
(மதராஸ் ஆக்ட் நெ. 24 of 1961)

25 மாதங்கள் — குறுகிய காலச் சிட்டுகள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சிட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சிட்டுத் தொகை
A	ரூ. 200	ரூ. 5000	D	ரூ. 25	ரூ. 625
B	ரூ. 100	ரூ. 2500	E	ரூ. 20	ரூ. 500
C	ரூ. 50	ரூ. 1250	F	ரூ. 15	ரூ. 375

40 மாதங்கள் — நீண்ட காலச் சிட்டுகள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சிட்டுத் தொகை
LTA	ரூ. 500	ரூ. 20000
LTB	ரூ. 250	ரூ. 10000
LTC	ரூ. 125	ரூ. 5000

சேரும் குரூப்பை விவரித்து எங்கள் விதிகளுக்கு எழுதவும்

கிளைகள்: புது டில்லி - பம்பாய் - பெங்களூர் - கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

VSK - BBC - 1000 TM - K





★ பம்பாய் ஷண்முகானந்தா பைன் ஆர்ட்ஸ் சங்கீத சபையினர் பதினெட்டு நாட்களுக்குச் சங்கீத, நாட்டிய நாடக விழா ஒன்றை மிகச் சிறப்பாக நடத்தி பம்பாய் மக்களைக் குதூகலத்திலாழ்த்தியிருக்கிறார்கள். அவ்விழாவில் பத்மபூஷண் ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரிக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார் திரு எஸ். கே. பாட்டீல் அவர்கள்.

விழாவில் தமது தலைமை உரையைத் திரு எஸ். பாலசந்தர் வாசிக்கிறார்.

★ தென்சென்னை ரோட்டரி சங்கத்தினரின் முயற்சியால் பல்லாவரம் தாலூகாவைச் சேர்ந்த கவுல் பஜார் கிராமத்தில் மின்னொளி ஏற்று விழா அமைச்சர் திரு முத்துசாமி தலைமையில் சமீபத்தில் நடைபெற்றது.


★ வனவிலங்குகள் வாரம் சென்ற வாரம் சென்னையில் நடந்தது. இதை முன்னிட்டு வனவிலங்குகளின் ஓவியப் புகைப்படக் காட்சியை அமைச்சர் திரு நெடுஞ்செழியன் திறந்து வைத்தார்.







★ குஜராத்தியர்களின் புத்தாண்டு விழா இம்மாதம் 3–ம் தேதி தமிழக முதல்வரின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அண்ணாவுடன் செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்துவையும் குஜராத்தி மண்டலின் தலைவர் திரு ஆர். எம். தவே அவர்களையும் காணலாம்.



அமெரிக்காவில் ஒரு ராஜ்காட்

இந்தியத் துணைக் கண்டத்துக்கு விஜயம் செய்யும் எல்லா வெளிநாட்டுப் பிரமுகர்களும் எதை மறந்தாலும் ஒரே ஒரு காரியத்தை மட்டும் மறப்பதே இல்லை. அதுதான் இந்தியாவின் தேச பிதாவான அண்ணல் காந்தியடிகளின் சமாதி இருக்கும் இடமான ராஜ்காட்டுக்குச் சென்று மலர் அஞ்சலி செய்வது.

இதே போல் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஒரு புகழ் பெற்ற கல்லறை உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு விஜயம் செய்யும் பல நாட்டுத் தலைவர்களும் அக்கல்லறையின்மீது மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தத் தவறுவதே இல்லை. அதுதான் ''ஊர் பேர் தெரியாத வீரனின் கல்லறை.'' (Tomb of the Unknown Soldier).

சுமார் நானூற்றிருபது ஏக்கர் நிலப் பரப்பில், அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனில், போடாமாக் நதியின் குறுக்கே அமைந்துள்ள வர்ஜினியா கரையில்தான் இந்த விசித்திரக் கல்லறை உள்ளது. கல்லறை இருக்கும் இடத்துக்குப் பெயர் ஆர்லிங்டன் என்பது.

ஆர்லிங்டனில் இதுவரை மொத்தம் ஒரு லட்சத்து இருபத்தோராயிரம் மனிதர்கள் புதைக்கப் பட்டுள்ளனர். உயிர் போன பின் இங்கே இடம் பெற யாராவது விழைந்தால் அவர்கள் அமெரிக்க இராணுவ வீரர்களாக இருக்க வேண்டும். அல்லது அமெரிக்கக் குடிமக்களில் சிறந்தவராக, புகழ் பெற்றவராக இருத்தல் வேண்டும். அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் ஹோவார்ட் டாஃப்ட், தலைமை நீதிபதி ஆலிவர் வெண்டால் ஹோம்ஸ், முதல் உலகப் பெரும் போரில் பங்கெடுத்துப் புகழ்பெற்ற தளபதி பெர்ஷிங், இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டுப் பின்னர் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த தளபதி ஜார்ஜ் மார்ஷல் முதலிய பிரபல அமெரிக்கர்களின் கல்லறைகளும் ஆர்லிங்டனில் உள்ளன.

ஆனால் இதில் உள்ள எல்லாக் கல்லறைகளையும் விட சர்வதேசப் புகழ் பெற்றது இங்குள்ள 'பேர் தெரியாத வீரனின்' கல்லறைதான். முதல் உலகப் பெரும் போரிலே பங்கேற்று பாரிஸ் நகரிலே மாண்ட ஊர் பேர் இனம் தெரியாத ஓர் அமெரிக்க வீரனின் உடல் 1921ம் ஆண்டு நவம்பர் 11ம் நாளன்று பாரிஸிலிருந்து அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்டு இங்கு புதைக்கப்பட்டது.

நவம்பர் 23 கென்னடியின் மறைவு நாள்



அம்மாவீரனின் திருவுடலைக் கொண்ட கல்லறைதான் 'பேர் தெரியாத வீரனின்' கல்லறை. ஒரே சலவைக் கல்லில் அமையப் பெற்ற அச்சமாதியின் மீது, ''ஆண்டவனுக்கு மட்டுமே தெரிந்த ஓர் அமெரிக்க வீரன் இங்கு இருக்கிறான்'' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இவ்வீரனைத் தொடர்ந்து, 1958ம் ஆண்டில் கொரியாப் போரில் இறந்த ஒரு பேர் தெரியாத அமெரிக்க வீரனின் சடலமும்


முன்பக்கம் : அமெரிக்க ஜனாதிபதி கென்னடிக்கு இறுதி மரியாதை நடக்கிறது.

இந்தப் பக்கம் : 1. கென்னடி சமாதி முன்பு கென்னடி குடும்பத்தினரும் பிரமுகர்களும்.

2. பேர் தெரியாத வீரனின் கல்லறை.

இரண்டாம் உலகப் பெரும் போரில் இறந்த ஓர் அமெரிக்க வீரனின் உடலும், அந்த நாளில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஐசனோவரின் முன்னிலையில் இங்கு ராணுவ மரியாதைகளுடன் புதைக்கப்பட்டது.

இம்மூன்று வீரர்களின் சடலங்கள் மட்டுமின்றிப் போர்களில் உயிர்துறந்து வீர சொர்க்கம் எய்திய பல அமெரிக்க வீரர்களின் சடலங்களும் இங்கு புதைக்கப் பட்டுள்ளன. காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஜான் பிட்ஜெரல்ட் கென்னடியின் புனித உடலும் இங்குதான் புதைக்கப்பட்டுள்ளது. 1963ம் ஆண்டில் நவம்பர் 25ம் தேதி நாளன்று சமாதானத்துக்காகப் பாடுபட்ட அந்தத் தெய்வத் திருமகனின் திருவுடல் பல நாட்டுத் தலைவர்களின் முன்னிலையில் சகல ராணுவ மரியாதைகளுடன் புதைக்கப்பட்டது.



அண்ணல் காந்தியடிகளின் இறுதி இருப்பிடமான ராஜகட்டத்தைப் போல் ஆர்லிங்டனும் இன்று புகழ் பெற்று விட்டது. ஆர்லிங்டனில் கென்னடியின் கல்லறை மீது வைக்கப் பட்டிருக்கும் 'அழியா ஜோதி' என்றென்றும் அவர் பேரைச் சொல்லிக் கொண்டேயிருக்கும்.

-அ. இராமதுரை

சினிமா நட்சத்திரம் **பத்மினி** கூறுகிறார்:

"என் மேனியழகுக்கு ஆதாரப் பராமரிப்பு : லக்ஸ்!"



உங்கள் மேனியழகும் முக்கியமானதே...
அதே பராமரிப்புக்கு உரியது: ஆம்,
தூய, மெல்லினம் லக்ஸ் டாய்லெட் சோப்
பைங்கொடி பத்மினி கூறுகிறார் :
"நாலு வண்ணங்களிலும் வெண்மையிலும்
நம்மை வந்தடையும் சோப் லக்ஸ் ஒன்று-
-தான். நறுமணமோ இன்பமயம்"




லக்ஸ் டாய்லெட் சோப்
சினிமா நட்சத்திரங்களின்
அழகுசாதன சோப்

லின்டாஸ்-LTS. 220-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்ப

யாரோ இவர் யாரோ?



சோ

அத்தியாயம் 17

முத்துவின் தகப்பனார் தணிகாசலம் தன் புத்திர சிகாமணியைக் காணப்போகும் ஆவலோடு ராஜரத்தினம் வீட்டின் 'காம்பவுண்ட்' உள்ளே வந்து கொண்டிருந்தார். இவர் வருவதை முதலில் பார்த்தவர் ராஜரத்தினம்தான். தணிகாசலத்தின் உடைகளைப் பார்த்த ராஜரத்தினம், ''இது என்ன? ஏதோ ஒரு நாட்டுப்புறம் நம்ம வீட்டுக்குள்ளே வருது?'' என்று கூற முத்துவும் திரும்பிப் பார்த்தான். முத்துவின் இருதயத் துடிப்பு சற்றே நின்றது. இதற்குள் ராஜரத்தினம், அந்த நாட்டுப்புறத்தை வாசலிலேயே தடுத்து நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தோடு அவரை நோக்கிப் புறப்பட்டார். முத்துவின் இருதயம் இப்போது சற்று ஓய்வு எடுத்ததற்கு ஈடு செய்வது போல் படுவேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. என்ன செய்வது என்று புரியாமல் விழித்த முத்து, தணிகாசலத்தின் கண்களில் பட்டால் இப்போது பெரிய குழப்பமாகிவிடும் என்று பயந்து மாடியை நோக்கிப் பாய்ந்தான்.

கதவின் அருகில் தணிகாசலத்தைத் தடுத்து நிறுத்தினார் ராஜரத்தினம். ''யாருய்யா நீ?'' என்றார் ராஜரத்தினம்.

இந்த அவமரியாதையைப் பொறுக்க முடியாத தணிகாசலம், ''நீ யாருய்யா?'' என்றார் ராஜரத்தினத்தைப் பார்த்து.

''நான்தான் ராஜரத்தினம்! இந்த வீட்டுச் சொந்தக்காரன். கேட்காமல் கொள்ளாமல் உள்ளே வந்தது போதாதுன்னு என்னையே பார்த்து யாருன்னு கேட்கிறியா?''

''மன்னிச்சுடுங்க. விவரம் தெரியாமல் பேசிப்புட்டேன். நம்ம பயல் இங்கிட்டுத்தானே இருக்கிறான்? பார்த்துப்பிட்டுப் போவோம்னு வந்தேன்!''

''என்னய்யா உளர்றே? யாரு உன் பையன்? இந்த மாதிரி பேச்சை ஆரம்பிச்சுக் கடைசியிலே பிச்சை கேட்கலாம்னு பார்க்கிறியா? இந்தப் பிச்சைக்காரங்க தொந்தரவு பெரிய தொந்தரவாய்ப் போச்சு!''

''பிச்சையா? என்னய்யா ஒட்டறீக? என் மவன் முத்து இங்கே வேலையிலே இல்லே?''

''இது என்னய்யா பெரிய எழவாய்ப் போச்சு! இங்கே அந்த மாதிரி யாரும் கிடையாது!''

''அவன் அப்படித்தான் எழுதியிருக்கிறான்? எங்கிட்டேயே பொய் சொல்றீகளா?''

ராஜரத்தினம் தணிகாசலத்தை முறைத்துப் பார்த்து, ''பொய்கிய்னு பல்லைப் பேத்துப்பிடுவேன்'' என்றார்.

''உன் முவரக்கட்டையிலே ஓர் இடி இடிச்சேன்னு முழிபிதுங்கி வெளியிலே விழுந்துபுடும். உசாரா இரு!''

''சுத்தக் காட்டானாக இருக்கியே!''

''உன்னோட எனக்கென்னய்யா பேச்சு? இந்த மாதிரி மரியாதை தெரியாத இடத்துலே என் மவன் வேலைக்குச் சேர்ந்ததே தப்பு. கூப்பிடுய்யா. அவனை இழுத்துக்கிட்டுப் போறேன்'' என்று வீட்டினுள் நுழையப் பார்த்தார் தணிகாசலம். ''டேய், பட்டிக்காட்டான். காலை எடுத்து உள்ளே வெச்சா வெட்டிப்புடுவேன். உனக்கென்ன பைத்தியமா? ஏன் இப்படி முன்னே பின்னே தெரியாத இடத்திலே வந்து கழுத்தறுக்கிறே?''

''சே! போ!'' என்று கூறித் தணிகாசலம் ராஜரத்தினத்தைத் தள்ளி விட்டார். தலைகுப்புற விழுந்தார் ராஜ ரத்தினம். மாடிப் படியில் ஒளிந்து நின்று கவனித்துக் கொண்டிருந்த முத்து, தான் இனியும் குறுக்கிடாமல் இருந்தால் விபரீதமாகி விடும் என்பதை உணர்ந்தான். வாசற் பக்கம் விரைந்து வந்த முத்துவைப் பார்த்து ராஜரத்தினம், ''டாக்டர்! டாக்டர்! இந்த அக்கிரமத்தைப் பாருங்க'' என்று அலறினார்.

தணிகாசலத்துக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. ''இவனையா டாக்டர்னு சொன்னீங்க?'' என்றார்.

அவருடன் பேசக்கூட விரும்பாத ராஜரத்தினம், முத்துவிடம் ''டாக்டர்! இந்த நாட்டுப்புறத்தான் கலாட்டா செய்யறான். போலீசுக்குப் 'போன்' பண்ணுங்க'' என்றார்.

முத்து, ''கொஞ்சம் இருங்க, சார்! விசாரிப்போம்'' என்றான்.

தணிகாசலம் முத்துவைப் பார்த்துத் திகைத்து நின்றார். ''எலே, முத்து! என்னடா இது? என்னடா இது உன் தலையிலே?'' என்றார்.

ராஜரத்தினம், ''இவரா உங்க மகன் முத்து?'' என்று கேட்டார் தணிகாசலத்தைப் பார்த்து.



''நீ பேசாமல் இரு, ஐயா!'' என்று தணிகாசலம் அவரை அடக்கிவிட்டு, முத்துவை மீண்டும் பார்த்தார். ''என்னடா இது உன் தலையிலே ?''

''கிராப்பு!'' என்றான் முத்து.

''எலே! எலே ! கிராப்பாடா? எலே ! குடுமி என்னடா ஆச்சு ?'' உள்ளம் பதறினார் தணிகாசலம்.

''ஸார், நீங்க யாரு?'' என்றான் முத்து.

'' என்னையாடா யாருன்னு கேக்கறே ?''

''அவன்கிட்டே யாருன்னு கேக்காதீங்க, டாக்டர் ! அவனுக்குக் கோபம் வந்துவிடும்!'' என்று எச்சரித்தார் ராஜரத்தினம்.

''ஸார் ! நீங்க யாருன்னு எனக்குத் தெரியலே. என் பேர் முத்து இல்லே. நான் டாக்டர் மேகநாதன் '' என்று தைரியமாகக் கூறினான் முத்து. இப்போது உண்மையை ஒப்புக் கொண்டால், இத்தனை நாட்களாகப் பட்ட கஷ்டமெல்லாம் வீணாகி விடும் என்ற எண்ணமும் ரவியின் சகவாசமும் சேர்ந்து அவனுக்கு இப்போது ஓர் அசாதாரணத் துணிச்சலைத் தந்தன.

''டேய்! எலே! டேய்! எலே !'' வேறொன்றும் தணிகாசலத்தினால் பேச முடியவில்லை. தன் மகனா இப்படிப் பேசுகிறான் என்று திகைத்துப் போனார் அவர். 'குடுமியோடு சேர்ந்து நேர்மையும் போய் விட்டதா?' என்று எண்ணிப் பிரமித்துப் போய் நின்றார்.

முத்து தணிகாசலத்தைப் பார்த்து. ''அடிக்கடி எலே எலேன்னாதீங்க. உங்க பையன் வேணும்னா எலேயா இருக்கலாம். நான் எலே இல்லே!'' என்றான்.

''எலே! எலே!''

முத்து ராஜரத்தினத்தைத் தனியே அழைத்தான். அவர் காதில் ரகசியமாக, ''ஸார் ! இது ஒரு சித்தப் பிரமை கேஸுன்னு நினைக்கிறேன். பையனை இழந்திருக்கார். யாரைப் பார்த்தாலும் தன் பையன் மாதிரி தெரியறது அவருக்கு. பாவம் !.... இவரை நைஸாகப் பேசி, எப்படிச் சமாதானப்படுத்தி அனுப்பறேன், பாருங்க, இப்ப!'' என்று கூறிவிட்டுத்



தணிகாசலத்தை நெருங்கினன். அவர் தலையைத் தடவினன் முத்து.

''அப்பா! நான்தான் உங்க மகன் முத்து. குடுமியை வெட்டிக் கிராப் வெச்சுக்கிட்டிருக்கிறேன். இங்கே நிலைமை சரியாயில்லே. அதனலே உங்க கிட்டே உங்க மகன் இல்லேன்னு பொய் சொன்னேன். என்னை மன்னிச்சுடுங்க. நான் 'எலே'தான். நீங்க வீட்டிலே போய் இருங்க. நான் வந்து எல்லாம் விவரமாச் சொல்கிறேன்'' என்ருன்.

தணிகாசலத்துக்குப் போன உயிர் திரும்பி வந்தது. ராஜரத்தினம் முத்துவின் திறமையைப் பார்த்து வியந்தபடி நின்ருர். ''அஹா! எவ்வளவு கெட்டிக்கார டாக்டர் இவர்! சொந்த மகன் போல் நடித்து இந்தப் பைத்தியத்தைச் சமாதானப்படுத்தி அனுப்புகிருர்!'' என்று மனத்துக்குள் முத்துவைப் பாராட்டிக் கொண்டார்.

''எலே!'' என்ருர் தணிகாசலம் அன்பு சொட்ட.

''அப்பா!'' என்ருன் முத்து.

ராஜரத்தினத்துக்கு மகிழ்ச்சி பொங்கியது. அவரால் இந்த நாடகத்தைப் பார்த்து ரஸிக்காமல் இருக்க முடியவில்லை. ''சபாஷ், டாக்டர்! சித்தப் பிரமை கேஸுங்ககிட்டே இப்படித்தான் நடந்துக்கணும்'' என்று உரக்கக் கூறிவிட்டார்.

தணிகாசலம் ராஜரத்தினத்தை நெருங்கினர்.

''யாருக்குடா, சித்தப் பிரமை! ஏண்டா, எலே!'' என்று ராஜரத்தினத்தை மிரட்டினர். ராஜரத்தினம் சிறிதும் பயப்படவில்லை. அவருக்குத்தான் இப்போது இந்தப் பைத்தியத்தைச் சமாளிக்கும் வழி தெரிந்துவிட்டதே! மீண்டும் தணிகாசலம், ''யாருக்குடா, சித்தப் பிரமை! வெட்டிப்புடுவேன், வெட்டி!'' என்று மிரட்டினர்.

உடனே ராஜரத்தினம் சாமர்த்தியமாக, முத்துவின் வழியைக் கடைப்பிடித்தார். ''அப்பா! நான் சும்மா சொன்னேன். நான்தான் உங்க மகன் முத்து! நீங்கதான் என் அப்பா!'' இவ்வாறு கூறிவிட்டுப் பெருமையோடு ''எப்படி?'' என்று கேட்கிறுற்போல் முத்துவைப் பார்த்தார் ராஜரத்தினம்.

தணிகாசலத்துக்கு ராஜரத்தினத்தின் பேச்சு புரியவில்லை.

''என்னய்யா சொல்லறே?'' என்ருர்.

முதல் முறையாகத் தணிகாசலம் சாந்தமாகப் பேசுவதைப் பார்த்த ராஜரத்தினம் தான் முத்துவைப் பின்பற்றி மகன் போல் நடித்தது ரொம்பவும் சரியான காரியம் என்று நினைத்து மகிழ்ந்தார். அதே மகிழ்ச்சியில் மேலும் தொடர்ந்தார்: ''அப்பா! நான் குடுமியை வெட்டிக் கிராப் வெச்சுக்கிட்டேன். நான்தான் 'எலே!' நீங்கதான் அப்பா!'' என்று அன்பொழுகக் கூறினர்.

தணிகாசலம் ராஜரத்தினத்தைப் பரிவோடு பார்த்தார். ''இந்த ராஜரத்தினத்துக்கு இவ்வளவு பெரிய செல்வம் இருந்து என்ன பயன்! இப்படிப் பிதற்றுமளவுக்குப் புத்தி பேதலித்திருக்கிறதே!'' என்று எண்ணி வேதனைப்பட்டார்.

தணிகாசலம் முகத்தில் தெரிந்த கனிவு ராஜரத்தினத்துக்கு மேலும் உற்சாகமூட்டியது. தொடர்ந்தார்:

''நான்தான் எலே. இங்கே நிலைமை சரியாயில்லே. நீங்க வீட்டுக்குப் போங்கப்பா! நான் எல்லாம் வந்து விவரமாகச் சொல்றேன், அப்பா!'' என்று குழைந்தார்.

தணிகாசலம் முத்துவைப் பார்த்தார். ''எலே, நான் இவரைப் புரிஞ்சுக்கிடாமல் ரொம்பக் கோவமாப் பேசிப்புட்டேன். பாவம்! இப்பத்தான் விஷயம் புரியறது! சாக்கிரதையாக இருக்கச் சொல்லு! நான் வரேன். வீட்டுலே போய் இருக்கிறேன்'' என்று ராஜரத்தினத்தின் மீது ஏற்பட்ட அநுதாபத்தை வெளியிட்டார்.

தணிகாசலத்தின் எண்ண ஓட்டங்களை அறியாத ராஜரத்தினம் வெற்றிப் புன்னகை புரிந்தார். தணிகாசலம் புறப்பட்டார். ராஜரத்தினத்தை நெருங்கி, ''வெளியிலே ரொம்ப அலையாதே. உன் உடம்புக்கு ஒத்துக்காது. வெய்யில் காலம் நான் கிராமத்துக்குப் போய் எலுமிச்சை அனுப்பறேன். உடம்புக்கு நல்லது'' என்று பரிவோடு கூறினர்.

அந்த அன்பிலே கட்டுண்டாற்போல் நடிக்கத் தீர்மானித்த ராஜரத்தினம், ''சரி, அப்பா! ஒண்ணும் மறக்காதிங்க. நான்தான் எலே!'' என்று கூறினர்.

''விதி யாரை விட்டுது!'' என்று கூறி வெளியேறினர் தணிகாசலம்.

ராஜரத்தினம் முத்துவைப் பார்த்து, ''எப்படி டாக்டர்! உங்களை மாதிரியே நானும் அவர் மகன் போலவே நடிச்சுச் சமாதானப் படுத்தினேன், பார்த்தீங்களா?'' என்ருர் பெருமிதத்தோடு.

''ரொம்பப் பிரமாதம் ஸார்!'' என்ருன் முத்து. அவனுடைய கவலையெல்லாம் வீட்டுக்குப் போய்த் தன்


ஆஷா
மங்கையர்களின் அழகை
வெளிக் கொண்டு வருகிறது
ஆஷா ஸ்னோவும், பவுடரும் உங்
களுடைய சருமத்தை மிருதுவா
கவும் லாவண்ய மிக்கதாகவும்
ஆகச் செய்கின்றன.
கருமை நிறைந்த ஆஷா கண்
மை கண்களுக்கு குளுமையை
யும் இதத்தையும் தருகிறது.
மேலும், ஆஷா குங்குமத்தை
இட்டுக் கொள்ளுங்கள். இது
மூன்று வண்ணங்களில் கிடைக்
கிறது, அதாவன—ஃப்ளேம் ரெட்
(தீச்சிவப்பு), ப்ரைட் ரெட்
(பளிச்சென்று துலங்கும்
சிவப்பு), மற்றும் கருப்பு.
Asha
முகப் பவுடர் • ஸ்னோ • கண் மை • குங்குமம்
आशा
कुमकुम

தந்தையை எப்படிச் சமாதானப் படுத்துவது என்பதிலேயே இருந்தது.

ஃ ஃ ஃ

ரவியின் வீட்டை வந்தடைந்த தணிகாசலம் வீடு பூட்டியிருந்தபடியால் தாழ்வாரத்தில் அமர்ந்தார். ராஜரத்தினம் வீட்டில் நடந்த நிகழ்ச்சிகளை மனத்தில் ஒரு முறை அலசிப் பார்த்தார். இந்த ராஜரத்தினம் ஒரு பைத்தியம் என்பது அவருக்கு நிதரிசனமாகத் தெரிந்தது. 'அவரிடத்தில் முத்து என்ன வேலை பார்க்கிறான்? அவர் ஏன் அவனை டாக்டர் என்கிறார்? பைத்தியம்தானே! டாக்டர் என்றும் சொல்வார்! வக்கீல் என்றும் சொல்வார்! பைத்தியத்துக்கு இதெல்லாம் ஒரு கணக்கா என்ன? ''அப்பா! அப்பா!'' என்று அழைத்தானே! அந்த அளவுக்கு முற்றியிருக்கிறது. பாவம்! ஆமாம், இந்த முத்து ஏன் தன் மகன் என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளாமல் சுற்றி வளைத்தான்! ராஜரத்தினத்தின் சிநேகத்தால் வந்த வினையா! 'இப்படிப் பலப் பல கேள்விகள் அவர் மனத்தில் எழுந்தன. 'சரி! முத்து வரட்டும், எல்லாவற்றையும் விசாரித்துக் கொள்வோம்' என்று தீர்மானித்தார். 'பாவிப் பயல் குடுமியை வெட்டிப்புட்டானே' என்றும் நொந்து கொண்டார். நாகரிகத் தேவதையின் அருளைப் பெறுவதற்காகக் குடுமியைத் தியாகம் செய்த முத்துவின் செயலுக்குப் பரிகாரமாக, அவனைத் திருப்பதிக்கு அழைத்துச் சென்று வேங்கடாசலபதியின் அருளைப் பெறக் கிராப்பைத் தியாகம் செய்து மொட்டையடிப்பதாக மனமார வேண்டிக் கொண்டார். திருப்பதிக்குச் செல்லுமுன், எப்படியாவது ஏதாவது ஒரு பெரிய மனிதர் சிபாரிசுக் கடிதத்தைப் பெற்றுச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார். சிபாரிசு இல்லாமல் சென்ற முறைகளில், திருப்பதியில் அவர் பட்ட கஷ்டம் அவருக்கல்லவா தெரியும்! ஏழுமலைகள் ஏறிச் செல்லும் பக்தர்களுக்குக் கிடைக்காத தரிசனம், காரில் வந்து இறங்கும் கனதனவான்களுக்கல்லவா கிடைக்கிறது! ஒரு வேளை காரணம் இப்படியிருக்கலாம். பக்தர்கள் தன்னுடைய ஸ்தலத்தில் அதிக நேரம் தங்குவதை விரும்பி ஏழுமலையான் அவர்களை எவ்வளவு முடியுமோ, அவ்வளவு நேரம் காக்க வைத்துத் தரிசனமளிக்கிறார். பெரிய மனிதர்கள் அந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் அதிக நேரம் தங்கினால் அந்த க்ஷேத்திரமே கெட்டுவிடுமே என்று பயந்து, வந்தவுடன் தரிசனம் அளித்து அவர்களை உடனே திருப்பி அனுப்பிவிடுகிறார் வேங்கடாசலபதி! அப்படியிருக்கலாமல்லவா?

இந்தச் சமயத்தில் ரவியைத் தேடி அடிக்கடி அங்கு வரும் பட்டாணியன் அங்கு வந்து சேர்ந்தான். தாழ்வாரத்தில் தரையின்மீது அமர்ந்திருந்த தணிகாசலத்தைப் பார்த்தான். அவரை நெருங்கி, ''நீ இங்கே புது வேலைக்காரனா?'' என்றான்.

தணிகாசலத்துக்கு அவன் கழுத்தை அப்படியே நெரித்துப் போட்டுவிட

மகிழ்ச்சி வேண்டுமா? பெண்ணாய்ப் பிறவுங்கள்!

'பெண் ஜன்மமே வேண்டாம்; அது துன்பப் பிறவி' என்று பொதுவில் சலித்துக்கொள்வதுண்டு. ஆனால் பொதுவில் ஆண்களைவிடப் பெண்கள்தான் அதிக மகிழ்ச்சியாக இருக்கின்றனர் என்பது ஆராய்ச்சியாளரின் கண்டுபிடிப்பு. 'திருப்திகரமான வீட்டுச் சூழ்நிலையும், அன்பான கணவனும் இருந்தால் போதும். பெரும்பாலான பெண்கள் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்துவிடுகின்றனர். ஆனால் இந்தச் சௌகரியங்களைப் பெற்ற பின்னும் ஆண்மகன் அமைதியின்றியும், அதிருப்திப்பட்டவாறும் இருக்கிறான்' என்கின்றனர் இவ்வாராய்ச்சியாளர்.

இளமையிலும், பாலப் பருவத்திலும் இன்பம் அதிகம் எனக் கருதுவதும் தவறாம். வாலிப சுதந்திரத்தைவிடக் கடுமையாக உழைக்கும் போதுதான் அதிக ஆனந்தம் உண்டாகிறதாம்.

பிறருக்காக ஒரு காரியம் செய்வதில்தான் இன்பம் சுரக்கிறதாம். தங்களுக்காகவே காரியங்களைச் செய்து கொண்டவர்களிடம் இந்த மகிழ்ச்சியைக் காண முடியவில்லை என்கிறார் லண்டனில் உள்ள மனோதத்துவ சிகிச்சை நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் பேரன் உல்ஃப்.

ஒவ்வொரு தேச மக்கள் ஒவ்வொன்றில் அதிக ஆனந்தம் அடைகிறார்கள். பிரெஞ்சு மக்கள் உல்லாசப் பிரியர்கள் என்பது பிரசித்தம். ஆயினும் அவர்கள் இன்பத்துக்கு முதல் தேவையாகப் பணத்தையும், அடுத்தபடியாக ஆரோக்கியத்தையும், கடைசியாகவே காதலையும் கூறினராம்.

அமெரிக்காவில் கலிஃபோர்னியா சர்வகலாசாலையில் நடத்திய ஆராய்ச்சியிலிருந்து அந்நாட்டினர் சரீர உழைப்பாலேயே அதிக ஆனந்தம் கொள்வதாயும், அறிவாளியாயிருப்பதில் அவ்வளவு ஆனந்தம் கொள்ளவில்லை என்றும் தெரிய வந்துள்ளது. மிகவும் புத்திசாலியாயிருப்பவன் திருப்தியடைவதென்பது மிகவும் கடினமாயுள்ளதாம்.

— 'ஹிந்து' ஞாயிறு பத்திரிகையில் ஸ்ரீ டேவிட் கல்டன்

லாம் போல் ஆத்திரம் வந்தது. 'இப்போதுதான், பிச்சைக்காரன், பைத்தியக்காரன் என்றெல்லாம் பட்டம் வாங்கி வந்தோம். இங்கு வந்தவுடன் வேலைக்காரன்! பேஷ்!' என்று எண்ணிப் பொருமினார்.

''யார்ரா, வேலைக்காரன்?'' என்று எரிந்து விழுந்தார்.

''நீ வேலைக்காரன் இல்லே?''

''வாயை மூடுடா! நான் என் மகனைப் பார்க்க வந்திருக்கிறேன்.''

''இங்கே இருக்கிறது உன் மவனு?''

''ஆமாம்!''

பட்டாணியன் முகத்தில் மகிழ்ச்சி தோன்றியது. பெரிய பணக்காரர்கள் பலர் இம்மாதிரிக் காட்சியளிப்பதை அவன் கண்டிருக்கிறான். இவர்தான் ரவியின் தகப்பனாராக இருக்க வேண்டும் என்று முடிவு செய்தான். ரவி வந்தவுடன் சொல்லிப் பத்திரத்தில் இவர் கையெழுத்தையும் பெற்று, அந்தப் பங்களாவைத் தன் வசமாக்கிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

''ஸார்! நிம்மள் கைலே தெரியாமல் நம்பள் பேசிட்டான். நம்பள் வெளியிலே இருக்கிறான். நிம்பள் மகன் நம்பள் பார்க்கோணும்'' என்று சொல்லி வாசலில் சென்று நின்றான்.

முத்துவுக்கு இவனோடெல்லாம் என்ன சிநேகிதம்?' என்று புரியாமல் தணிகாசலம் தவித்தார்.

ஃ ஃ ஃ

வாசலில் பட்டாணியன் சென்று நிற்பதற்கும், அங்கு ரவி வந்து சேர்வதற்கும் சரியாக இருந்தது. ரவியைப் பார்த்தவுடன் பட்டாணியன் அவனை ஓடோடியும் நெருங்கினான். ''ரவி ஸாப்! நிம்பள் பத்திரத்துலே மேலே கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான் இல்லே!''

''ஆமாம்! அதுதான் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறேனே!.... எங்கப்பா வரட்டும். அவர் கையிலேயும் கையெழுத்து வாங்கிக் கொடுத்தூர்றேன். வீடு உன்னுடையதாயிடும். உன் தொல்லையும் ஒழியும்!''

''ரவி ஸாப்! நிம்பள் அப்பா அதோ வந்திருக்கார். கையெழுத்து வாங்கிக் கொடு!'' என்று ரவிக்குத் தணிகாசலத்தைச் சுட்டிக் காட்டினான் பட்டாணியன்.

ரவி தணிகாசலத்தைப் பார்த்தான். முத்துவைத் தேடி அவர் வந்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டான். பட்டாணியனைப் பார்த்து, ''அவர் தான் என் அப்பான்னு உனக்கு எப்படித் தெரிஞ்சுது?'' என்று ரவி கேட்டான்.

''இங்கே இருக்கிறது என் மவன் தான்னு அவர் சொன்னான்!'' என்றான் பட்டாணியன்.

ரவியின் மூளையிலே 'பளிச்', பளிச்' சென்று சில யோசனைகள் தோன்றின. உடனே அதை நிறைவேற்ற முன் வந்தான்.

'தணிகாசலத்தை என் தகப்பனார் என்று இவன் நினைக்கிறான். இப்போதைக்கு இவனைச் சமாளிக்க அவரை அப்படியே நடிக்கச் செய்ய வேண்டும். அதோடு விடக்கூடாது. இவரையே என் தகப்பனார் என்று சின்னதுரைக்கு அறிமுகப்படுத்தினால்! பலே! அதுதான் நல்ல யோசனை. என் தந்தையைப் பார்த்தால் சித்ராவை எனக்குக் கொடுக்க மாட்டார் சின்னதுரை. தணிகாசலத்தைத் தந்தை என்று கூறுவதே உத்தமம்! பார்க்கலாம் ஒரு கை!' என்று தீர்மானித்தான் ரவி.

ரவியினுடைய இந்தத் திட்டங்களில் சிக்கிக் கொண்டு தான் படப்போகும் அவஸ்தைகளைப் பற்றி ஒன்றுமே அறியாத தணிகாசலம் அமைதியாக அமர்ந்திருந்தார். **(தொடரும்)**

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக
வெளியேற்ற

புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'

இப்பொழுது முதன்முதலாக இந்தியாவில் வழங்கப்படுகிறது

வலிதான் எங்கள் பிரச்னை: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கழகத்தில் வலியைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்துவரும் விஞ்ஞானிகள் வலியை வேகமாக வெளியேற்றுவதற்கான புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளனர்—அதுதான் புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'.

மைக்ரோஃபைண்ட் என்றால் என்ன? புதியதொரு விசேஷமான செய்முறையின் மூலம், 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள வலிநிவாரணப் பொருளை மேலும் 30 மடங்கு நுணுக்கமாக்கியிருப்பதைத்தான் மைக்ரோஃபைண்ட் என்கிறோம். இப்பொழுது ஒவ்வொரு மாத்திரையிலும் இந்த வலிநிவாரணப் பொருள்களின் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக் கூறுகள் அடங்கியிருக்கின்றன. இதன் விளைவாக, முன்பைவிட இருமடங்கிற்கும் அதிகமான வலிநிவாரணச் சக்தி, மும்மடங்கு வேகமாக இயங்கி வலியைத் துரிதமாக வெளியேற்றிவிடுகிறது.

வேகமாகச் செயல்புரிகிறது—நீடித்த பயனைத் தருகிறது: புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள சுறுசுறுப்பாக இயங்கும் வலிநிவாரணப் பொருள், மிகவும் சுலபமாகவும், துரிதமாகவும் இரண்டறக் கலந்து உங்கள் உடலில் 5 முதல் 7 மணி நேரம் வரை தங்கியிருக்கிறது. இதனால் தான் மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' வலியை அதி வேகமாக வெளியேற்றி, நீண்ட நேரம் பயனளிக்கிறது.

உட்கொள்ளச் சுலபமானது: புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'வை வெறும் மாத்திரையாகவோ, தண்ணீரில் கலந்தோ, ஒரு டம்ப்ளர் தண்ணீருடனோ அல்லது சூடான பானத்துடனோ—எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம்.

கீழ்க்கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: சோர்வு • தலைவலி • உடல் வலி • பல்வலி • மூட்டுவலி • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • ஃப்ளு • டெங்கு • தொண்டை அழற்சி.

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி.



புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்



ஒரு மாத்திரையில் உள்ள அணுக்கூறுகள் வலியுடன் போராடும் அளவு பெரியதாக உள்ளபோது, அது உங்கள் உடலில் கரைவதற்கு அதிக நேரமாகிறது—நீங்கள் வலியிலிருந்து நிவாரணம் பெறவும் அதிக நேரம் காக்கவேண்டியிருக்கிறது.



மைக்ரோஃபைண்ட் ஆக இருப்பதால் புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'வின் ஒவ்வொரு மாத்திரையிலும் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக்கூறுகள் அடங்கியுள்ளன—எனவே, அது மேலும் துரிதமாக இரண்டறக் கலந்து, விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலிநிவாரணியாகும்.




புதிய

மைக்ரோஃபைண்ட்

'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்துவிடுகிறது

நிகோலஸ் தயாரிப்பு



முதன் மந்திரியின் சித்திரங்கள்

ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது சிறை புகுந்த இன்றைய முதல் அமைச்சராகிய திரு அண்ணுதுரை அவர்களுக்கு, சென்னை மத்திய சிறையில் கொடுக்கப் பட்ட 'கைதி எண் 6342'.

ஓய்வு காலங்களில் சிறைக்குள் பொழுதுபோக்குக்காக, ஓவியம் வரையக் கற்றுக் கொண்டார் திரு அண்ணு. விடுதலை அடைந்து வெளியில் வந்ததும், தமது 'காஞ்சி' இதழில் 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் 'சிறை அனுபவங்கள்' பற்றித் தொடர்ந்து எழுதி வந்தார்.

அப்போது, அண்ணுவிடம் ஓவியராக இருந்த என்னிடம், 'இது மாதிரி தலைப்பு ஓவியங்கள் வரைய வேண்டும்' எனக் கூறி அண்ணுவே 'ஐடியா'வுடன் 'மாதிரி ஓவியங்களும்' வரைந்து என்னிடம் கொடுப்பதுண்டு. அப்படிக் கொடுக்கப்பட்ட, 'அண்ணுவே வரைந்த' ஓவியங்களையும் எழுத்துக்களையும்தான் நீங்கள் மேலே காண்பது!

— ஓவியர் ஜெயக

பல்சுவைப் பக்கம் - 1

திடீரென்று மின்சாரக் கம்பி அறுந்து விழவே எல்லாருக்கும் பயம் ஏற்பட்டது. உடனே ஒரு புத்தி சாலி பக்கத்து டெலிபோனில், ''ஹலோ! பத்திரிகை ஆபீஸ்தானே? இரண்டு நிருபர்களை அனுப்புங்கள். ஒருவர் அந்தக் கம்பியில் மின்சாரம் இருக்கிறதா என்று பார்க்கட்டும். இன்னொருவர் நேரில் கண்ட விவரங்களை எழுதட்டும்'' என்றார்.



ஆதாரம் : 'தி வால்ரஸ்'
தகவல் : அச்சுதமங்கலம் பாப்பா

நீண்ட நித்திரை

அமெரிக்காவைச் சேர்ந்த மெரியா என்ற பதினெட்டு வயது மங்கை 1963ம் ஆண்டு நவம்பர் 22ம் தேதி "கென்னடி சுடப்பட்டார்" என்ற அதிர்ச்சியான செய்தியை ரேடியோ மூலம் அறிந்து ஆழ்ந்த நித்திரைக்



குள்ளானுள். கண் விழித்து "அம்மா" என்று முனகிவிட்டு, மறு விநாடியே மறுபடியும் தூங்கிப் போனுள். தற்போது சில டாக்டர்கள் வருஷக்கணக்காகத் தூங்கும் மெரியாவைப் பரிசோதித்து, அவளைத் தூக்கத்திலிருந்து எழுப்பி விடலாம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ஆதாரம்: தி இண்டியன் எக்ஸ்பிரஸ்
தகவல்: கே. கணபதிராமன்

குடித்தவருக்குப் பதக்கம்

ரஷ்ய மன்னர் பீட்டர் தமது ஆட்சிக் காலத்தில் குடித்துவிட்டுக் குற்றம் செய்தவர்களுக்கு ஒரு மெடல் அளித்தார்.



அந்த மெடலை அவர்கள் எப்பொழுதும் அணிந்து கொண்டாக வேண்டும். அந்த மெடலின் எடை பதினேழு பவுண்டு!


'கென்னி'

பன்னைவப் பக்கம் 2



வயதைக் குறைத்துக் காட்டும் ஆடைகளில் வனிதையருக்கு மோகம் உண்டு. முப்பது வயது தாண்டிய பெண்களுக்கு வயதைக் குறைத்து எழிலைக் கூட்டும் ஆடைகளைத் தயாரிப்பதில் ஜெர்மன் ஆடைத் தயாரிப்பு நிபுணர்கள் ஈடுபட்டிருக்கிருர்கள். இதோ இருவித ஆடைகளைச் சார்லஸ் ரீட்டர் என்ற நிபுணர் உருவாக்கி யிருக்கிருர். மாலை நேர நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கான நீண்ட ஆடை (கீழே) சாதாரண அலுவல்களுக்குப்போகும்போது அணிவதற்கான குட்டை ஆடை (மேலே) இரண்டுக்கும் ஏக கிராக்கி ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. - பூ. பி. எஸ்.







கல்லுக்குள் ஈரம்

ர.சு.நல்லபெருமாள்

அத்தியாயம் 46

இரகசிய டைரி

திறந்து மூடப்பட்ட ஜன்னல் கதவுகளை நோக்கிச் சுயேச்சை அச்சகத்தின் வாசலில் இருந்த போலீஸ்காரர்கள் வியப்புடன் சென்றார்கள்.


''ஆசாமி உள்ளேதான் இருக்கிறான்'' என்றார் கிருஷ்ணன். அவர் சொல்லி வாய் மூடுவதற்குள் அச்சாபீஸுக்குள்ளிருந்து துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. மறுகணம் கிருஷ்ணன் வலது தோளைப் பிடித்துக் கொண்டு கீழே சாய்ந்து விட்டார். போலீஸார் பரபரப்படைந்தனர். கிருஷ்ணனைத் தூக்கி லாரியில் போட்டு விட்டுத் துப்பாக்கியைத் 'தூக்கிப் பிடித்து அச்சகத்தின் சன்னலைக் குறி பார்த்தார்கள் போலீஸ்காரர்கள்.

சிறிது நேரத்தில் வெளியில் தொங்கிய பூட்டு உடைந்தது. மீண்டும் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. குண்டு சிவானந்தத்தின் தலைக்கு மேல் உரசிக் கொண்டு சென்றது. போலீஸ்காரர்கள் சன்னலை நோக்கிச் சுட்டார்கள். சிவானந்தம் தனது கைத் துப்பாக்கியை நீட்டிய

வாறு உள்ளே புகுந்தான். முன் அறையிலிருந்த ஒரு மேஜைக்குப் பின்னுலிருந்து முத்து, கைத்துப்பாக்கியால் சிவானந்தத்தைக் குறி பார்த்தான். ஆனால் சிவானந்தம் முந்திக் கொண்டான். சிவானந்தத்தின் கைத் துப்பாக்கியிலிருந்து கிளம்பிய குண்டு, முத்துவின் வலதுபுஜத்தில் பாயவே, அவன் கையிலிருந்த துப்பாக்கி நழுவிக் கீழே விழுந்தது. உடனே ஒரு போலீஸ்காரர் பாய்ந்து சென்று முத்துவைப் பிடித்துக் கொண்டார்.

எல்லா அறைகளிலும் புகுந்து தீவிரமாகச் சோதனை இட்டார்கள். ஒரு துப்பும் கிடைக்க வில்லை. கடைசியில் சர்தாரின் அறைக்குள் நுழைந்தான் சிவானந்தம். உள்ளே இருந்த மேஜை பூட்டப்பட்டிருந்தது. உடைத்து மேஜையைத் திறந்தபோது உள்ளே வெறும் காகிதங்களும் சுயேச்சைப் பத்திரிகையின் பிரதிகளும்தான் இருந்தன. சிவானந்தம் ஆயாசமடைந்தான். சோதனை வெற்றி பெருதோ என்ற சந்தேகத்தில் மனம் அலுத்து விட்டது.

அறையின் வடபுறத்துச் சுவரில் ஆரும் ஜார்ஜ் மன்னரின் பெரிய படம் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்து வியந்தான். அந்தப் படத்தை ஒரு போலீஸ்காரர் தூக்கிப் பார்த்தார். திடுக்கிட்டு நின்று விட்டார். படத்துக்குப் பின்னுல் ஒரு சிறு அறை ஒளிந்து கொண்டிருந்தது. சுவரில்



பதிந்திருந்த அந்த அறைக் கதவை உடைத்துத் திறந்தார். உள்ளே சில கைத் துப்பாக்கிகளும், சில டயரிகளும் கிடந்தன. பரபரப்புடன் அவைகளை அள்ளிக் கொண்டு சிவானந்தத்திடம் ஓடி வந்தார் போலீஸ்காரர்.

டயரிகளைப் புரட்டிப் பார்த்த சிவானந்தம் அதிர்ச்சி யடைந்தான். அவைகளில் சர்தார் சொக்கலிங்கம் பிள்ளையைப் பற்றிய பழைய கால இரகசியங்கள் அடங்கி யிருந்தன. படபடப்பாக டயரியைப் பார்த்து விட்டு அவைகளைப் பத்திரப்படுத்தி வைத்தான்.

மேஜைக்குக் கீழே விரித்திருந்த விரிப்பை வேறொரு போலீஸ்காரர் தூக்கிப் பார்த்தார். ஒன்றும் தெரிய வில்லை. விரிப்பை மீண்டும் கீழேபோடப் போகும் சமயத்தில் போலீஸ்காரரின் கையிலிருந்த கைத்தடி நழுவிக் கீழே விழவே அது விழுந்த இடத்தில், 'டொக்' என்ற சத்தம் கிளம்பியது. அதைக்



கவனித்துவிட்ட சிவானந்தம் பரபரப்புடன் கீழே விழுந்த தடியை எடுத்து அந்தத் தரையைத் தட்டினான். தரைக்குக் கீழே காலி இடம் இருப்பது போன்ற சத்தம் வரவே விரிப்பை முழுவதும் தூக்கி மேஜையையும் நகர்த்தி விட்டு ஆராய்ந்த போது, தரைக்குக் கீழே ஓர் இரகசிய அறை இருப்பது தெரிந்தது. அதன் கதவை உடைத்துத் திறக்கும்படி உத்தரவிட்டான் சிவானந்தம். கதவு திறக்கப் பட்டதும் பாட்டரி விளக்கை ஏற்றி உள்ளே பார்த்த போது போலீஸார் அனைவரும் திடுக்கிட்டு விட்டனர். உள்ளே வெடி மருந்துகளும், கைக் குண்டுகளும் நிரம்பியிருந்தன. ஒரு மூலையில் ரேடியோ ஒலிபரப்புக் கருவியும் இருந்தது.

எல்லாவற்றையும் கண்டு மலைத்து நின்றான் சிவானந்தம். எவ்வளவு பெரிய சதிக் கூட்டம் அந்த இடத்தில் இயங்கிக் கொண்டிருந்திருக்கிறது என்பதை அறிந்தபோது அவன் உடல் சிலிர்த்தது.

முத்துவை இழுத்து வரும்படி உத்தரவிட்டான். முத்துவை இரண்டு போலீஸ்காரர்கள் கைத் தாங்கலாக அழைத்து வந்தார்கள். அவன் புஜத்திலிருந்து இரத்தம் வழிந்து காய்ந்து போயிருந்தது. குண்டு பாய்ந்த இடத்தில் போலீஸார் கட்டுப் போட்டிருந்தார்கள். முத்து தள்ளாடியபடியே நடந்து வந்தான்.

''எங்கே உன் கூட்டாளிகள்?'' சிவானந்தம் கோபத்தோடு கேட்டான்.

முத்து பதில் ஒன்றும் சொல்லாமல் நின்றான். பக்கத்தில் நின்ற போலீஸ்காரர் 'பளார்' என்று அவன் கன்னத்தில் ஓங்கி அடித்தார். ''எஜமான் கேட்டதற்குப் பதில் சொல்'' என்று கர்ஜித்தார். முத்துவின் கடைவாய்ப் பல் உடைந்து வாய் வழியாக இரத்தம் ஒழுகியது. வாயில் வந்த இரத்தத்தைத் தன்னை அடித்த போலீஸ்காரரின் முகத்திலேயே துப்பினான் முத்து. போலீஸ்காரர் அவனை அடிக்கக் கையை ஓங்கினார். ஆனால் சிவானந்தம் தடுத்து விட்டான்.

''ஏய், உள்ளதைச் சொல்லிவிடு. இல்லையென்றால் எலும்பு முறிந்து விடும்'' என்று முத்துவைப் பார்த்துச் சொன்னான், சிவானந்தம். முத்து சிரித்தான்.

''எலும்பை என்ன, தலையையே முறித்து எடுத்தால்கூட உம்மால் என்னிடமிருந்து எந்தப் பதிலையும் பெற முடியாது. வீணாக என்னிடம் கேள்வி கேட்டு அலுக்க வேண்டாம்'' என்றான் அலட்சியமாக. சிவானந்தத்துக்குக் கோபம் பொங்கியது. இருந்தாலும் என்ன செய்ய முடியும்? எதற்கும் துணிந்துவிட்ட ஒருத்தியிடம் சிவானந்தத்தின் கோபம் எம்மாத்திரம்?.... முத்துவை மீண்டும் போலீஸ் லாரிக்குக் கொண்டு போகச் சொல்லிவிட்டுச் சர்தாரின் அறைக்குள் சோதனையைத் தொடர்ந்தான் சிவானந்தம்.

அறைக்குள்ளிருந்த மேஜையின்கீழே பக்கவாட்டில் அடுக்கடுக்காய் அமைந்திருந்த டிராயர்களைத் திறந்த போது சேர்மாதேவிப் பாலத்தின் சதித்திட்டம் புலனாகியது. குறிப்புப் படமும், சதித்திட்டமும் சிவானந்தத்துக்குப் பிரமிப்பை உண்டாக்கின.

கைக் கடிகாரத்தைப் பார்த்தான் சிவானந்தம். இன்னும் ஒன்றேகால் மணி நேரத்தில் பாலம் தகர்ந்துவிடும். அதற்குள் சதிகாரர்களைத் தடுத்தாக வேண்டும்.

வெள்ளைக்காரச் சிப்பாய்கள் வரும் ரயில் வண்டி பற்றி ஏற்கனவே சிவானந்தத்துக்கு அரசாங்கத்திடமிருந்து தகவல் வந்திருந்தது. அந்த வண்டியின் பாதுகாப்புக்காக அந்தப் பிராந்தியத்தின் ஒவ்வொரு ரயில் வண்டி நிலையத்திலும் போலீஸ் பந்தோபஸ்து செய்திருந்தான். ஆனால் சேர்மாதேவி பாலத்தில் வெடி வைப்பார்கள் என்று அவன் கனவில்கூட நினைத்துப் பார்த்ததில்லை.

உடனே புறப்பட்டுச் சேர்மாதேவிக்குப் போக முடிவு செய்தான். அச்சகத்தைப் பூட்டிச் சில் வைத்து அங்கே இரண்டு போலீஸ்காரர்களையும் காவலுக்கு வைத்துவிட்டு, முத்துவைப் போலீஸ்காரர்கள் வசம் ஒப்படைத்து விட்டு வீட்டுக்கு விரைந்தான்.

அவனுக்காகக் காத்திருந்த கமலவாசகி, அவன் வந்ததும் ஓடோடி வந்தாள்.

''என்ன, சதி உண்மைதானா? சதிகாரர்களை யெல்லாம் பிடித்தாகிவிட்டதா?'' என்று பரபரப்புடன் கேட்டாள். சிவானந்தம் ஆயாசத்துடன் தலையை அசைத்தான்.

''இன்னும் பிடிபடவில்லை. எல்லோரும் சேர்மாதேவிப் பாலத்தைத் தகர்க்கப் போயிருக்கிறார்கள். இந்தா, இந்த டயரிகளைப் படித்துப் பார். சர்தார் சொக்கலிங்கம் பிள்ளையைப் பற்றிய இரகசியம் தெரியும்'' என்று கூறிக் கொண்டே டயரிகளைச் சோபாவின் மீது வீசியெறிந்தான். ''சேர்மாதேவிக்குப் போகிறேன். இப்போது சாப்பிட நேரமில்லை, பால் மட்டும் கொண்டு வா, சீக்கிரம்'' என்று விரைவு

படுத்தினான். கமலவாசகி அடுக்களைக்குள் ஓடிச் சற்று நேரத்தில் பால் டம்ளருடன் விரைந்து வந்தாள். அதற்குள் சிவானந்தம் உடை மாற்றிக் கொண்டு இடுப்பில் கைத் துப்பாக்கியைச் செருகிக் கொண்டு புறப்படத் தயாராகி விட்டான்.

''நல்ல வேளை, சி. ஐ. டி. கிருஷ்ணனிடம் கண்காணிக்கும்படி சொன்னது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று.....! இந்தச் சதி வெளிக்குத் தெரியாமலே போயிருக்குமானால் அதிகாரிகள் உங்களை எவ்வளவு கேவலமாக நினைப்பார்கள்!'' என்றாள் கமலவாசகி.

''உம்.... அதுதான் முன்பே சொன்னேனே; நீ ஆணாகப் பிறந்திருக்க வேண்டும் என்று!'' என்று பாலை வாங்கி அருந்திவிட்டு வேகமாக வாசலுக்கு வந்து ஜீப் காரில் ஏறி அமர்ந்தான் சிவானந்தம்.

அவன் போன பிறகும்கூடக் கமலவாசகியின் படபடப்பு அடங்கவில்லை. சிறிது நேரம் பிரமை பிடித்துப் போய் வாசலிலேயே நின்றாள். அவள் மனத்திரையில் ரங்கமணியின் உருவம் நிழலாடியது. ''தண்டனையை அநுபவிக்க வேண்டியதுதான்'' என்று அவள் வாய் முணகியது. பிறகு வீட்டுக்குள் வந்து சோபாவில் கிடந்த சர்தாரின் டயரிகளை எடுத்து ஒவ்வொன்றாகப் படிக்கத் தொடங்கினாள்.

தாமிரவருணி ஆற்றின் இரு கரையும் தொட்டுக் கொண்டு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. இரண்டு நாட்களாகப் பெய்த மழையால் பூமி குளிர்ந்து விட்டது. அன்றும் மழை முழுதும் ஒய்ந்தபாடில்லை. பகலெல்லாம் மழை பெய்து, இருட்டுகிற சமயத்தில்தான் சற்று ஓய்ந்திருந்தது. இன்னும் மரங்களிலிருந்து, மழைத் துளிகள் சொட்டுப் போட்டுக் கொண்டிருந்தன. முன்னிருட்டுக் காலமாதலால் இருள் எங்கும் கவ்விக் கிடந்தது. மேகங்கள் கலைந்துகொண்டிருந்தன. மேகங்களுக்கிடையே தோன்றிய நட்சத்திரங்கள் ஒளி காட்டிக் கொண்டிருந்தன. இடையிடையே பளிச் பளிச்சென்று மின்னல் வெட்டிக் கொண்டிருந்தது. சேர்மாதேவி ஊரே எட்டு மணிக்குள் அடங்கி விட்டது. ஊருக்கு ஒரு மைல் தள்ளி ஓடிக் கொண்டிருக்கிறது தாமிரவருணி நதி.

ஆற்றங்கரையில் இருக்கும் கோயிலின் அர்ச்சகர், அர்த்தஜாம பூஜையை முடித்துக் கொண்டு கோயில் நடையைச் சாத்திவிட்டு அன்றைய நிவேதனத்தைத் தோளில் தூக்கிக்கொண்டு வீட்டை நோக்கி விரைந்து நடந்து கொண்டிருந்தார். வழக்கமாக மாலை ஏழு மணிக்கே வீடு திரும்பிவிடும் அர்ச்சகருக்கு அன்று ஏனோ நேரமாகி விட்டது.

கோயில் நடை சாத்தப்பட்டு ஆரவாரம் அடங்கிய பிறகு அந்தப் பிராந்தியத்தில் மயான அமைதி நிலவியது. கோயிலை அடுத்திருந்த நாவல் மரத்திலிருந்து குளிர் தாங்காமல் ஏதோ ஒரு பறவை இறக்கையைப் படபட வென்று அடித்துக் கொண்டு முனகிய சத்தம் கேட்டது.

மணி ஒன்பதரை இருக்கும். ஒற்றையடிப் பாதை வழியாக விரைந்து நடந்து கொண்டிருந்தார் அர்ச்சகர். முப்பது வருடங்களாகப் பழக்கப் பட்டுப்போன பாதையாதலால் அந்த இருட்டிலும் திகைக்காமல் வேகமாக நடந்து கொண்டிருந்தார் அர்ச்சகர். அவருக்கு எதிரே இரண்டு பேர்கள், ஒரு பாட்டரி விளக்கை அடிக்கடி ஏற்றி வழி பார்த்துக் கொண்டே வந்ததைக் கண்டதும், அர்ச்சகர், அவர்களுக்கு வழி விட்டுச் சற்று விலகி நின்றார். எதிரே வந்தவர்கள் பக்கத்தில் வந்ததும், ''யாரு...? இந்த நேரத்தில் எங்கே இப்படி....?'' என்று கேட்டார் அர்ச்சகர்.

''மழை பெய்திருக்கிறது, வயல் மடை உடைந்துவிடக் கூடாது. பார்க்கப் போகிறேன்'' என்று ஒருவர் பதில் சொன்னார்.

''ஓ...சரி சரி...பார்த்துப் போங்கள். மழை நேரம். பூச்சி பொட்டு இருக்கும்'' என்று கூறி நகர்ந்தார் அர்ச்சகர். இரண்டு எட்டு நடந்திருப்பார். திடீரென்று அவருக்குச் சந்தேகம் வந்தது. திரும்பிப் பார்த்தார். **(தொடரும்)**

குணம் தருபவர் - பணம் பெறுபவர்!



நம்முடைய வியாதியை குணப்படுத்துவது கடவுள். ஆனால் பணம் வாங்கிக் கொள்பவரோ டாக்டர்!

— அரக்கோணம் தங்க சங்கரபாண்டியன்



யாரை நம்புவது?

''உங்கப்பா திருடனுமே!''

—எவனைப் பாரேன், இதே கேள்விதான். பாபுவுக்கு நண்பர் கூட்டம் கசந்தது. அவர்களை விட்டு விலகி விடுபட்டு விடுபட்டு எங்காவது தொலை தூரத்துக்குத் தொலை தூரம் ஓடிவிட வேண்டும் என்ற துடிப்பு எழுந்தது.

''ஏன்டா பாபு! உங்கப்பா திருடிட்டு ஜெயிலுக்குப் போயிருக்காராமே!'' என மீண்டும் கேட்டான் சேகர்.

'பளார்!'

இதுதான் பதில். கன்னத்தைத் தடவியபடியே சேகர் விலகிப் போனான். எதிரிலே நின்றுகேட்டவனை அறைந்து விட்டான். ஆனால் எட்டி நின்றபடியே ஏளனம் பேசும் உலகத்தை இந்தப் பிஞ்சுப் பயல் என்ன செய்துவிட முடியும்?

''ஏம்பா நீ திருடினியா? ஏம்பா திருடினே?'' — பாபுவின் மனக் குமைச்சலுக்குப் பதில் சொல்ல அவன் தந்தை அருகிலேயா இருக்கிறார்? மத்திய சிறைச்சாலையில் செக்கு மாடாகிப் பிழிபட்டுக் கொண்டிருப்பாரே? உலகம் என்றால் என்ன என்பதைப் பாபுவுக்கு அறிவித்துக் கொண்டும், அறிவுறுத்திக் கொண்டும் இருந்த ராமநாதன் அடைத்த மதிலுக்கப்பால் சிறைப் பறவையாகி விட்டார்.

இனி பாபு அனாதை...

மாணவர் கூட்டத்தில் பாபுவைப் பற்றிப் பேசத் தைரியம் இல்லாததால் வேறு பற்பல சுவையான விஷயங்களை அசை போடத் தொடங்கிற்று.

''டேய்.... நான் லீவுக்கு பாம்பே போறேன்டா...''

''நான் பெங்களூர்...!''

''நான் டெல்லி...''

ஒவ்வொருவனுக்கும் போவதற்கென்று ஒவ்வொரு ஊர் இருந்தது. பாபுவுக்கு?

குமார் அதை வாய் விட்டுக் கேட்டே விட்டான்:

''பாபு! எந்த ஊருக்குப் போறே?''

''அவங்க அப்பாவைப் போல் ஜெயிலுக்குப் போவான்!'' என்றான் பசுபதி.

பாபுவுக்கு அழுது தீர்க்க வேண்டும் போலிருந்தது. 'எத்தனை பெரிய இழிகேடான நிலையில் தன்னைத் தவிக்க விட்டுப் போய் விட்டார் அப்பா!'

''பாபு ஏன்டா ஜெயிலுக்குப் போகணும்? அவன்தான் திருடலியே?'' எனக் கேட்டான் சேகர்.

''பாபு லஞ்சம் வாங்கலியே?'' என வக்காலத்து வாங்கினான் பத்மன்.

''பாபுகிட்டக் கள்ள நோட்டு ஒண்ணும் கிடையாதே...'' என்று வாதாடியவன் ஆனந்த்.

தயங்கித் தயங்கி நின்ற தயாநிதி, ''பாபு! சாமி பேரைச் சொல்லி ஏமாத்திக் கொள்ளையடிச்சானு என்ன?'' என்று கேட்டான்.

''குடிச்சிட்டு நடு ரோட்டிலே விழுந்து கிடக்கலியே?'' என்றான் இளங்கோ.

சக மாணவர்கள் ஆளுக்கொன்றாகச் சொல்லச் சொல்லப் பாபுவின் முகம் இறுகிக் கனத்தது. நரம்புகள் முறுக்கேறிக்கொண்டு வந்தன.

''பாபுவோட அப்பா இவ்வளவும் பண்ணினதால்தான் ஜெயிலுக்குப் போயிருக்கிறாரா?'' என்று அப்பாவித்தனமாகக் கேட்டான் ஆனந்த்.

''எவன்டா சொன்னான் அப்படி?'' — தந்தையின் மானம் காக்கும் வீரம் பாபுவின் இளம் ரத்தத்துள் வீறிட்டு நின்றது.

''சொல்லுடா ... எவன் சொன்னான் இதெல்லாம்?''

''டேய்....டேய்... எனக்குத் தெரியாதுடா... எங்கப்பாதான் சொன்னார்.''


''என்ன சொன்னார்?''

''ராமநாதன் கம்பெனிப் பணத்தைத் திருடிட்டார். ஜெயில்லே போட்டுட்டாங்கன்னு...'' ஆனந்த் திக்கித் திணறிச் சொல்வதற்குள் பத்மன் குறுக்கிட்டான்.

''எங்கப்பா சொன்னார்... 'ராமநாதன் லஞ்சம் வாங்கினதாலே ஜெயிலுக்குப் போனார்'னு...''

தத்தம் தந்தை சொன்னதை வேதமாகக் கொண்டு பாபுவின் தந்தை மீது ஆளுக்கொருவராகச் சுமத்திய குற்றச்சாட்டை மெய்ப்பிக்க ஆதாரம் தேடிக் கொண்டிருந்தனர் மாணவர்கள்.

பாபுவோ இத்தனைக்கும் அர்த்தம் தேடிக் கொண்டிருந்தான்! சட்ட நீதிக்கும் சமுதாய நேர்மைக்கும் புறம்பான காரியம் ஏதோ ஒன்றைச் செய்ததால்தான் தன் தந்தை



சிறைக்குப் போயிருக்கிறார் என்பதை உணர்ந்த மறு விநாடி அவன் உடலே கூனிக் குறுகிப் போய்விட்டது. உள்ளமெல்லாம் கூசி ஒடுங்கிப் போய் நின்றான் பாபு.

''டேய்... திருட்டுன்னா என்னடா? லஞ்சம்னா என்ன சொல்லுடா... சேகர்... ப்ளீஸ் பாலு... நீயாவது சொல்லுடா. கள்ள நோட்டுன்னா எப்படி யிருக்கும்? யாராவது சொல்லுங்கடா... எந்த விதமான பாவத்தைப் பண்ணிட்டு எங்கப்பா ஜெயிலுக்குப் போயிருக்கார்னு தெரிஞ்சுக்கணும்டா... டேய்... ப்ளீஸ்... ப்ளீஸ்... சொல்ல மாட்டீங்களா... போங்கடா... நானே தெரிஞ்சுக்குவேன்...'' என்று வீறாப்புடன் மூக்கை உறிஞ்சிக் கையை உதறிப் புறப்பட்டான்.

'திருட்டு என்றால் என்ன? லஞ்சம் என்றால் என்ன?'

பாபுவின் மனத்துள் பனி மூட்டமாய்க் கவிந்தது இந்தப் புதிர். அவனுக்குத் தெளிவு பிறக்கவுமில்லை, தெளிவு கிடைக்காமல் விடப் போவதுமில்லை என்ற தீர்மானத்துக்கு வந்தாயிற்று.

'அப்பா கிட்டேயே கேட்டுட்டா என்ன?'—எண்ணம் பிறந்த வேகத்தில் எழுந்த சிலிர்ப்பு உடலைக் குலுக்கியது. 'அப்பா ஜெயிலுக்குப் போனதுக்கு அப்புறந்தானே வெளியிலே இப்படிப் பேசிக்கிறாங்க? வெளியிலே இருக்கிற எனக்கே தெரியலேன்னா, பாவம், ஜெயில்லே இருக்கிற அப்பாவுக்கு எப்படித் தெரியும்?'

பாபு ஒரு முடிவுக்கு வந்தான். நண்பர்களைக் கேட்டுப் பயனில்லை. அவர்களின் பெற்றோர்களுக்கு — அட ஒன்றிரண்டு பேர்களுக்குக்கூடவா — திருட்டு என்றால் என்ன என்று விளக்கத் தெரியாது?

ஃ ஃ ஃ

பிரம்மாண்டமான அந்தப் பங்களாவை அழகுபடுத்திக் கொண்டிருக்கும் கூடத்தைக் கடந்து நாயின் காவலை மீறித் தயங்கித் தயங்கிக் கால் பதித்து வைத்தான் பாபு. நண்பனைப் பெயர் சொல்லி அழைக்க முயன்றபோது வெளியே விருந்து வந்த வாலிபன், உள்ளே ஓடத் துடிக்கும் அவசரத்திலும், 'சேகர் மாடியிலே இருப்பான்' என்று சொல்லத் தவறவில்லை.

'நான் சேகரைப் பார்க்க வரவில்லை' என்று சொல்லத் துடித்த நாவை அடக்கிக் கொண்ட பாபு மாடிக்கு விரைந்தான்.

''இமயினில் ஆட்டம்...'' என எதையோ பாடி முணுமுணுத்தபடி கட்டிலில் புரண்டு கொண்டிருந்தார் சேகரின் தந்தை. ஜிவுஜிவு எனச் செக்கர் வானமாய்ச் செந்நீ குழம்பியிருந்த விழிகளில் போதையின் தடுமாற்றம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

பாபுவுக்கு அந்தத் தடுமாற்றத்தின் காரணத்தைப் புரிந்துகொள்ளும் வயதில்லையே!

''சுரேஷ்!'' என இடியாய் முழங்கினார் பெரியவர். உட்புறம் எங்கிருந்தோ ஓடி வந்த இளைஞன் சுரேஷ் ''என்னப்பா'' என்று பரிவுடன் விசாரித்து அருகில் வந்து நின்று கொண்டான்.

''ஷட் தி டோர்! கதவை மூடு...'' என உரக்கக் கத்தியவர் போதையின் உச்சத்தை

அடைந்து நிலை தடுமாறி மீண்டும் கட்டிலில் சரிந்து விழுந்தார்.

பாபுவுக்குத் திகீரென்றது. பாவம், இவர் உடம்பு சரியில்லாமல் மயங்கிச் சாய்கிறார், மூத்த மகன் பார்த்துக் கொண்டு சும்மா நிற்கிறானே... 'சீ... நாமாவது போய் டாக்டரைக் கூட்டிண்டு வரலாமா...' என்று இரக்கம் மேலிட்டுக் கால்களைப் பின்னுக்கு இழுத்து நடக்கத் தொடங்கினான். கீழே யாராவது பார்த்து விட்டால்...? பயத்துடன் மாடிப் படியிலேயே ஒட்டி நின்று விட்டான்.

கட்டிலில் மல்லாந்து கிடக்கும் தந்தையின் பாண்ட் பாக்கெட்டுகளில் கைவிட்டுத் துழாவிக் கொண்டிருந்தான் சுரேஷ்! நினைவு தப்பிக் கிடக்கும் குடிகாரனின் உடம்பை அப்படியும் இப்படியுமாகப் புரட்டிப் புரட்டி ஆராய்ந்து அவன் தேடுவதுதான் என்ன?

கசங்கியும் மடிந்தும் கிடந்த கற்றை கற்றையான நோட்டுக்களைக் கைநிறைய அள்ளிக் கொண்டிருந்த சுரேஷ் வெறியின் துள்ளலோடு வெளியேறி வந்தான். "தாங்யூ டாடி... இதுமாதிரி நீங்க குடிச்சுட்டு நாள் முழுக்க நினைவில்லாமல் கிடந்தால் என்னைப் போல் அதிர்ஷ்டசாலி யாருமே இருக்க முடியாது....!" என்று கூறி உல்லாசமாகச் சீட்டியடித்தபடியே வெளியே ஓடினான்.

குடிகாரனிடம் திருட்டு! சட்டத்துக்குப் புறம்பான செய்கைகள் இரண்டும் ஒரே சமயத்தில்... ஒரே இடத்தில்!

திருட்டுக்கு விளக்கம் கேட்க வந்த பாபுவுக்குத் 'திக்'கென்றது. வந்த சுவடு தெரியாமல் படியிறங்கிக் கீழே வந்தான்.

வெளிக்கேட்டைத் தாண்டி வெறித் துள்ளலுடன் ஓடும் பெரிய மகனைப் பார்த்தபடி சேகரின் தாய் அலுத்துக் கொண்டாள். "சீட்டாட்டம் என்னிக்கு இவனை விட்டு ஒழியறதோ, அன்னைக்குத்தான் இந்தக் குடும்பம் உருப்படும்!"

மணி ஏழரையைத் தாண்டி விட்டது.

ஆனந்தின் தந்தையிடமாவது நியாயம் கேட்போம் என்று துடிக்கும் உள்ளத்துடன் நடை துவள வந்தான் பாபு.

பாபு வந்திருப்பதை அறிந்து ஆனந்த் வரும் நேரத்துக்குள் பாபுவின் காதுகளை மெல்ல எட்டின. முன் ஹாலை அடுத்த தனியறைக்குள்ளிருந்து வெளிப்பட்ட ரகசியக் குரல்கள்:

"கணக்கெல்லாம் நீங்க வச்சிருக்கியள்ள?" என அக்கறையாகக் கேட்ட ஒரு குரலுக்கு ஆனந்தின் தந்தை அலட்சியமாக, "எல்லாம் ஒழுங்காகத்தான் இருக்கு... ஏன்னு நாம செய்யறது ரொம்ப நியாயமான தொழிலாச்சே...!" என்றார்.

"ஆமாங்கிறேன்... என்னமோ சம்பாதிச்சோம், எப்படியோ செலவளிச்சோம்னு விடாமல் கவர்மெண்டுக்காரன் வரி போட்டுத் தீய்ச்சான்னு நியாய வழியிலே சம்பாதிக்கவா தோணுது? சம்பாதிக்கணும்கிற ஆசையை அடியோட அழிச்சுப்புடுதில்லே?" என வியாக்கியானம் கூறினார் மற்றொருவர்.

முதலில் கேட்ட குரலே மீண்டும் குழைந்தது: "என்னவோ இந்தப் பணத்துக்கெல்லாம் நீங்களா வரவு செலவு வச்சுக்கிடறதாலே எங்களுக்குப் பாரம் நீங்கிப் போவுது. நாங்களும் உங்ககிட்டே ரொக்கமாகக் குடுத்திட்டு ஏட்டுலே கணக்கை ஏத்திக்கினு போறது சவுரியமாத்தான் இருக்குது..." — நன்றியின் காணிக்கையாய் நிறைந்து வழிந்தது அக்குரல்.

"அப்பப்ப குடுக்கிற பணத்துக்குக் கணக்கெழுதி வச்சிருக்கேன். சந்தேகம்னு பாத்துக்கலாம்..." என்று இழுத்தாற்போல் ஆனந்தின் தந்தை கூறவும் மற்ற இருவரும் பதறிப் போய், "நல்லாத்தான் சொன்னீய நீங்க... ஒங்க வார்த்தையிலே எங்களுக்கு நம்பிக்கையில்லையா...?" எனத் தடுத்துக் கூறி எழுந்து நின்றனர்.

அறையினுள்ளிருந்து வெளியேறிய இருவரையும் கண்டு பாபு திடுக்கிட்டான். அவன் பள்ளித் தோழன் பாலுவின் தந்தையும் சிற்றப்பாவும்தான் இவர்கள் இருவரும். அவர்கள் கண்ணில் படாமல் ஒதுங்கி நின்று கொண்டான். வந்தவர்கள் சென்ற பின்னர் மீண்டும் பேச்சுக் குரல் கேட்டது:

"ரெண்டு பேர் கணக்கிலேயும் வரவு வச்சிடலாமா?" என்று கேட்டவர் பாங்கர் பரமானந்தத்தின் அந்தரங்கக் காரியதரிசி.

"என்ன செகரெட்டரிய்யா நீ? கறுப்புப் பணத்துக்குக் கணக்கு வேறே கேடா? வியாபாரத்தில ஒண்ணுக்குப் பத்தா மூட்டையடிச்சு இங்கு கொணந்து பதுக்கி வைக்கிறானுக. பைசாவுக்குப் பைசா கணக்குக் காண்பிக்க கவர்ண்மெண்டு பாங்கா நடத்துறோம்? போயி எம் பொட்டியிலே கொண்டு வைய்ங்க... ஓய்... அந்தப் பணத்துலே நீரும் கொஞ்சம் இடைத் தரகு போட்டுடாதேயும். எனக்குக் கணக்கு ஏட்டுலே இல்லேன்னாலும் எப்பவும் மண்டையிலே இருக்கும்..."

அதற்கு மேலே அங்கு நிற்கப் பிடிக்காமல் பாபு சரேலென நழுவிவிட்டான். உலகத்தைக் கண்டால் கொஞ்சம் கொஞ்சமாக வெறுக்கத் தொடங்கியிருந்தான். வேதனை நிறைந்த நெஞ்சுடன் வெளியே வந்தால்...?

சற்று முன் பாங்கரைச் சந்தித்து விட்டு வந்த பெரும் புள்ளிகள் இருவரும் காருக்குள் ஏறுமுன்னதாக ஒருவரை யொருவர் பார்த்து நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டனர். அருகே எவருமில்லை என்ற தைரியத்தில் அடிக்குரலில் தம் வெற்றியைக் கொண்டாடிப் பேசிக் கொண்டனர்.

"பைத்தியக்காரப் பய...நமக்கு 'பாங்' கரா வந்து வாச்சிருக்கான். நல்ல நோட்டுக்கும் கள்ள நோட்டுக்கும் வித்தியாசம் தெரியாமல் நம்ம கணக்கிலே வரவு வச்சிக்கிறான்" எனச் சிரித்தார் மூத்தவர்.

"குடுத்த பணம் மட்டுந்தானா கள்ளப் பணம்? நோட்டே கள்ள நோட்டாச்சே..?" என்றார் இளையவர்.

நெஞ்சைக் கீறினாற்போல் துடித்தான் பாபு.

"வெளியிலே நம்மனா போயி மாத்தினாத் தானே தொல்லே... இவன் வழியிலே இவனுக்கே தெரியாமல் மாத்திக்கிட்டிருந்தால் நமக்குப் பணத்துக்குப் பணமும் லாபம்...

mcm/nc/12

ஆபத்தும் கொறைச்சல்...!'' என உல்லாச மாகப் பேசியபடி காரில் புறப்பட்டுப் போனார்கள் இருவரும்.

'எத்தனுக்கு எத்தர்கள்!' எனச் சபித்தான் பாபு.

உலகத்தில் நல்லவனைப் பார்த்து ஒருவரைத் தேடித் தேர்ந்தெடுத்து அவரிடம் நியாயம் கேட்கப் புறப்பட்ட பாபு பத்மனின் பங்களாவுக்கு வந்தான். அவன் குடும்பத்துள் அனைவருமே பாபுவிடம் இனிமையாகப் பழகக் கூடியவர்கள்தான். எனவே தயக்கமின்றி உள்ளே வந்தான்.

வரவேற்பறையில் பத்மனின் தாயும் பாபுவின் நண்பனான சிவகுமாரின் தாயும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''நேத்து பத்மனுக்குப் பிறந்த நாளாச்சே, என்னால்தான் வரமுடியாமல் போச்சு...'' என்று சொல்லிக் கொண்டே பத்மனின் கையில் அழகிய கடிகாரம் ஒன்றைக் கட்டினாள் சிவகுமாரனின் தாயார்.

''இதெல்லாம் என்னத்துக்கும்மா'' என்று ஒப்புக்குத்தான் சொன்னாள் பத்மனின் தாய்.

''அவங்க அப்பறமா வந்து பத்மனோட அப்பாவைப் பார்க்கிறதாச் சொன்னாங்க'' என்று கூறி விடைபெற்றுப் போனாள் வந்தவள்.

பத்மனின் தந்தை அறையினுள்ளிருந்து மெதுவாக வெளியே வந்தார்.

''ஏது... ஐயா வராமல் அம்மா மட்டும் வந்து பாத்துட்டுப் போறாங்க...?'' என்று கணவனிடம் வினவினாள் பத்மனின் அம்மா.

''என்ன ஆழம் பார்க்கறதுக்கு! அவனுக்கு வேண்டிய பர்மிட் 'சாங்ஷன்' பண்ண வேண்டியவன் நானாச்சே ....!'' என்றார் தந்தை.

''ஹூம்! 'பர்மிட் சாங்ஷனிங் அதாரிட்டி' யாக உங்களுக்கு உத்தியோகம் வராமல் இருந்தால் இந்தக் கழுதைகளெல்லாம் நம்மைத் திரும்பிப் பார்க்குமா?''


''பிச்சைக்காரப் பயல்... நான் பர்மிட் சாங்ஷன் பண்ணினால் அரை லட்ச ரூபாய் தட்டப் போறான் சொனையா... நூறு ரூபாய் கடிகாரத்தோடு காரியத்தை முடிச்சிக்கிறான் கஞ்சப் பிரபு.''

கணவன் மனைவியின் கோப தாபத்தின் காரண காரியங்களை ஆராயப் பாபுவுக்குப் பொறுமை இல்லை. பத்மன் அவனைப் பார்த்துவிட்டு வெளியே வருவதற்குள் ஒரே ஓட்டமாக வீட்டை விட்டு ஓடி வந்தான்.

வெளிக் கேட்டைத் தாண்டி வருவதற்கும் சிவகுமாரின் தாயார் காருக்காகக் காத்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. காரில் வந்தவர் சிவகுமாரின் தந்தை சிற்றம்பலம் தான்.

''நூறு ரூபாய்க்குள் முடிக்கலாம்னு சொன்னீங்களே — அந்தச் சண்டாளி பர்மிட்டைப் பத்திப் பேசவே யில்லையே!'' என்றாள் திருமதி சிற்றம்பலம்.

''இந்த நூறு அவனை ஆழம் பார்க்கிறதுக்கு. இன்னும் இரண்டாயிரம் மூவாயிரம் இறைச்சால்தான் அவனை அடியோட அமுக்கி எடுக்க முடியும்'' என்றார் சிற்றம்பலம்.



மரக்க(ல)ராயர்

(ஒரு முஸ்லிம் சஞ்சிகையி லிருந்து)

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அராபியர்கள் மரக்கலங்களில் வந்து இந்தியாவின் ஏராளமான விற்பனைப் பண்டங்களை இறக்குமதி செய்து இங்கிருந்த அரசாங்கத்துக்கு அதிகமான சுங்கம் செலுத்த முன் வந்தார்களாதலால், அவர்களின் உயர்ந்த பண்பாட்டின் மீது பற்றுக் கொண்ட தமிழர்கள் அவர்களைச் சிறப்புப்படுத்தும் முறையில் 'மரக்கலராயர்' என்று அழைக்கலாயினர்.

இப் பெயரில் மரக்கலம் என்பது மரக் கப்பல் எனவும் ராயர் என்பது அரயர் (அரசர்) எனவும் பொருள் தரக் காண்கிறோம். பின் இந்த மரக்கலராயன் என்ற சொல்தான் காலப் போக்கில் மரக்காயர் என்று மருஉ மொழியாக விளங்கலாயிற்று.

துருக்கியர்கள் வீரம் பொருந்திய குதிரைகளை நடத்துகிற வீரர்கள் என்பது பற்றியே இவர்களைத் தமிழர்கள் இராவுத்தர் என்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைக்க முன்வந்திருக்க வேண்டும். இராவுத்தர் என்பது குதிரை நடத்தும் வீரர் என்று பொருள் தருகிற சொல்லாகத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

பழங்காலத்தில் 'ரவுத்' என்னும் குடிப் பெயரை உடைய ஓர் இனத்தவர் இருந்தனர். அவர்கள் ஆங்காங்கே உள்ள பாளையக்காரர்களிடம் போர்வீரர்களாக இருந்தனர். அந்தப் பெயரின் திரிபே பிற்காலத்தில் இராவுத்தர் என வழங்கிற்று என்பாரும் உளர்.

கன்னடியர்களில் சிலர் 'ரவுத்' எனும் மரபு வழி வந்தவராவர். இம்மரபுப் பெயர் வீரத் தொடர்புடைமையைப் புலப்படுத்துவதாகும். இதிலிருந்தே 'இராவுத்தர்' ஏற்பட்டது என்றும் சொல்வதுண்டு.

- குற்றாலம் வி. சம்பந்தன்

''ஐயோ அது வேறே தண்டமா?'' என அலறினாள் தாய்.

''தண்டமா? 'தட்சிணை'ன்னு சொல்லு. போடற வாய்க்கரிசியைப் போட்டால்தான் வர்ற பணம் வழியில் தங்காமல் வந்து சேரும்!''

''இப்படியெல்லாம் லஞ்சம் குடுத்தே காரியம் ஆகணும்னு எவ்வளவுதான் குடுக்கறது...எவ்வளவுதான் நமக்கும் மிஞ்சறது?'' பெண் மனம் புள்ளிக் கணக்குப் போடத் தொடங்கி விட்டது.



அதிசயச் சட்டை!

அந்த அரசருக்கு எப்பொழுதும் துன்பம். ஒரு வேதாந்தியை யோசனை கேட்டார். "உன் ராஜ்யத்துக்குள்ளே போதுமென்ற மனத்துடனுள்ள ஒருவனைக் கண்டுபிடித்து அவனது சட்டையை வாங்கி அணிந்து கொண்டாயானால், துன்பம் அனைத்தும் பறந்துவிடும்" என்று வேதாந்தி சொன்னார். அரசன் எங்கெங்கோ தேடிக் கடைசியாய் அப்படிப்பட்ட ஒரு மனிதனைக் கண்டுபிடித்தார். ஆனால் அவனிடம் சட்டையே இல்லை!

— தங்கசங்கரபாண்டியன்

"லஞ்சம்னு அர்த்தமில்லேடி. காணிக்கை. சாமி வரம் குடுத்தாலும் பூசாரி வரம் குடுக்கணுமே... லாபத்துக்குத் தருந்த விகிதாசாரத்திலே எல்லாரும் லஞ்சத்தைத் தள்ளித் தள்ளித்தான் இவனுக்கு இந்த வீடும் காரும் தோட்டமும்! உனக்கென்ன தெரியும் உலகத்தைப் பத்தி?"

இந்தக் கேள்வி தன்னைப் பார்த்துக் கேட்கப்படுவதாக உணர்ந்து துணுக்குற்றான் பாபு.

'உலகத்தைப் பத்தி எனக்கு என்ன தெரியணும்? எங்கப்பா செஞ்ச தப்பு என்ன? அது தெரிஞ்சாப் போதுமே!'

நடந்துகொண்டிருந்தான் பாபு. களைப்பு மிகுதியால் நாவறண்டு போகவே ஒரு சோடாக் குடிக்க வெற்றிலை பாக்குக் கடைக்குச் சென்றான். அங்கு அவன் அப்பா வேலை பார்த்த கம்பெனியின் காஷியரும் ஒரு குமாஸ்தாவும் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் பேசிக் கொண்டிருந்ததோ அவன் அப்பாவைப் பற்றித்தான்.

"நீங்க சொல்றது ஒரு வகையிலே சரிதான் சார்! ஆனால், நியாயமாகவே நடந்தாலும் காலம் ஓடறதில்லேயே... எல்லோருக்கும் கடைசியிலே ராமநாதன் கதி வந்துடுத்துன்னா...?" என்றார் மற்றவர்.

—ராமநாதன் கதி! பாபு பதறினான். 'அடப் பாவிகளா... எங்கப்பாவைப் பத்தி இத்தனை பேர் சொன்னதெல்லாம் போறுதா? நீங்க வேறே என்ன சொல்லப் போறீங்க? எவ்வளவோ பெரிய தப்புப் பண்ணினவனெல்லாம் ஜெயிலுக்குப் போகாதிருக்கிறப்போ எங்கப்பா போயிருக்கார்னா அவர் இதையெல்லாம் விட எவ்வளவு பெரிய தப்புப் பண்ணியிருக்கணும்? அவர் பண்ணின தப்பை நீங்களானும் சொல்லித் தொலைங்கோ.' பாபுவின் மனத்துள் பிறந்த வேண்டுகோளின் ஒரு பகுதிதான் இது.

"பிரைவேட் கம்பெனியா இருக்கிறதாலேதான் முதலாளி கருணை வச்சா கதிரேசனுக்கு பிரமோஷனும் ராமநாதனுக்கு ஜெயில் வாசமும் கிடைக்கிறது. காஷியர் சார்! அக்கௌண்டெண்ட் ராமநாதனைப் போல் 'ஸின்ஸியர் ஒர்க்கர்' எவன் கிடைப்பான்?"

"அவன் செக்கு மாடா இருந்ததினாலேதான் ஆடிட்டிங் கணக்குத் தயார் பண்ணறதுக்கு அவனைத் தயார் பண்ணினார் மானேஜர். முதலாளியோட நேரடிப் பார்வையிலே கணக்கெழுதச் சொன்னார். முதலாளியோ, 'வந்த பணத்துக்கெல்லாம் வரவுக் கணக்கெழுதாதே, செய்யாத செலவுக்கெல்லாம் சேர்த்துச் செலவுக் கணக்கெழுது'ன்னார். ராமநாதன் நல்ல மனுஷன். நியாயத்துக்குக் கட்டுப்பட்டவன். மாட்டேன்னுட்டான். முதலாளிக்கு எந்த இடத்திலேதான் செல்வாக்கில்லே... 'ஆபீஸ் பணத்தைக் கையாடிட்டான்'னு பழியைச் சுமத்தி உள்ளே தள்ளியாச்சு..." என்று வருத்தப்பட்டார் காஷியர்.

"காஷியர் சார்! நல்லவன் ஒருத்தனை அயோக்கியனாக மத்தவங்க கண் முன்னாலே நம்ப வைக்கிறது அவங்களுக்கு ரொம்ப ஈஸியா முடிஞ்சுடுத்து!... ஆனால் நல்லவனை நல்லவன் என்று நிரூபிக்க நம்மாலே முடியாமத்தானே போயிடுத்து...!" என்று துயர் கனக்கும் நெஞ்சுடன் துடிக்கும் வார்த்தைகளால் கூறினார் சக குமாஸ்தா.

"அப்பா! நீ நல்லவர்தானப்பா, நீ திருடனில்லையா? லஞ்சம் வாங்கலியா? கள்ள நோட்டு அடிக்கலியா? குடிகாரனில்லையா! எந்தத் தப்பும் பண்ணாமல் நல்லவனாக இருந்ததுக்கா ஜெயிலுக்குப் போனே?" என்று கதறினான் பாபு.

"கள்ளக் கணக்கு எழுதமாட்டேன்னு சத்தியத்தைக் காப்பாத்தின ராமநாதன் 'விக்டிமைஸேஷ'னுக்கு ஆளானானே!" என்று குமுறினார் காஷியர்.

அநியாயமாகச் சிறைப்பட்ட ராமநாதனுக்காக அனுதாபப்பட்டுப் பேசுவதற்கு உலகில் இரண்டொருவராவது இருக்கிறார்களே என்ற நிம்மதியில் பாபு வீட்டுக்குப் புறப்பட்டான்.

பக்கத்து வீட்டுப் பாட்டியின் துணையுடன் மறுநாள் சிறைச்சாலையில் தந்தையைக் காணப் போன பாபுவுக்குத் தன் நண்பர்கள் வீட்டில் கண்ட காட்சிகள் நினைவில் நின்றன.

"அப்பா, நீ திருடனில்லேயோல்லியோ?"

"இல்லேடா பாபூ..." என நெஞ்சம் வெடிக்கக் கதறினார் ராமநாதன்.

"இனிமேல் நான் வெளியிலே இருக்க மாட்டேம்பா..."

"பாபூ! நீ என்ன சொல்லறே?"

"நானும் உன் கூடவே இருந்திடறேம்பா. வெளியிலே இருந்தால் நானும் கெட்டவனா மாறிடுவேனோன்னு பயமா யிருக்கு. உன் கூடவே — நல்லவனாகவே இருந்திடறேம்பா!" என்று உறுதியாகக் கூறினான் பாபு.

உலகம் என்றால் என்னவென்று தெரியாமல் இருந்த தன் மகனுக்கு உலகின் மீது விரக்தியும், வெறுப்பும், மன உறுதியும் எப்படி வந்தன என்று வியந்தார் ராமநாதன்.

சித்திரமும் நகப் பழக்கமும்





கடித்துத் துப்புவதற்கு மட்டுமே நகம் ஏற்பட்டதாக நம்மில் 'நாகரிக' மாணவர்கள் பலர் நினைக்கலாம். ஆனால் ஓவியக் கலைஞர் திரு சம்பத்குமார் வரையும் சித்திரங்களுக்கு அவருடைய நகமே தூரிகை.

ஓர் அட்டைத் துண்டும் அவருடைய நகமும் ஒரு சில நிமிடங்களுக்குச் சேர்ந்தால் எதிரில் உள்ள பொருள் அப்படியே அந்த அட்டையில் வடிவெடுத்து விடுகிறது.

நக ஓவியம் தவிர சாதாரண தூரிகை ஓவியமும் தெரிந்து வைத்திருக்கும் இவருக்கு வயலினும் வாசிக்கத் தெரியும்.

தபால் தந்தி இலாக்காவில் பணிபுரியும் 44 வயதான இவர் நாகபுரியில் செகண்டரி கிரேட் உபாத்தியாயராக வாழ்க்கையை ஆரம்பித்தார். இவருடைய குரு இவரிடமே படித்த ஒரு மாணவன். ஓர் அட்டையை வைத்துக்கொண்டு நகத்தால் ஏதோ கிறுக்கிக் கொண்டிருந்த அந்த மாணவனைப் பார்த்த உபாத்தியாயர் பிறகு தாமே இக்கலையைப் பயின்று தேர்ச்சி பெற்றார். "ஓவியத்தில் கொஞ்சம் நாட்டம் உள்ள எவருக்கும் இந்தக் கலையை மூன்று நாட்களுக்குள் கற்றுக் கொடுத்து விடுவேன்" என்று சொல்லும் சம்பத்குமாரிடம் ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் இதைப் பயின்று தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

இவருக்கு உபநிஷத்துகளிலும் மற்ற தத்துவ சாஸ்திரங்களிலும் நல்ல ஞானமும் ஈடுபாடும் இருக்கிறது.


நேருஜியையும், டாக்டர் ராதாகிருஷ்ணனையும் நக ஓவியமாக வரைந்து, அவர்களுக்கே தந்து வெகுமதி பெற்றிருக்கிறார் திரு சம்பத்குமார். இவருடைய 'எலிஸபெத் ராணி'யின் வரைபடம் சென்னையில் உள்ள பிரிட்டிஷ் தூதரின் அறையில் இருக்கிறது.

"சாகுந்தலத்தில் சகுந்தலையின் தோழி பிரியம்வதை சகுந்தலையின் காதலைத் துஷ்யந்தனுக்குத் தெரியப்படுத்தத் தாமரை இலையில் நகத்தால் ஒரு கடிதம் எழுதி அனுப்பும்படி யோசனை கூறி இருப்பதால் இந்தக் கலை மிகவும் பழமையானதாக இருக்க வேண்டும்" என்று சொல்லும் இவர் தம் பெயரை ஆங்கிலத்தில் எழுதும்போது 'குமார்' என்ற வார்த்தையில் இரண்டு 'ஏ' போட்டுக் கொள்கிறார். அப்படிப் போட்டால்தான் எண் சாஸ்திரப்படி அதிருஷ்டமாம்!

கண்ணைக் கட்டிக்கொண்டு கூடப் படம் வரையும் இவரைப்பற்றி 'பிலிம்ஸ் டிவிஷன்'லார் ஒரு திரைப்படம் எடுத்திருக்கிறார்கள்.

இவர் பையில் எப்பொழுதும் சில்லறை எடுத்துச் செல்வது வழக்கம். பஸ்ஸிலோ, ரயிலிலோ டிக்கட் வாங்கவோ ஹோட்டலில் பில் கொடுக்கும்போதோ, பையில் கையை விட்டுச் சில்லறை எடுத்தால் எவ்வளவு தொகை வேண்டுமோ அவ்வளவு தொகை சரியாக இவர் கைக்கு வருமாம். இவர் வாங்கும் பஸ், ரயில் டிக்கட்டுகளில் வரும் வரிசை எண்களை 'நியூமரலாஜி' எனும் எண் சாஸ்திரப்படி கூட்டிப் பார்த்தால் ஒரு நாள் முழுதும் ஒரே எண்ணாகத்தான் இருக்குமாம்.' இதற்கு விளக்கம் எனக்கே தெரியவில்லை' என்கிறார் திரு சம்பத்குமார்! —பாபு.





கிளிப் பச்சை நிறப் புடவையில் ஜானு அன்று திகழ்ந்தாள்.

அவளுடைய சிரிப்பையும் கும்மாளத்தையும் என்றுமே ரசிக்கும் சிதம்பரம் அவளைப் பார்த்த போதெல்லாம் ராஜாவையும் நினைத்துக் கொண்டார். ஜானு ஏழை வீட்டுப் பெண். படித்திருக்கிறாள். நல்ல அழகி. ராஜா படித்துப் பட்டம் பெற்றவன். முப்பது வயதில் அவனுக்கு இருக்கும் அனுபவமும் சாமர்த்தியமும் ஆயிரத்தில் ஒருவருக்கு இருக்க முடியாது. ஏழ்மையான குடும்பத்தை ராஜா கைதூக்கி விட்டிருக்கிறான். என்றுமே தாய் தந்தையர் மீது அவனுக்குப் பக்தியும் மரியாதையும் உண்டு. காசில் கெட்டி. அநாவசியமாகக் காலணா செலவு செய்ய மாட்டான்.

ஜானு தனக்கு நேர்ந்த விபத்தைப் பற்றிச் சொன்ன இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, ராஜா சிதம்பரத்தைப் பார்க்க வந்திருந்தான். அன்றையிலிருந்தே, அவன் வந்த பொழுதெல்லாம் சிதம்பரம் அவன் இஷ்டப்படி நடந்து கொண்டிருக்கிறார். ஜானுவும் ராஜாவின்மேல் வெறுப்பைக் காட்டும் வகையில் ஏதும் பேசாமலிருக்கவே, கலியாணப் பேச்சு என்று ஒன்று ஏற்பட்டால் ஜானு மறுக்க மாட்டாள் என்று சிதம்பரம் ஊகித்தார். அவளிடம் நேரடியாகக் கேட்க அவருக்குத் தைரியம் வரவில்லை. மேலும் அதற்கேற்ற காலமும் வரவில்லை.

ராஜாவுக்கு ஒரு புத்திமதி மட்டும் அவர் சொன்னார். ''நீங்கள் இரண்டு பேருமாக எதையும் முடிவு பண்ணி விடாதீர்கள். ஜானு வீட்டிலிருந்து உங்கள் வீட்டுக்கு இது பற்றிப் பேச வருவான்னு நான் எதிர்பார்க்க முடியாது...... ஏன்னா கலியாணத்துக்கு இவளுக்கு முன்னாலே ஒருத்தி நிற்கிறாள். அதனாலே லோக சம்பிரதாயத்தை மறந்து விட்டு, உன் அம்மா அவள் வீட்டுக்குப் போகட்டும்.....''

''பெண் வீட்டார்தான் வரணும் என்கிற.....'' என்று இழுத்தான்.

''அதைத்தான் சொன்னேன், லோக சம்பிரதாயத்தை மறக்கணும்னு. இதனாலே உனக்கோ, உன் அம்மாவுக்கோ ஒரு அவமானமுமில்லை. ஒவ்வொரு ஜாதியிலே ஒரு வழக்கம்..... எந்த வழக்கமும் சிலாக்கியமுமில்லே; எதிலேயும் குற்றமுமில்லே. உனக்கு வேண்டியது நீ நினைக்கிற மாதிரி ஒரு மனைவி. அவள் இவள்தான்னு உன் மனசிலே படறதிலே தப்பு இல்லே....ஆனால் அதை உலகம் ஒத்துக்கும்படியா செய்யறதுதான் விவேகம்....''

''ஆல்ரைட்..! அம்மா கிட்டே சொல்றேன்...''

''எடுத்ததும் எடுக்காததுமா வரதட்சிணை சீர்செனத்தின்னு ஆரம்பிச்சா, ஜானுவுக்கு இஷ்டம் இருந்தால்கூட அவ அம்மா வேண்டாம்னு சொல்லிடுவா.... ஜாக்கிரதை !'' என்றார் சிதம்பரம்.

''சரி, ஸார்...!'' என்றான் ராஜா.



மூன்றாவது பரிசு நாவல்

மணக் கோலம்

சி.வி.ஜூர்

ஒருநாள் தபால் நிலையத்தை விட்டு வெளியே வரும்போது ஜானு, ராஜா தனக்காக நின்று கொண்டிருப்பான் என்று எதிர்பார்த்தாள். தபால் நிலையத்திலிருந்து பஸ் ஸ்டாப்புக்கு நடக்க ஐந்து நிமிடங்கள் ஆகும். அப்புறம் பஸ்ஸுக்காக ஐந்து நிமிடங்களோ பத்து அல்லது பதினைந்து நிமிடங்களோ காத்துக் கொண்டிருக்க வேண்டும். இந்தப் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் அவளுடன் இருந்து பேச வேண்டும் என்று ராஜா துடிக்கிறான்! இந்த எண்ணம் தோன்றிய போது அவள் மனமும் அதேபோலத்தான் என்பதை அவள் உணர்ந்தாள். இது வரை கடந்த நாலு வாரங்களில் நான்கைந்து தடவைகள் இருவரும் இப்படிச் சந்தித்துக் கொண்டாகி விட்டது! இனிமேல் இதைப் 'பட்'டென்று நிறுத்திக் கொள்ள இருவராலுமே முடியாதோ என்ற நிலை பிறந்தாகி விட்டது.

சிதம்பரம் மூலமாக அவள் ராஜாவைப் பற்றிய சகல விவரங்களையும் தெரிந்து வைத்திருக்கிறான். இறந்து போன காதண்டராமனிடம் அவன் காரிய தரிசியாக இருந்தான் என்று அறிந்த போது, கோதண்டராமனுக்கும் அவருடைய வீட்டுக்கும் எவ்வளவு சம்பந்தம் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தாள். அவளுடைய தகப்பனார் ஒரு காலத்தில் அவருக்குக் காரிய தரிசி. அவளுடைய குடும்பத்துடன் நெருங்கிப் பழகும் சந்தானமும் ஒரு காலத்தில் கோதண்டராமனிடம் வேலை பார்த்திருக்கிறான்! இப்போது, அவளை விரும்பி நாடிவரும் ராஜாவும்கோதண்டராமனிடம் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்தவன்!

இவற்றை யெல்லாம்விடக் கோதண்டராமன் எழுதி வைத்திருந்த உயிலின் விசேஷம்தான் அவள் மனத்தில் மோதி எழுந்தது.

பங்களாவுக்குப் பின்புறத்தில் இருக்கும் இரு. சிறு வீடுகளில் ஒன்று அவர்களுக்கு! இன்னொன்று? ராஜாவுக்கு! தெய்வமே பார்த்து ஜானுவையும் ராஜாவையும் அருகருகே சேர்த்து வைக்கிறதோ?

இன்னொர் எண்ணமும் மனத்தில் உந்திக்கொண்டு வந்தது. சந்தானம் லேசாக அவளுடைய காதுகளில்மட்டும் ஒரு ரகசியத்தைச் சொல்லி யிருக்கிறான்! சீதாவைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை ரவியிடம் தோன்றி யிருக்கிறதாம்! இது



ஜானுவைத் தவிர வீட்டில் யாருக்கும் இன்னும் தெரியாது. அம்மாவின் மன நிலையில் இப்போதே இதைச் சொல்லி வைத்து, அவளும் மனப்பால் குடிக்க ஆரம்பித்து, கடைசியில் ஏமாற்றமாக முடிந்தால் அவளால் அதைத் தாங்க முடியாது என்று சந்தானம் இன்னும் வெளியிடவில்லே. தான் சொல்லுவதைவிட ரவியே நேரடியாகச் சீதாவிடம் தன் விருப்பத்தைத் தெரிவிப்பதுதான் மேன்மையானது என்று சந்தானம் அவளுடைய அக்காவிடம் கூட ரவியின் உள்ளக் கிடக்கையை அறிவித்ததில்லே.

எதைப் பற்றி எண்ணினாலும் அதில் கோதண்டராமனே, அவருடைய குடும்பமோ சம்பந்தப்பட்டிருப்பதைக் கண்ட ஜானு, அதே ஒரு நல்ல காலத்தின் அறிகுறி என்று எண்ணினாள்.

அன்று ராஜாவை எதிர்பார்த்தது, வீண் போயிற்று. ஆனால் மறுநாள் அவன் எதிர்பார்க்காதபோது, அவனைக் கண்டாள் ஜானு.

''நேத்து வருவேன்னு நெனைச்சேன்...''

''முடியல்லே, ஜானு... யூ ஷுட் எக்ஸ்க்யூஸ் மீ.''

ஜானு கலகலவெனச் சிரித்தாள்.

''நீ இப்படிச் சிரிக்காதே...''

''ஏன்?''

''சிரிக்கிறபோது என் கை துருதுருவென்கிறது...''

''உங்கள் கையை அது எங்கே இருக்கணுமோ அங்கேயே வைத்துக் கொள்ளுங்கள்.''

''ஏன்? பயமாக இருக்கு! இல்லியா?''

''இந்த ஜானுவுக்குப் பயம்னு என்னன்னு தெரியாது... எதற்கும் துணிந்தவள் நான்... ஆனல் சட்ட திட்டத்துக்கும் மானம் மரியாதைக்கும் என்றைக்குமே தலே வணங்குகிறவள்.''

''ஐ ஆம் ஸாரி, ஜானு...''

''பரவாயில்லே... நான் உங்களோடு பேசிண்டு வரேன், அதுவும் சிரிச்சுப் பேசறேன் என்பதற்காக, நீங்க என்னைத் தப்பாக எடை போடப்படாது. அதைத் தெரியப்படுத்தறேன், அவ்வளவுதான்...''

''புரியறது, ஜானு...''

''என் அக்காவுக்கு ரெண்டு தடவை கல்யாணம் நிச்சயமாகிக் கடைசி நிமிஷத்திலே நின்னு போச்சு. அப்போ எப்படி இருந்திருக்கும்னு உங்கமாதிரி ஆம்பிளேகளுக்குப் புரியாது...''

''நீ சொல்றது எனக்குப் புரியறது.. உனக்கும் அது மாதிரி நடக்காம இருக்கணும்னு நீ பயப்படறே...''

''நான் அதுக்காகப் பயப்படல்லே. நான் என் மனசிலே இன்னும் ஒரு முடிவுக்கும் வராததாலே, நம்பிக்கையோ, ஆர்வமோ இன்னும் உதிக்கவில்லே...''

''அப்போ!''

''இதிலே அவசரப்பட்டுச் செய்யறதுக்கு அவசியமே இல்லே... எனக்கு ஒரு அக்கா இருக்கிறாள்...''

''நான் பொறுமைசாலி ஜானு.''

''காரியத்தில் காட்டுங்கள்.''

''சரி...'' என்ற ராஜா தயங்கிக் கொண்டே ''இன்னும் ரெண்டு நாளிலே என் அம்மா உன் அம்மாவைப் பார்க்க வரப்போறு... உன் அம்மா என்ன சொல்லுவாளோ என்கிற பயம் தான் எனக்கு இப்போ இருக்கு...'' என்றான்.

''வரட்டும், பேசட்டும். ஆனு எனக்கு என் அக்காதான் முக்கியம். அவதான் ஓசத்தி. இன்னிக்கு நான் இந்தப் பட்டுப் புடவை கட்டிக் கொண்டிருப்பதற்குக் காரணம் அவள் சிந்திய ரத்தம் தான். தன் பசுமையான இளமையைச் சருகாக்கிக் கொண்டு, எங்களுக்கு இந்த இளமையைத் தந்திருக்கிறாள். அவளுடைய அன்புக்கும் கடமைக்கும் நான் கட்டுப்பட்டவள்.''

ராஜாவால் வாய் திறக்க முடியவில்லே. பஸ் ஒன்று வரவே, ஜானு அதில் ஏறிக் கொண்டாள்.

ஜானு வீட்டை அடைந்தபோது மணி ஐந்தே முக்கால்.

''அக்கா, அம்மா மனசு மாறி விட்டது!'' என்று கமலா அவளைக் கூடத்தில் வரவேற்றாள்.

கைப் பையை ரேடியோமீது வைத்துக் கொண்டே, ''என்னடி சொல்லறே?'' என்று கேட்டாள் ஜானு.

''புதிசா வீடு கிடைச்சிருக்கே, அங்கே எப்போ வேணுமானுலும் வந்திருக்கலாம்னு ரவியும் அகிலாவுமாக வந்து தெரிவிச்சா... அந்த அகிலா ரொம்ப 'ஸிம்பிளா' இருக்காடி. ஆனு அம்மா அப்புறமாகப் பார்த்துக்கொள்ளலாம்னு அனுப்பிவிட்டா... பணமும் அகிலாகிட்டேயே இருக்கட்டும்னு வேறே சொன்னு!''

''ஏன் அப்படிச் சொன்னு?''

''எனக்கும் அதுதான் புரியவில்லே. நான்கூட அம்மா கிட்டக் கத்தினேன்.''

''இப்படி ஒரு தீர்மானம் செய்யறதுக்கும் ஏதாவது ஒரு காரணம் இருக்கும்.... இல்லாட்டா அம்மா அப்படிப் பேசியிருக்க மாட்டாள்.'' ஜானு தன் காரியத்தைக் கவனிக்கச் சென்றாள்.





உங்கள் பாதங்களை
நாள்முழுவதும்
நாலைப் புதுமையோடு
வைத்திருப்பதைப்போல்
பிரிதொன்றில்லை!
லீலா
அளவு 10லிருந்து 1வரை ரூ. 7.95
அளவு 2லிருந்து 6 வரை ரூ. 9-50
ஸாண்டக்*
கெமிலான்*
Bata
லீலா
காலணியில் ஓர் புதுமை

ஆறே முக்காலுக்கு வந்த சீதாவிடமும் கமலா அதே பல்லவியைத்தான் பாடினாள்.

''அம்மா அப்படிச் சொன்னதிலே ஒரு ஆச்சரியமும் இல்லே. கை ஒடிந்து போன நாளிலே கெடைக்காத உபகாரம் இப்போ எதற்காம் என்று அம்மாவுக்குப் பட்டிருக்கும்'' என்றாள் சீதா.

''நீ என்ன சொல்றே?''

''நானும் நீயும் சொல்றதுக்கு என்ன இருக்கு... இந்த வீட்டிலே அம்மா போடறதுதான் சட்டம். அதை மீறிச் செய்ய நம்ம யாருக்கும் அதிகாரம் கிடையாது. அதனாலே இதைப் பற்றி நீ அலட்டிக்காதே...''

என்றுமில்லாத அழுத்தத்தோடு அக்கா சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த ஜானு ஒரு விநாடி இடுக்கிட்டாள். அதே கணத்தில் ராஜாவின் 'பக்கத்து' வீடும் கண் முன் தோன்றியது.

பாகீரதி சொன்ன சேதியைக் கேட்ட போது சந்தானம் ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். இப்படி ஒரு முடிவை அவன் அவளிடமிருந்து எதிர்பார்க்கவேயில்லே. ஏழைமையின் பிடியில் சிக்கித் தவித்து, நல்ல காலம் வருமா என்று தண்ணீருக்காக ஏங்கும் சாதகப் பட்சிகளைப் போல் ஏங்கிய பாகீரதி, விடிவு கண் முன் தோன்றுகையில் இருளையே விரும்புவதைப் போல் கண்களை மூடிக் கொள்கிறாளே?

''மாமி! நீங்கள் உங்களுக்குக் கிடைத்திருக்கிற சொத்தை ஏத்துக் கொள்றதும் கொள்ளாததும் உங்களுடைய சொந்த உரிமையினால் ஏற்படுத்திக்கிற முடிவுன்னு இருந்தாலும், இந்தப் பெண்களை உத்தேசித்தாவது நீங்கள் இந்தச் சொத்தை வாங்கிக் கொண்டாலென்ன இல்லியா?'' என்றான் அவன்.

''சந்தானம்! என் மனசிலே தோணிடுத்து, இதை நாம் ஏத்துக்கறது சரியில்லேன்னு.... இதனாலே என்ன நஷ்டம் எனக்குப் புதுசா வரறது? ஒண்ணுமில்லே. மனசாலே நெனைச்சிருக்கிற லாபத்தை நாம் அநுபவிக்கல்லேன்னு, அது நஷ்டமாயிடுமா?''

''என்ன சொன்னாலும் ஆமோதிக்கிற எனக்கே என்னவோ இப்போ நீங்க பண்ணியிருக்கிற முடிவு நல்ல முடிவுன்னு தோணலே.....''

''அது உன் சொந்த அபிப்பிராயம்.''

''ஆனால் உங்க அபிப்பிராயத்தாலே உங்க கஷ்டம்தானே அதிகமாகிறது?''

அடித்துப் பேசுங்கள்



சட்டக்கல்லூரி ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து, ''ஒரு கேஸ் நடத்தும்போது விஷயங்கள் இருந்தால் அதை ஜூரிகளிடம் அடித்துப் பேசுங்கள், அதிலே சட்டங்கள் இருந்தால் நீதிபதியிடம் அடித்துப் பேசுங்கள்'' என்று போதனை செய்தார்.

''சட்டமும் இல்லே. விஷயங்களும் இல்லே. அப்போ......?'' என்றான் ஒரு மாணவன்.

''இரண்டுமில்லாவிட்டால் மேஜையில் அடித்துப் பேசுங்கள்'' என்றார் சட்டப் போதகாசிரியர்.

— அர்சுதமங்கலம் பாப்பா

''இந்தச் சொத்து என் பெயருக்கு வந்து விட்டால் என் மனசு எதை எதையெல்லாம் நினைச்சுக் கஷ்டப்படும் என்கிறதை ஒரு நிமிஷம் யோசிச்சுப் பார்த்தாயா? பார்த்திருந்தால் நீ இப்படிப் பேச மாட்டாய்.'' பாகீரதிக்கு ஆத்திரம் வந்தது.

''எனக்குப் புரியல்லே....''

''ஊர் அபவாதம்தான் இந்தக் குடும்பத்துக்குக் கிடைக்கும். அது வேண்டாம். கோதண்டராமன் உறவு முறைகூட இல்லாதவர். இதுக்கு மேலே எனக்குச் சொல்லத் தெரியல்லே. இதோடே விட்டுவிடு. என் பெண்கள் சாகிற வரையில் இப்படியே நின்னாலும் நிக்கட்டும். எனக்கு வீடும் வேண்டாம்; பணமும் வேண்டாம்.''

சந்தானம் அவளுடைய மனத்தைப் புரிந்து கொண்டான். ஓர் ஏழையின் மனத்தில் இவ்வளவு ஐசுவரியமா?

''மாமி! நீங்கள் லட்சத்தில்... இல்லே இல்லே.... கோடியில் ஒருவர்!''

அவனுடைய புகழுரையைக் காதில் வாங்கிக் கொள்ளாதவளைப் போல் பாகீரதி, ''தயை செய்து எப்படிச் சொல்லணுமோ அப்படிச் சொல்லிவிடு ரவிகிட்டே.... அவனுக்கு இதனாலே என் மேலே திருப்தி உண்டாறதோ அலுப்பு உண்டாறதோ எனக்குத் தெரிய வேண்டாம். எனக்குக் கோதண்டராமனின் சொத்து வேண்டாம். இதை நான் நெஞ்சிலே எப்போதும் தீபமாக இருக்கிற சீதாவின் அப்பா மீது ஆணையாகச் சொல்கிறேன்....'' என்றாள்.

அவளுடைய வார்த்தைகளின் அழுத்தத்தையும், அப்போது அவளுடைய கண்களில் வீசிய ஒளியையும் கண்டு சந்தானம் ஒரு கணம் பயந்து போய் விட்டான்.

''ரவி ரொம்ப நல்லவன்....இதைக் கேட்டால் வருத்தப்படுவான்.''

''அவன் பத்தரைமாற்றுத் தங்கம்னு எனக்கு அன்னிக்கு ஒரு தரம் பார்த்த திலேயே தெரிஞ்சுடுத்து. அந்தப் பொண்ணும் கர்வமில்லாத பெண்ணுக இருக்கா. அதனுலேதான் சிநேக பாவத்திலேயே என் தீர்மானத்தை உன் மூலமாகச் சொல்லிடணும்னு எனக்குத் தோணித்து.....''

''.'எடுத்துக் கொள்ளாவிட்டால் நமக்குத்தான் லாபம்'னு ரவி நினைக்க மாட்டான்.... அப்படி நினைக்கிற சின்ன புத்தியே அவனுக்குக் கிடையாது என்று சொல்கிற மாதிரித்தான் அவனும் ஏதாவது சொல்லுவான்.....''

''நான் என்ன பண்றது? எனக்குப் பணம் இல்லே. அந்தஸ்து இல்லே. கௌரவமும் மானமுமாவது இருக் கட்டுமே!'' இப்போது பாகீரதியின் குரல் தீனமாக, கதறுவது போல் ஒலித்தது.

''சரி மாமி! நான் விஷயத்தை விவரமாக ரவிகிட்டே சொல்லிவிட றேன். இதைப் பத்தி நீங்க இனிமேல் கவலைப்பட வேண்டாம்!''

அன்றிரவே ரவியைச் சந்தித்து எல்லாவற்றையும் சந்தானம் கூறிவிட் டான். அவனும் அகிலாவும் திடுக் கிட்டுப் போனுர்கள். உண்மையான காரணத்தையோ, பாகீரதியின் உள்ளத் தில் குமுறுகின்ற உணர்ச்சிகளையோ— தன்னுல் அறிந்து கொள்ள முடிந்த உணர்ச்சிகளை — சந்தானம் எடுத்துச் சொல்லவில்லே.

''பணமும் வேண்டாம் என்கி ருளா?'' என்று கேட்டாள் அகிலா.

''ஒன்றுமே வேண்டாமாம்.....''

ரவி யோசனையில் ஆழ்ந்தான். யாருமே எதிர்பார்க்க முடியாத முடிவை அல்லவா பாகீரதி செய்திருக் கிருள்! அவனுடைய மதிப்பில் அவள் அந்தக்கணமே உன்னதமான ஸ்தானத் துக்கல்லவா உயர்ந்து விட்டாள்?

''சீதா என்ன சொல்லுகிருள்?'' என்று ரவி கேட்டான்.

''அவளுடைய அபிப்பிராயத்தை நான் தனியாகக் கேட்டேன்! அவள் அம்மாவைவிட ஒரு படி மிஞ்சுகிருள். அம்மா விரும்பாதது தங்களுக்கு எதற்கு என்று கேட்கிருள்!''

''சந்தானம்! சீதாவும் அசடா?'' என்று கேட்டாள் அகிலா.

''அகிலா, நீ பேசாமல் இரு!'' என்ற ரவி, ''என்ன செய்தால் பாகீரதியின் மனம் சந்தோஷம் அடை யும்? அவள் கண்ணீர் இந்தக் குடும் பத்தை அழிக்கக் கூடாது. அவளுடைய திருப்தியும் மனச் சந்துஷ்டியும்தான் இப்போ முக்கியம்.... நீ என்ன சொல்றே, அகிலா?'' என்ருன்.

''ஒரே ஒரு வழிதான் இருக்கு! அந்த வழியை அப்பாகூட நினைச்சுப் பார்க் கல்லே!'' என்று சொல்லி விட்டு, அவிழ்ந்த பின்னலைப் பின்ன ஆரம்பித் தாள் அகிலா.

''என்ன வழி?'' என்று கேட்டான் ரவி.

''நீதான் அன்னிக்கெல்லாம் சீதா மாகாத்மியம் பாடினுயே! புற அழகைவிட உள் அழகுதான் மேன்மை யானது என்ருயே!''

''ஆமாம்! இன்னும் சொல் கிறேன்......''

''சீதா இப்போ இருக்கிற நிலேயிலே வாடி வதங்கின மாதிரி இருக்கிருள். கொஞ்ச நாட்கள் போனுல், அவள் மனசிலே உண்மையான சந்தோஷம் பொங்கினுல் புற அழகும், உள் அழகு மாதிரி ஆகிவிடும்...உன் கண்ணுக்கு அப் புறம் வித்தியாசம்கூடத் தெரியாது!''

ரவி மௌனம் சாதித்தான்.

அகிலா கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் துடிப்பவளைப் போல், ''அப்பா சாகிற வரைக்கும் உனக்குக் கலியாணம் பண்ணி வைக்க வேண்டும் என்று தலே கீழாக நின்ருர்.. நீ என்னவோ சரித்திர ஆராய்ச் சின்னு ஊர் ஊரா அலேஞ்சுண் டிருந்தே.... இப்போ உன் மனசுக்கு ஏத்தபடியா ஒருத்தி உள்ளங்கையிலே இருக்கா. நீ ஏன் அவளேக் கலியாணம் செய்து கொள்ளக் கூடாது?'' என்று மூச்சு விடாமல் கூறினுள்.

பெருமூச்செறிந்த ரவி எழுந்தான்.

''நீ என்னவோ சொக்காய் கழற்று கிற மாதிரி எளிசாச் சொல்லி விட்டாய். என்னேக் கல்யாணம் பண்ணிண்டால் அந்தப் பெண் கஷ்டப்படும். என் போக்கே அலாதி.....''

''உன் போக்கு அலாதி என்கிற ஒரு காரணத்துக்காகவே, நீ சீதாவைக் கல்யாணம் செய்து கொள்ளலாம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள், மிஸ்டர் சந்தானம்?''

''இது ஸீரியஸ் பிராப்ளம்.... நான் எப்படித் தலேயிடறது?''

''அப்போ நீங்கள் ஒரு கோழை!'' என்ற அகிலா, ''அண்ணு! நான் நீயாக இருந்தால், தைரியமாக இதைத் தான் செய்வேன். அம்மாவுக்கும் திருப்தி. பெண்ணுக்கும் வாழ்வு கிட்டிய இன்பம்.... நம்ப அம்மாவும், நீ கல் யாணம் செய்து கொள்ளுகிருய் என்று

கேட்டாலே இந்தத் துக்கத்திலேயும் சந்தோஷப்படுவாள்.''

''அகிலா. நீ ரொம்ப வேகமா ஓடறே.... கொஞ்சம் நிதானமா இரு. ஐம்பதாயிரம் ரூபாயையும் ஒரு வீட்டையும் திருணமா மதிச்சு, காலாலே உதறித் தள்ளின பாகிரதியைப் பற்றி நாம் நினைக்கல்லே. அவள் பெண் தர மறுத்தால்?''

அகிலா வெகுண்டாள்.

''அவளை அவள் செய்ததற்கு இது வரையில் நானும் பாராட்டினேன். ஆனல், உன்னை மாப்பிள்ளையா ஏத்துக்க மாட்டேன்னு அவள் நா அசைச்சால் அவ மனுஷப் பிறவி இல்லேன்னு அவள் முன்னுலேயே கத்துவேன்......''

''அகிலா! பதற்றப்படாதே...... ரெண்டு நாள் டைம் கொடு. எனக்கே கொஞ்ச நானா இந்த மாதிரி எண்ணம் உண்டாகியிருக்கு. சந்தானத்திடம்கூடச் சொல்லியிருக்கிறேன்.... ஆனல், தீர்மானமா ஒரு முடிவை எடுக்கக் கொஞ்சம் டைம் வேண்டும். வாட் டு யூ ஸே சந்தானம்?''

''நான் சம்மதிக்கிறேன்.....''

நான்கு நாட்கள் சென்றன.

சந்தானத்தை வரவழைத்த ரவி, தன்னுடைய முடிவை வெளியிட்டான்.

அம்முடிவுடன் சந்தானம் வீட்டை அடைந்தபோது, பாகிரதியும் சீதாவும் கூடத்தில் இருந்தார்கள்.

''மாமி, ரவி புதுசா ஒரு சொத்தை உங்களுக்குத் தரலாம்னு நெனைக்கிறுன்....'' என்ற பீடிகையுடன் சந்தானம் ஆரம்பித்தான்.

பாகிரதி விழித்தாள். சந்தானத்தையும் சீதாவையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''மாமி! ரவி சீதாவைக் கலியாணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறுன்!''

சிலையாகிப் போன பாகிரதி ஒருவாறு சமாளித்துக் கொண்டு கேட்டாள்: ''நிஜமாகவா? சீதா அவ்வளவு கொடுத்து வைத்தவளா?''

சந்தானம் கொண்டு வந்த செய்தியில் பாகிரதியின் மனம் கற்பனையை மீறிய மகிழ்ச்சியில் தவித்தது. இது மூன்றுவது தடவையாகச் 'சீதாவுக்கு நிச்சயிக்கப்படுகிற கலியாணம், அது நல்லபடியாக நடந்தேற வேண்டுமே என்ற 'கவலைகூட அவளுக்கு உண்டாகவில்லை. முதல் இரண்டு தடவைகளிலும் பாகிரதியே அரும் பாடுபட்டு, வரனைத் தேடி மனித சக்தியால் சீதாவின் திருமணத்தை நடத்திவிடலாம் என்று மனப்பால் குடித்திருந்தாள். ஆனல் தெய்வம் இரு தடவைகளிலும் குறுக்கிட்டது. இப்போது கிடைக்க இருக்கும் சொத்தை உதாசீனப்படுத்திவிட்டு, இருண்ட வாழ்க்கையில் என்று விடிவு பிறக்குமோ அதுவரையில் காத்திருக்கலாம் என்று முடிவு செய்திருக்கையில், திடீரென்று ஓர் அதிர்ஷ்டப் புயல் அடிக்கிறது. சீதாவை ஒருவன் மணந்து கொள்ள முன்வருகிறுன். அவன் ஒரு பணக்காரன் என்ரே, கோதண்டராமனின் பிள்ளை என்ரே அவள் மனம் இதில் லயிக்கவில்லை. அவள் பார்த்திருக்கிற ரவி, அவள் சந்தித்துப் பேசியிருக்கிற ரவி உண்மையில் ஒரு மனிதன். மனிதத் தன்மைகளெல்லாம் நிறைந்தவன். முதன் முதலாகச் சீதாவுக்கு வரனுக வாய்த்தவன் ஓர் இளைஞன். ஆனல் அவனைப் பற்றி விசேஷமாகச் சொல்வதற்கில்லை. இரண்டாவது தடவை முதுமைப் பருவத்தின் வாசலில் நிற்பவன் கிடைத்தான். இரண்டையும் ஒதுக்கி விட்டு இப்போது தெய்வமே ஒரு மனிதனைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. படிப்பும், படிப்புக்கேற்ற பண்பும் கொண்டுள்ள ரவியை விட யார் அவளுக்குச் சிறந்த மருமகனுக வர முடியும்?

ஒரு வேளை ரவி, அவளுடைய குடும்பத்தின் மீதுள்ள பச்சாத்தாபத்தால்தான் இப்படி ஓர் ஆசையைச் சொல்லியிருக்கிறுனே என்ற கேள்வி அவளுள் எழத்தான் எழுந்தது. ஆனல் அவள் அக்கேள்வியை அடுத்தகணமே மறந்தாள். கருணையும் பச்சாத்தாபமும் பணத்தை விட்டுக் கொடுக்கலாம்! ஆனல் எவனும் தன் வாழ்க்கையை அதற்காகப் பணயம் வைத்துவிடமாட்டான் என்று பாகிரதி தெளிந்தாள். **(தொடரும்)**

கேள்விக்கேற்ற பதில்



விக்டர் ஹியூகோ தமது படைப்பான ''ஏழை படும்பாடு'' புத்தக விற்பனை எப்படி இருக்கிறது என்பதை அறிவதற்காகப் பதிப்பாளருக்கு ஒரு கடிதம் அனுப்பினர். கடிதத்தில் ஏதும் எழுதாமல் ''?'' மட்டும் போட்டு அனுப்பினர். பதிப்பாளரிடமிருந்து ஹியூகோவுக்கு ரத்தினச் சுருக்கமாகப் பதில் வந்தது. ''!'' என்று மட்டும் இருந்தது அந்தப் பதில் கடிதத்தில்.

—தகவல்: தங்க. சங்கரபாண்டியன்

பூவிதழ்கள்

எஸ். லட்சுமிசுப்பிரமணியம்

சுசீலா வேலைக்குக் கிளம்பிவிட்டாள். ஒரு மணி நேர இரயில் பிரயாணம். அதன் பின் பதினைந்து நிமிஷங்கள் பஸ்ஸில் போக வேண்டும். காரியாலயத்துக் கடிகாரம் சற்று வேகம். அவள் தன் இடத்தில் போய் அமருவதற்கும் மணி பத்தரை அடிப்பதற்கும் சரியாக இருக்கும்.

கோபால் விடியிருள் கலையும் வேளையிலேயே கிளம்பிப் போய்விட்டான். அவன் வேலை பார்க்கும் தொழிற்சாலையில் காலை எட்டு மணி சங்கு ஊதுவதற்குள் போய்ச் சேர வேண்டும். அவன் போக வேண்டியதும் மின் வண்டிதான். 'விக்டோரியா டெர்மினஸ்' அருகே தொழிற்சாலை 'வான்' ரயிலில் வந்து இறங்குபவர்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கும்.

சுசி தெரு மூலை திரும்பும்வரையில் ராஜி கையை ஆட்டிக் கொண்டிருந்தாள். அவள் கை அசைவதே போன்று, காம்பவுண்டுச் சுவர் ஓரம் காலைக் கதிரொளியில், ஒரு கை முஷ்டி அளவுக்கு ஒரு குண்டு மொக்கு, தலையை ஆட்டிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்து வியக்கும் சிரிப்பில், முகம் முழு ஒளிவிட, ராஜி கை கொட்டியபோது, அவளைக் குனிந்து அணைத்துக்கொள்ள முயன்ற சந்தியாவின் கழுத்தை, அவள் கைகள் நீட்டிப் பரிவோடு இழுத்துக் கொண்டன.

காம்பவுண்ட் கேட்டின் 'ப' வடிவ மேல் தாழ்ப்பாளை மாட்டிவிட்டு ராஜியின் விரல்களைப் பிடித்தபடி உள்ளே நடந்தாள் சந்தியா. அவளுடைய கணவர் மனேஜர் மாட்கோல்கர் காலையிலேயே கடையைத் திறக்கப் போயாயிற்று. இனி மாலை ஆறு மணி வரையில் அவளுக்கு ராஜிதான் பொழுதுபோக்கு. ராஜிக்கு அவள்தான் துணை.

உள்ளிருந்து இரும்புக் கம்பி ஒன்றைக் கொண்டு வந்து தோட்டப் பாத்திகளைக் கொத்திக் கிளற ஆரம்பித்தாள். பூவாளியைத் தூக்க மாட்டாமல் தூக்கி நீர் ஊற்றினாள் ராஜி. சன்னமாகப் பொழிந்த நீர்க் கம்பிகள் கதிரொளியில் வர்ணங்களாகச் சிதறின. கறிகாய் ஒவ்வொன்றுக்கும் மராட்டிப் பெயரைக் கற்றுக் கொடுத்திருந்தாள் சந்தியா. பதிலுக்கு அவளுக்குத் தன் கொச்சை மொழியிலேயே தமிழ்ப் பெயர்களைச் சொல்லிக் காட்டுவாள் ராஜி. அவளுக்கே தெரியும். ஆனாலும் குழந்தையின் வாயால் கேட்பதில் ஒரு மகிழ்ச்சி. அவர்களுக்குள்ளே அது ஓர் அலுக்காத விளையாட்டு.

ராஜியை உள்ளே அழைத்துக் கொண்டு போய் வாசற் கதவைத் தாழிட்டாள் சந்தியா. அடுத்தது குளியல்தான். கதவை மூடிக் கொண்டு குளிக்கப் போய்விட்டால், குழந்தை பயந்து கொண்டு அழுவாள். அதனால் அவளையும் அழைத்துக் கொண்டு உள்ளே நிற்கவைத்தபடிதான் குளிக்க வேண்டும். அவள் மேல் நீரை வாரி இறைப்பாள் ராஜி. முதுகில் சோப்புத் தேய்த்து விடுவாள். முகம் நிறையச் சோப்பு நுரையோடு, கரு விழிகளை உருட்டிக் காட்டுவாள் சந்தியா. ராஜிக்குப் பிடித்தமான விளையாட்டு அது. கைகொட்டிச் சிரிப்பாள் அவள்.

குளித்து வந்ததும் சமையல் அறை ஜன்னல் கதவுகளைத் திறக்க ஆரம்பித்தாள். பின்னால் மரங்கள் அடர்ந்து நிழல் செறிந்த பகுதியில், ஜன்னலின் கண்ணாடியில் இன்னும் பனி படர்ந்து கலையாமல் இருந்தது. சட்டத்தில் ஏறி உட்கார்ந்தபடியே கண்ணாடித் தட்டில் விரலால் பனியை அழித்துக் கோலமிடத் தொடங்கினாள் குழந்தை. ராஜிக்கு அவள் பெயரைத் தமிழில் எழுதத் தெரியும். மராட்டியிலும் எழுதத் தெரியும்.

குழந்தையின் விரல் கண்ணாடியின் மென்மையில் சறுக்கி ஓடுவதைப் பார்த்தபடியே நின்றபோது அவளுக்கு மனத் திரையில் நினைவுகள் வழுக்கி ஓடி மறைந்தன.

ராஜி பிறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கோபாலும் சுசீலாவும், அந்த வீட்டுக்குக் குடி வந்து விட்டார்கள். அது வீடு கட்டிய புதிது. நண்பர் ஒருவர் சிபாரிசின்மூலம் கண்ணியமான குடும்பம் ஒன்றைக் குடியமர்த்த முயன்று கொண்டிருந்தார் சந்தியாவின் கணவர். சுசியைப் பார்த்ததுமே அவருக்குப் பிடித்து விட்டது. அந்தக் குழந்தைச் சிரிப்பும், களங்கமற்ற நேர்ப் பார்வையும் ராஜியிடம் சாயலிடும்.


அப்போது சுசியும் கோபாலும் புதிதாக மணம் செய்துகொண்டு வந்த தம்பதி. தங்களுக்குள்ளேயே காலம் அவ்வளவையும் பங்கிட்டுக் கொள்ள விரும்பும் துடிப்பு. அறைக் கதவைச் சாத்திக் கொண்டு ஒழிந்த நேரங்களில் கட்டிலில் உட்கார்ந்தபடியே இருவரும் சீட்டு ஆடினாலும் ஆடுவார்களே அன்றி, சந்தியாவிடம் பேசச் சுசீலாவுக்கு ஒழிவிருக்காது. அவளாக வலிய அவர்களுடைய சமையல் அறை வரைக்கும் போய், அவர்களுக்கென்று தின்பண்டம் எதையேனும் கொடுத்துவிட்டு வரும் சாக்கில், நின்றபடியே சிறிது நேரம் பேசுவாள்; அவ்வளவுதான்.

அவர்களிடையே பகிர்ந்து கொள்ளும் அவாவின் சாயையாகச் சிரிப்பொலி கேட்கும். இரவு நேரம் கழித்துத் திரும்பி மாடிப் படி ஏறிச் செல்லும்போது பரிமாறிக்கொள்ளும் இரகசியப் பேச்சு, இரவின் அமைதியில் மூச்சுக் காற்றாய் விட்டு விட்டு வரும். விடியற்

காலையிலேயே 'ஸ்டவ்' அடுப்பின் சத்தமும், குழாய் நீரின் பொழிவுமாக, ஒலியலைகள் சந்தியாவைத் துயில் எழுப்பி விடும்.

ராஜி பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன் கபி ஊருக்குப் போய்விட்டான். தமிழ் நாட்டில் தஞ்சாவூர் அருகே கபியின் தந்தை இருந்த ஊர், ஒருவிதத்தில் சந்தியாவுக்குக் கேள்வியில் பழக்கமானதுதான். அவர்களுக்கு நெருங்கிய நண்பர்களான கணேட்கர் தம்பதிகள் தஞ்சாவூரில்தான் குடியமர்ந்திருந்தார்கள். அங்கிருந்து வரும் கடிதங்களில் சுற்றுப்புறத்து ஊர்களின் பெயரும், காவிரியாற்றின் கரையோர அழகும் வளமும் அடிபடும்.

நினைவின் அடிவாரத்தில் நெருஞ்சக் கிளர்ச்சியாக, முதன் முதல் அவள் உணர்ந்தது, குழந்தைக் கன்னத்தின் மிருதுவும், குஞ்சுக் கைகளின் பஞ்சும், கொழு கொழு வென்ற உடலின் மென்மையும், தொடைகளின் அடிச் சதையின் பூநயமும்தான். தன்னையறியாது தனக்குள்ளே ஊறும் தாய்மையின் ஏக்கமோ, தன் நினைவில் கற்பனையில் பத்திரமாகச் சேமித்த மன உணர்வின் அசைவுகளுக்குக் கொடுத்த உருவமோ, ராஜிக்குத் தானே தாயாகிவிட்டது போன்ற நினைவு சந்தியாவுக்கு ஏற்பட்டது. அவளுடைய அன்பு மழை அனைத்துக்கும் குழந்தையே வடிகாலாக அமைந்து விட்டாள்.



அவளுக்குக் குழந்தை வளர்ப்பின் நுணுக்கங்கள் எல்லாம் தெரியும். தன் தாயிடம் தெரிந்து கொண்ட கலை அது. குழந்தைக்கு எண்ணெய்க் குளி, மருந்து உரைத்துக் கொடுத்தல், சிறு சங்கடங்களுக்கு மாற்று, யாவும் அவளுக்குக் கை வந்தவை. ராஜிக்கு எப்பொழுதேனும் உரம் விழுந்து விட்டால் தூக்கி நிறுத்தி, பிடித்துத் தட்டி, அதை, எடுப்பவளும் அவள்தான்.

''மாமி, இங்கே பாரு!''

ராஜியின் குரலைக் கேட்டு அவள் நினைவிலிருந்து விழித்துக் கொண்டாள். ஜன்னல் சட்டத்தில் அமர்ந்து அணில் ஒன்று கருமணிக் கண்ணை உருட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது. வாலை நீளச் சுருட்டி முதுகில் உயர்த்திக் கொண்டு, பின்னங்கால்கள் தரையில் படிய, முன்னங் கால்களைத் தூக்கி, அது வாயருகே பருப்பை வைத்துக் கொறித்த விதம் பார்க்க வேடிக்கையாக இருந்தது.

ராஜி உள்ளே ஓடிப் போய் இரண்டு இலந்தைப் பழங்களைக் கொண்டு வந்தாள். ஆச்சரியமும், சிறிது பயமும் பார்வையில் தேங்க அவற்றை அணிலுக்கு எட்டும்படி வைத்தாள். அணில் காலை நீட்டி எடுத்துக் கொண்டதும் கை கொட்டிச் சிரித்தாள்.

''அணில் அழகாக இருக்கு இல்லே? ரொம்பச் சமர்த்து, என்னைப்போல். ஆனா நல்லாச் சாப்பிடுகிறது இல்லியா? என்னைப் போலப் படுத்துவது கிடையாது! அப்படித்தானே?'' என்று சிரிப்பும் கொஞ்சலுமாகப் பேசினாள்.

கிண்டி மூக்கிலிருந்து நீர் கொட்டுவது போல் சதா பேச்சு. வயதுக்கு மீறிய பேச்சுத்தான். கூடவே பொத்தான் உதட்டைத் திருகி, கையை அகல உயர வீசி ஜாடைகள் வேறு. கடைசியில் ''உன் மேலே ஆசையா யிருக்கே!'' என்று கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்குவாள்.

சமையல் ஆரம்பமாகி விட்டது. ராஜியும் அவளோடு வந்து உட்கார்ந்து விட்டாள். அவளுக்குப் போட்டியாகத் தேங்காய்த் துருவல். அவளைப் போலவே காய்கறிகளையும் பழங்களையும் நறுக்க முயலும் பாவனை. ஓரக் கண்ணால் அவள் கவனித்ததும் ராஜியின் கண்கள் தாழ்ந்தன. சிரிப்பு மெதுவாய் உதட்டின் ஓர் ஓரத்தில் வர ஆரம்பித்தது. வர்ணத்தால் இழுத்த கோடுபோல் மறு நுனியில் போய் முடிந்தது.

ராஜிக்கு அவள் தயார் செய்யும் சமையலும் பிடிக்கும். சந்தியா செய்யும் மாவுப் பணியாரங்கள், லட்டு,

ஆது கூட்டு எல்லாம் அதேபோலப் பிடிக்கும். அவள் செய்தவைகளை எடுத்துக் கொண்டு மாடிக்குப் போவாள். மாடியில் தயாரான சிற்றுண்டி அவளுக்கு வந்து சேரும்.

''அம்மா செய்தது எப்படி இருக்கு பாரு!'' என்று சந்தியாவிடம் ஆசை காட்டுவாள். மேலே தன் தாயாரிடம் போய், ''அம்மா நீ சரியாகவே செய்யலே. மாமி செய்தது எவ்வளவு நல்லா இருக்கு பாரு!'' என்பாள்.

மாலை நேரம்.

சந்தியா புடவையை மாற்றிக் கட்டிக் கொண்டாள். பின்புறம் கச்சம் வைத்து அணிந்துகொள்ளும் அந்தப் பாணி ராஜிக்கு மிகவும் பிடிக்கும். நீளத் துணி ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு, அதைப்போலவே தானும் கட்டிக் கொண்டு வீடெங்கும் வரு வாள். முகம் கழுவிக் கொண்டு அவளோடு பூப்பறித்துக் கொண்டு வந்தாள். கின்னம் நிறையப் பூவைக் கண்டதும் எவ்வளவு மகிழ்ச்சி குழந்தைக்கு! அவற்றை எடுத்துத் தொடுக்கும் விரல்களையே பார்வை மேலும் கீழுமாகத் தொடுக்கப் பார்த்திருந்தாள்.

கேட்டைத் திறக்கும் சத்தம் கேட்டது. கையை உயரத் தூக்கிக் கொண்டு சிறகு விரித்த பறவை போல் ஒரே ஓட்டமாக வாசலுக்கு ஓடி விட்டாள். அவளுக்குத் தெரி யும் சசி வரும் நேரம். தாயின் காலடிச் சத் தம் மட்டுமில்லை. கேட்டைத் திறக்கும் பாவனையும், கொக்கி எழுப்பும் ஒலியின் விதமும் கூடப் புரிந்து விடுமே குழந்தைக்கு!

காலையிலிருந்து பிரிந்திருந்ததற்குச் சேர்த்து வைத்துச் சிறிது நேரம் தாயாரிடம் பேசிக் கொஞ்சித் தீர்த்துவிட்டுத்தான் திரும்புவாள். சசியும் குழந்தையை அப்படித் தனியே விட்டு விட்டுப் போனதற்குப் பிராயச்சித்தம் போல் வயிறு குளிரக் கொஞ்ச நேரம் தூக்கி எடுத்து அணைத்துச் சீராட்டிவிட்டுத் தான் அனுப்புவாள். அந்த அன்பின் பிடியில் தோளும் முதுகும் குழைய, சிரித்த முகமாகச் சந்தியாவின் புறம் ராஜியின் பெருமை ததும்பும் முகம் திரும்பும் சில நேரம்.

மாடியில் தாயும் பெண்ணுமாகச் சிரிக் கும் சத்தம் கேட்டது. அவளுள் ஒரு சிறு வேதனை தயங்கிற்று. என்ன இருந்தாலும் ராஜி அந்த வீட்டுக் குழந்தை இல்லையே? வீட்டில் குடியிருக்க வந்து போய்விடுபவர் களைப் போலத்தான் அவள் அவளோடு வந்து நேரத்தைக் கழித்து விட்டுத் திரும்பு வதும். அங்கே கொடுப்பது வாடகை. குழந் தையிடம் அவளுக்குக் கிடைப்பது அந்த அன்பு தரும் ஆறுதல். அந்த ஆறுதலை ஒட்டிக் கத்திரி வெய்யிலில் விட்டு விட்டு வீசும் தென்றலைப் போல, ஓர் இன்பம் மிளிராமல் இல்லை. ஆனாலும் அவளுக்குக் கொண்டாட அதில் உரிமை ஏதும் இல்லையே?

அன்று ஜன்மாஷ்டமி.

வீட்டில் கண்ணாடி அலமாரியில் வைத் திருந்த கிருஷ்ணன் விக்கிரகத்துக்குப் பூமாலைகளால் அலங்காரம் செய்திருந்தாள் சந்தியா. சுற்றிலும் வண்ண வண்ண விளக் குகள் பூவும் காயும் பழமுமாகத் தொங்கி மின்னின. விதம் விதமான தித்திப்புப் பண்டங்களும் செய்து வைத்திருந்தாள்.

மேல் வீட்டிலும் கண்ணன் பிறந்த தினம். தமிழ் நாட்டுப் பழக்கப்படி சீடையும் முறுக்கும் செய்து வைப்பாள் சசி. அன்று முழுவதும் ராஜி கீழே வரவில்லை. மாலையில் அவள் புரந்தரதாஸர் பாடல்கள் இரண் டொன்றைப் 'பாட ஆரம்பித்ததும்தான் இறங்கி வந்தாள். அவளுடைய இனிய கனி ரென்ற குரலில் குழந்தைக்குத் தனிப் பிரமை. உறங்கும் பம்பரம் போல், அசைவின்றித் தன் மன மயக்கத்தில் அவளையே பார்த்தபடி உட்கார்ந்திருப்பாள்.

ராஜி வந்ததும் தானாகவே இன்பண் டங்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு விட்டாள். விரல்கள் வழிய வெண்ணெயை எடுத்துச் சுவைத்தபடியே சப்புக் கொட்டிக் கொண்டாள். மெதுவாக நடந்து வந்து மடியில் சுவாதீனமாக உட்கார்ந்து கொண் டாள் குழந்தை.

''உன்மேல் படமாட்டேன். புடவை யைத் தொட்டு அழுக்கு ஆக்கவில்லை.''

''பரவாயில்லை—''

''இன்னிக்கு அப்படி வெண்ணெயைத் தொட்டு அம்மாவின் பட்டுப் புடவையைத் தொட்டுட்டேன். முதுகில் அடி விழுந்தது.''

ராஜி தலையைத் தூக்கி அவளைப் பார்த் தாள். அழுது கலங்கிய கண்களில் ஒரு தாபம் தெரிந்தது. அவள் சமாதானத்தை வேண்டு வதைப் போல. குழந்தையின் இடையில் விரல்கள் புதையச் சேர்த்து அணைத்துக் கொண்டாள். விரல்களால் முதுகில் நீவிக் கொடுத்தாள். ராஜி விசும்பினாள்.

''பரவாயில்லை. அம்மாதானே—''

எளிதில் மறந்து மன்னித்துவிடும் குழந்தை உள்ளம். கண்ணாடியின் உள் நின்று அவளைப் பார்த்துப் புன்னகை செய்வது போன்ற கண்ணன் உருவம். அந்தத் தன்னருளைப் போல, குழந்தையின் வித்தியாசம் இல்லாத களங்கமற்ற அன்பிலும் எவ்வளவு உயர்ந்த பண்பு? தட்டிலிருந்து திரட்டுப் பாலை உருட்டிக் குழந்தையின் கையில் வைத்தாள். அவளைப் பார்த்தபடியே ராஜி அதை இதழ் களில் அழுந்த வைத்துச் சுவைக்கும்போது, அந்த இன்பத்தைப் பருகும் ஆழ்ந்த நிலையில், அதன் மயக்கில் தன்னை இழந்தாள்.

''அம்மாவும் செய்திருக்கா இதை—''


உண்மைதான். பண்டிகைகளும், இன் பண்டங்களும் மட்டும் அல்ல. இந்தக் குழந்தையின் அன்பில் திளைக்கும் அநுபவ மும்கூட இருவருக்கும் பொதுவேதான். தாமே கற்பித்துக்கொண்டால் ஒழிய அவர்க ளிடையே என்ன வித்தியாசம்?

''அம்மா என்ன செய்து கொண்டிருக் கிறாள் இப்போது?''

''வீணையை வெச்சு மெதுவாக மீட்டிக் கொண்டிருக்கா. அப்பா அம்மாவின் பின்னா லேயே உட்கார்ந்திருக்கா. அப்பாவுக்கு மட் டும் கேட்கிற மாதிரி அம்மா மெதுவா, சின்னக் குரலில் பாடிக் காண்பிக்கிறா.''

தனக்கே புரிந்த தன் ரகசியத்தில் வாயைப் பொத்திக் கொண்டு ராஜி சிரித்துக் கொண் டாள். விஷமப் பார்வையோடு அவளை இழுத்து முத்தமிட்டாள் சந்தியா. இதழ்

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1967 டிசம்பர் 18 — 1968 ஜனவரி 10

சென்னையிலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்.

மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை–1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம்பெற்ற பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

C. M. குட்டி ப்ரோப்ரைட்டர் : குட்டி டிராவல் சர்வீஸ் 38, அங்கப்ப நாயக்கன் தெரு சென்னை–1	**மெஸர்ஸ் கேரளா டிராவல்ஸ்** மாஸ்காட் ஹோட்டல் திருவனந்தபுரம்

மெஸர்ஸ் சுபேதார் & சன்ஸ்
66, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-1

நாகப்பட்டினத்திலிருந்து

1967 டிசம்பர் 19 — 1968 ஜனவரி 11

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக்கொள்ளலாம்

மெஸர்ஸ் மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும் :

பின்னி & கம்பெனி லிமிடெட் 7, அரமனைக்காரத் தெரு, சென்னை–1	**மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.** முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜண்டுகள் : பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

களில் ஒட்டிக்கொண்ட இனிய துணுக்கு களின் சுவை நாவில் — நெஞ்சில் தித்தித்தது.

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. விரை வில் ராஜியை நர்சரிப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டியதுதான்.

ஆனால் கொஞ்ச நாட்களாகவே ஊர் சரியாக இல்லை. நாளுவில் அங்கும் இங்கு மாகச் சிறு கலகங்கள். கடைகளில் சண்டை யும் கல்லெறிதலுமாகக் கலவரங்கள். எரிந்து எரிந்து அடங்கும் கனற் கொழுந் தெனச் சிறு பூசல்கள் எழுந்து மறைந்து கொண்டிருந்தன. சாம்பலின் கீழ்க் கனலாக அவற்றுக்கு அடியில், ஒரு வெறுப்பு உரு வெடுத்துக் கொண்டிருந்தது.

தினமும் வேலைக்குப் போகும்போது சுசி யின் கண்களில் இப்போதெல்லாம் ஒரு பயம் தெரியும். மனத்துள் எழுந்து அடங்கும் கலவரப் பார்வையில் புரியும். சந்தியாவின் மனத்திலும் அதன் எதிரொலி எழுந்து அடங்கும். முன்போல் அங்கே வாழ்க்கை அமைதியாக இல்லை. மனங் கலந்து வேறு பாடின்றிப் பழகும் சரளம் இல்லை. சந்தேகம் இன்றி ஒருவரையொருவர் நம்பி ஈடுபடும் மன ஒற்றுமை இல்லை. வெளியே சிறிது சிறிதாகப் பரவி நின்ற இந்த வேற்றுமை உணர்ச்சியை அறியும்போது அவள் மனம் புழுங்கும். அவளைப் பொறுத்தவரை, சுசி அவள் தங்கையைக் காட்டிலும் மனத்துக்கு நெருங்கியவள். ராஜி அவளுடைய குழந் தையைப் போல் வளருபவள். ஆனால் அதைப் போன்ற ஓர் உணர்ச்சியை அவளால் தன்னுடன் வாழும் மக்கள் எல்லோரிடமும் காண முடியவில்லையே?

இரவு நேரம். மனேகர் இன்னும் கடையிலிருந்து திரும்பவில்லை. சந்தியா படி யில் உட்கார்ந்து தெருவைக் கவனித்துக் கொண்டிருந்தாள். மாடியில் சுசியும் அவள் கணவனும் பேசும் குரல் ஒலி கேட்டது.

''அப்படியானால் நீங்கள் முடிவு செய்து விட்டீர்களா ?''

''இன்று விண்ணப்பம் அனுப்பியிருக் கிறேன். ஒரு மாதத்தில் பதில் கிடைக்கும். அந்த வேலை கிடைத்தால் சென்னைக்குப் போய்விடலாமென்றுதான் உத்தேசம்.''

அவன் யோசனைக்கு மனமில்லாது இணங்குவதே போலப் பெருமூச்செறிந்தாள் சுசி. ''எனக்கு இந்த இடத்தை விட்டுப் போக இஷ்டமேயில்லை.''

''எனக்கு மட்டும் இஷ்டமா சுசி? இங் கேயே ஒரு சின்ன வீடு கட்டிக் கொண்டு 'ஸெட்டில்' ஆகி விடலாமென்றுகூட நான் நினைத்துக் கொண்டிருந்ததுண்டு. ஆனால்—''

''எனக்குப் புரிகிறது.''

'' 'நம்மை விரும்பவில்லை; நாம் இங்கே இருப்பது பிடிக்கவில்லை' என்று தெரிந்து கொண்ட பிறகு எப்படி இங்கே இருப்பது?''

''எல்லோருமா அப்படி நினைக்கிறார்கள்?''

''இல்லை. ஆனாலும் இந்தச் சூழ்நிலையில் நீ எப்படி வேலைக்குத் தனியாகப் போவாய் ? உன்னை அனுப்பி விட்டு நான் எப்படி நிம்மதியாக வேலைக்குப் போவேன்? அடுத்த

விதியை மீறினால் பூட்டும் விசை!

பாரிசில் உள்ள போலீஸார் ''காரை நிறுத்தக் கூடாது'' என்று அறிவிப்புப் பலகை மாட்டியுள்ள இடத்தில் காரை நிறுத்துவதைத் தடுக்க ஒரு புதிய கருவியைக் கண்டுபிடித்துள்ளனர்.

காரை அவ்விடத்தில் டிரைவர் நிறுத்திய தும் காரின் சக்கரங்களை ஒரு விசை பூட்டி விடுகிறது. போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சொந்தக்காரர் அபராதம் கட்டியதும்தான் காரை எடுத்துச் செல்ல முடியும்.

தகவல்: ''எறும்பு''

வருஷம் குழந்தை எப்படிப் பள்ளிக்கூடத் துக்குப் போவாள்?''

சுசி பதில் சொல்லவில்லை. இரண்டு நிமிஷங்கள் ஊர்ந்தன. அவனே பேசினான்.

''சென்னையில் கிடைக்கக்கூடிய வேலையில் இதைவிடக் கூடுதலான சம்பளம் இல்லை. ஆனாலும் எப்படியோ பார்த்துக் கொள்ள லாம். பத்து வருஷங்களாக இங்கே வாழ்ந்து விட்டு இங்கே இருக்க முடியாமல், கூட்டைப் பிரிந்துக் கொண்டு போகும் பறவையாக—''

பேச்சு நின்று விட்டது. யோசனைகளில் ஆழ்ந்த மௌனம். சந்தியாவுக்கு உடைந்த தமிழ்தான் பேச வரும். ஆனால் பேசுவதை நன்றாகப் புரிந்து கொள்வாள். இப்போது அவர்கள் படும் வேதனை அவளுக்குப் புரிந்தது. ஆனால் தன்னை வெளியிட்டுக் கொள்ள முடியவில்லை.

மாடியில் பேச்சுடன் கலந்து வந்த பெரு மூச்சு, அதில் தொனித்த ஓர் ஏக்கம், அவள் மேல் படர்ந்து, அலை மோதி அவளையும் சூழ்ந்தது போன்ற உணர்ச்சி. மடியில் தலை யைக் கவிழ்த்துக் கொண்டாள். நினைவு பொங்கி வடிந்தது; சிறு குழந்தையைப் போலக் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந் தாள்; கடையிலிருந்து திரும்பிய மனேகர் அவள் முதுகைத் தொட்டு எழுப்பும் வரை.

ஒரு மாதம் ஆகியிருக்கும்.

அவள் கொல்லைப்புறம் நின்று பசுவின் பாலைக் கறப்பதைப் பார்த்துக் கொண்டிருந் தாள். மாடி வீட்டுக்குப் பால் அவளிடம் தான் வாங்கிக் கொண்டு போவார்கள். ராஜி யிடம் கூஜாவைக் கொடுத்து அனுப்பி விடுவது வழக்கம். அன்று சுசியே வந்திருந்தாள்.

''இன்றைக்கு விடுமுறையா?'' என்று கேட்டாள் சந்தியா.

''இல்லை. நான் வேலைக்குப் போகவில்லை.''

''என்ன விஷயம்?''

''ஒரு மாதம் லீவு பாக்கி யிருக்கிறது. அதை எடுத்துக் கொண்டு விட்டேன். அப் படியே வேலையை விட்டுவிடலாம் என்று உத்தேசம்.''

''என்னது?''

''ஆமாம். அவருக்குச் சென்னையில் இதே போல் ஒரு வேலை கிடைத்து விட்டது. அடுத்த வாரம் வேலையை ஒப்புக் கொள்ளப் போகிறார். பிறகு திரும்பி வந்து எங்களையும் அழைத்துக் கொண்டு போய் விடுவார்.''

கலியின் குரலில் ஓர் அமைதி இருந்தது. தன்னை அழுத்தும் வேதனையை அவள் வெளிக் காட்டிக் கொள்ள வில்லை. மீட்க முடியாத ஒரு சந்தர்ப்பத்துக்குத் தன்னை சடு கொடுத்துக் கொண்டு, சமாதானம் செய்து கொள்ளும் விரக்திதான் தெரிந்தது அந்தக் குரலில். அவளை நிமிர்ந்து பார்க்கவே சந்தியாவுக்குக் கூச்சமாக இருந்தது அவளுக்குத் தெரியும். ஊர் மக்களின் உணர்ச்சி அந்த வீட்டில் இல்லை. இருக்காது. என்று கலி அறிவாள் என்று சந்தியாவுக்கும் தெரியும். ஆனாலும் அப்படி ஒரு வெறியைத் தூண்டும் மனிதர்கள் அவளைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணமே அவளுக்கு வெட்கமாக இருந்தது.

''நாங்கள்கூடச் சமாதானம் செய்து கொண்டு விடுவோம். ராஜிதான் உங்களை விட்டு விட்டு —''

சந்தியாவின் கண்கள் திடீரென்று நிறைந்து கன்னங்களில் வழிந்தோடிற்று. சிந்தனைகள் உருகி உள்ளே பொங்கியது போன்ற அவஸ்தை முகத்தில் தெரிந்தது. சொல்லவும் முடியாத, மெல்லவும் முடியாததொரு சங்கடம்.

கலி பாலை எடுத்துக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

மாடிப் போர்ஷன் காலி.

வெள்ளையடிக்க வந்த ஆட்கள் சாரம் கட்டிக் கொண்டிருந்தார்கள். அன்று கடைக்கு விடுமுறை. மனோகர் ஆட்களிடம் ஏதோ சொல்லிவிட்டு உள்ளே வந்தான். காஸ் அடுப்பெதிரே, முழங் காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் சந்தியா.

எதிரே ராஜி வழக்கமாக விளையாடும் துருவல் பிடி. அங்கே உட்கார்ந்து 'வெண்ணிறத் தேங்காய்த் துருவல்களை அளைந்தபடியே ராஜி அவளைப் பார்த்துச் சிரிப்பது போன்ற பிரமை. பொங்கி வந்த விம்மலைக் கடித்து விழுங்கிக் கொண்டாள்.

''சந்தியா ! என்ன இது?''

''ஒன்றுமில்லை.''

கண்ணை மூடிக் கொண்டாள். அவன் வாங்கிக் கொடுத்த 'ஸெலூலாயிட்' பொம்மையை அணைத்தபடி ராஜி படி இறங்குகிறாள். ஏதோ ஓர் உணர்ச்சியில் அவளை மறுபடியும் தூக்கி, தழுவி, முத்தமிட்டுக் கீழே இறக்கி விடுகிறாள் சந்தியா.

''என்னை மறந்துவிட மாட்டியே?''

குழந்தை கலங்கிய கண்களோடு தலையை ஆட்டுகிறது. கலிதான் பேசுகிறாள்:

''மாமி, அவள் என்ன? எங்கள் குடும்பமே உங்களை மறக்க முடியுமோ? நீங்கள் செய்ததெல்லாம் எப்பொழுதும் எங்களுக்கு ஞாபகத்தில் இருக்கும். இங்கே இருந்த நாட்களைப் பற்றி நினைக்கும்போது, உங்களைப் போன்ற மனசு நிறைந்த மனிதர்களின் ஞாபகம் மட்டும்தான் எங்கள் மனத்தில் தோன்றும்.''

வண்டியில் உட்கார்ந்த கலி தலையை ஆட்டுகிறாள். ராஜியின் குஞ்சுக் கை அலைகிறது. முன்றானைத் தலைப்பினால் கண்ணைத் துடைத்தபடி சந்தியாவும் பதிலுக்குக் கையை ஆட்டுகிறாள்......

பழைய நினைவிலிருந்து விழித்தவளாய்க் கண்ணைத் திறந்தாள். மனோகர் அருகே உட்கார்ந்திருந்தான். அவள் மனம் யாருக்காக ஏங்குகிறது? அங்கே இருக்க முடியாமல் பிரிந்து போய்விட்ட குழந்தைக்காகவா ? அவனைக் கண்டதும் அவள் விழிகள் விரிந்தன. புதுபுதுவெனக் கண்ணீர் கன்னங்களில் மாலை மாலையாக வழிந்து அவன் மார்பை நனைக்கையில் அவன் நெஞ்சு கட்டது.

''உனக்கும் ஒரு குழந்தை பிறக்கும் துவாரகை கிருஷ்ணனைப் போல்....''

அவள் மனத் துயரின் கனம் தாங்காதது போலத் தலை வாடிக் குனிந்தது. புறங் கையில் கண்ணீர்த் துளி விழுந்து தெறித்தது.

''என் வருத்தம் அது மட்டும் அல்ல. நான் பிரிந்தது ராஜியை மட்டுமல்ல; என்னுடைய ஏக்கம் குழந்தைக்காக மட்டும் அல்ல.''

அவன் பார்வையும் குனிந்தது. அவள் வேதனை புரிபடுவது போன்ற கிளர்ச்சி நெஞ்சில் பரவியது. அந்தப் பிரதேசத்தைச் சுற்றிலும் எழுந்து கொண்டிருந்த ஓர் அருவருப்பான வேற்றுமை உணர்ச்சி அவளையும் வருத்தியதுண்டு. ஆனால் தன் எதிர் விளைவை அவள் வீட்டிலே, அவளிடம் காண்பது அதுதான் முதல் தடவை.

''நாங்கள் இருவரும் ஒரு மொழி பேசவில்லை. எங்களிடையே ஒரே பழக்க வழக்கங்கள் இல்லை. ஆனாலும் எங்களிடையே அந்தச் சின்னஞ்சிறு குழந்தை எந்த வித்தியாசத்தையும் காணவில்லை. கிருஷ்ணன் யசோதையிடமும் தேவகியிடமும் தாய்மை அன்பைக் கண்டது போல், ஓர் உணர்ச்சி ராஜிக்கு. அந்த உணர்ச்சி, அந்த இணைப்பு; அந்தப் பாலம் நிரந்தரமானது, உறுதியானது என்று நம்பிக்கை வைத்துக் கொண்டிருந்தேன். இப்போது அந்த நம்பிக்கை விழுந்து விட்டது. எனக்குள்ளே 'லொட்'டென்று ஏதோ இடிந்து ஒரு பள்ளம்விழுந்துவிட்டது.''

மனோகர் அவள் தோளின் மேல் கையை வைத்தான். அவளுக்கு அவன் என்ன ஆறுதல் கூற முடியும் ?

ஓர் இதழ் பூவாகிவிட முடியாது. நாம் எல்லோரும் வெவ்வேறு இதழ்களாயினும் ஒரு காம்பில் ஒன்றினால்தான், மணத்தை, மகரந்தத்தைப் பாதுகாக்க முடியும். அப்போதுதான் அதனின்றும் கமழும் மணத்தில் எல்லாருக்கும் பங்கு கிடைக்கும். இதழ்களின் மேல் தங்கி வண்டுகள் பருகும் தேன், அதன் வழியே பரவும் வளர்ச்சி, அவர்களுக்குக் கிடைக்கும்; தேன் சிந்தும் இனிமையோடு.

அப்படி எல்லா இதழ்களும் சேர்ந்து தேனையும் மணத்தையும் தேக்கிக் கொண்டு மிளிர்ந்தால்தான் அழகு. இல்லையெனில் ? வெறுப்பையும் வேற்றுமையையும் மறந்து, அந்த அன்புத் தேனையும் ஒற்றுமையின் மணத்தையும் போற்ற விடில்?

இதை அவனுடைய சகோதரர்கள் உணருவார்களா ?

அர்னால்டு குட்டிக்கதைகள்



தொகுத்தவர்: கு. அழகிரிசாமி

திருமாலுக்கு ஆயிரம் திருநாமங்கள் உண்டு. அவருக்கு ஆயிரம் நாமத்தான் என்று பேர். பல பெயர்கள் சொல்லி இறைவனை அழைப்பது உரிமையையும் அன்பையும் தெரிவிப்பதாகும். அதேபோல் அல்லாவுக்குந் தொண்ணூற்றொன்பது திருநாமங்கள் உண்டு. அந்தத் திருநாமங்களால் அவரைச் சிறப்பிக்கிறார்கள் முஸ்லிம்கள். ஒவ்வொரு திருநாமமும் அல்லாவின் ஒரு சீரிய குணத்தைச் சுட்டிக் காட்டுகிறது. அவரது திருநாமத்தின் பொருளை விளக்கும் முறையில் பல கவிதைகள் புனைந்திருக்கிறார் ஸர் எட்வின் அர்னால்டு. அந்தக் கவிதைகளில் சிலவற்றிலிருந்து எடுக்கப்பட்டவையே இக்குட்டிக்கதைகள். இவை கீழ்நாடுகளில் ஏற்கனவே வழங்கி வந்த கதைகளாகும். கவிஞர் ஸர் எட்வின் அர்னால்டு எழுதிய ''ஆசிய ஜோதி'' என்ற நூலைத் தமிழில் பிரசித்தம் செய்தவர் நம் கவிமணி ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை. ஸர் எட்வின் (1832-1904) பல அழகான நூல்களை இயற்றியிருக்கிறார். அவருக்கு சம்ஸ்கிருதத்தில் பாண்டித்தியமும் உண்டு. 1856 லிருந்து ஐந்து வருஷ காலம் புனா சம்ஸ்கிருதக் கல்லூரியின் பிரின்ஸிபாலாகவும் இருந்திருக்கிறார்.

ரோஜாவும் பனித் துளியும்

ஒரு ரோஜாப் பூவும் ஒரு பனித் துளியும் பேசிக் கொண்டிருந்தன:


பனித் துளி: ஏ ரோஜாவே! நீ எங்கே பிறந்தாய்? இவ்வளவு அழகாகவும் இவ்வளவு வாசமாகவும் இவ்வளவு செருக்கோடும் இருக்கிறாயே? நீ எதிலிருந்து தோன்றினாயோ?

ரோஜா: நான் மண்ணில் பிறந்தேன். நாளை விடிவதற்குள் பழையபடியும் நான் மண்ணோடு மண்ணாகக் கலந்து விடுவேன். அது சரி, என் மீது வைரத்தைப் போல் அமர்ந்திருக்கிறாயே, நீ எங்கிருந்து இவ்வளவு பிரகாசத்தைப் பெற்றாய் பனித் துளியே?

பனித் துளி: என்னைச் சமுத்திரத்திலிருந்து ஒரு மேகம் தூக்கிக் கொண்டு வந்தது; மறுபடியும் நான் சமுத்திரத்தில் போய்க் கலந்துவிட வேண்டும்.

இந்த இரண்டும் பேசிக் கொண்டிருந்ததை ஒரு மைனா கேட்டுக் கொண்டிருந்தது. உடனே அது இரண்டையும் பார்த்துச் சொன்னது:

''ஏ அல்லாவின் ரோஜாவே! நீ செத்துப் போனாலும் காற்றில் மணம் அற்றுவிடாது. அல்லாவின் பனித் துளியே, நீ இப்போது கடலில் கலக்காமல் இருந்தாலும் கடல் அழகாகத்தான் இருக்கிறது. ஆகவே, இரண்டு பேர்களும் மனச் சமாதானத்துடன் இருங்கள்.''



பச்சோந்தி

ஒரு நகருக்கு வெளியே சிறிது தூரத்தில் நான்கு பிரயாணிகள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஒருவன் அரேபியன்; ஒருவன் பாரசீகத்துக்காரன்; ஒருவன் துருக்கியன்; மற்றொருவன் கிரேக்கன். நான்கு பேர்களுக்கும் கடும் பசி, இந்த நால்வரும் தம்மிடமுள்ள பணத்தை மொத்தமாகப் போட்டு, தம்முள் ஒருவனை அனுப்பிச் சாப்பாட்டுக்கு ஏதாவது வாங்கி வரச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்கள். எதை வாங்குவது என்பதைப் பற்றிச் சர்ச்சை செய்யத் தொடங்கினார்கள்.

துருக்கியன்: உஜும் பழங்களை வாங்கி வா. அது மலிவாகவும் கிடைக்கும்; அதைவிட ருசியாக வேறு எதுவும் கிடையாது.

அரேபியன்: வேண்டாம் வேண்டாம். அனேப் கனிகளைத்தான் வாங்கி வரவேண்டும். எவ்வளவு அதிகமாக வாங்க முடியுமோ, அவ்வளவு அதிகமாக அனேப் பழங்களையே வாங்கி வா.

பாரசீகன்: அதெல்லாம் சுத்த மோசம். அங்கூர்ப் பழம்தான் சிறந்தது. அதைத்தான் வாங்க வேண்டும். அந்தப் பழங்கள்தான் விசேஷமாகக் கிடைக்கும்.

கிரேக்கன்: அது என்ன எழவு அங்கூரோ! அந்தச் சனியன் ஒன்றும் வேண்டாம். ஸ்டாபிலியன் பழங்கள் வாங்கிச் சாப்பிட்டால் தான் நன்றாக இருக்கும். அதைச் சாப்பிட்டால் நமக்கு வேறு எதுவும் வேண்டியிராது.

நான்கு பேருடைய வாதமும் முற்றியது. அடிதடியில் இறங்கும் நேரம். அப்போது அந்த வழியாகத் திராக்ஷைப் பழங்களைச் சுமந்து கொண்டு



ஒரு தோட்டக்காரனுடைய கழுதை வந்தது. இதைப் பார்த்ததும் ஒவ்வொருவனும் துள்ளி எழுந்தான். துருக்கிக்காரன் ஆவலோடு அந்தத் திராக்ஷைப் பழங்களைக் கையால் சுட்டிக் காட்டி, "அதோ உஜூம் பழங்களைப் பாருங்கள்" என்றான்.

பாரசீகன், "எல்லோரும் அங்கூர்ப் பழங்களைப் பாருங்கள்" என்றான்.

அரேபியன், "இல்லை, இல்லை. இவை அனெப் பழங்களைத் தவிர வேறொன்றும் அல்ல" என்று கத்தினான்.

"இதுதான் நான் கேட்ட ஸ்டாபிலியன் பழங்கள்" என்றான் கிரேக்கன்.

கடைசியில் நால்வரும் யாதொன்றும் சச்சரவின்றித் திராக்ஷைப் பழங்களை வாங்கினார்கள்.

எங்கே நீ சென்றாலும் ...

ஸாலமன் அரசனுடன் இந்திய அரசன் ஒருவன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான். அப்போது அவர்களின் பக்கமாக ஒரு தூதன் நடந்து சென்றான். அவன், பேசிக் கொண்டிருக்கும் அந்த இருவரையும் பார்த்து ஆச்சரியத்துடன் விழித்தான். அவர்கள் அங்கே பேசிக் கொண்டிருந்தது அவனுக்கு ஆச்சரியத்தையும் திகைப்பையும் கொடுத்தது. தூதன் நடந்து சிறிது தூரம் போய்விட்டான். உடனே, இந்திய அரசன் ஸாலமனைப் பார்த்து, "அதோ நிற்கிறானே, அந்தத் தூதன் யார்? அவன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"அவன்தான் அஸ்ரேல் என்பவன். மனித உயிர்களைக் கொண்டு செல்ல வருபவன் அவன்தான்" என்று சொன்னான் ஸாலமன்.

"அவன் என்னையே பார்த்துக் கொண்டிருப்பது, பெரிய சந்தேகத்தை அளிக்கிறது. ஆகவே, தங்களுடைய பூதம் ஒன்றை அனுப்பி, என்னை இந்தியாவில் கொண்டு போய் விட்டு விடும்படி ஆக்ஞாபிக்க வேண்டும்" என்று இந்திய அரசன் கேட்டுக் கொண்டான்.



அப்படியே ஆணை பிறப்பிக்கப் பட்டது. மரத்திலிருந்து உதிரும் அத்திப் பழம் தரையைத் தொடும் நேரத்துக்குள்ளாகப் பூதம் இந்திய அரசனைச் சோழ மண்டலத்தில் கொண்டு வந்து விட்டது.

அஸ்ரேல், ஸாலமன் அரசனிடம் சென்று பின்வருமாறு கூறினான்:

"அந்த மனிதன் தங்களிடம் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து விட்டேன். 'அவனுடைய உயிரை இந்தியாவிலிருந்து அழைத்துக் கொண்டு வா' என்று எனக்குக் கடவுள் கட்டளை பிறப்பித்திருந்தார். அவனோ இங்கே உட்கார்ந்து கொண்டிருந்தான். ஆனால் இப்போது பார்த்தீர்களா, அவனுக்கு எந்த இடம் விதிக்கப் பட்டிருக்கிறதோ அங்கேயே போய்விட்டான்!"

அஸ்ரேல் அவ்விடத்தை விட்டுக் கிளம்பி இந்தியாவுக்கு வந்தான். அரசன் இந்தியாவுக்கு வந்ததும் ஏதோ ஆபத்தின் காரணமாக இறந்து போய் விட்டான்.

பெண்ணுக்கு மன்னிப்பு

ஸலா உத்தின் என்ற ஓர் அரசன் இருந்தான். அவன் ஒரு பல்லக்கில் ஏறித் தெரு வழியாகப் போய்க் கொண்டிருக்கும்போது ஒரு பெண்ணைப் பலரும் கூடி இம்சித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவள் ஒழுக்கம் கெட்டவளாம். அந்தக் குற்றத்துக்குத் தகுந்த தண்டனை, அவள் மீது கற்களை எறிவதுதான் என்று கருதி எல்லோரும் அவள்மீது கற்களை வீசி எறிந்தார்கள். நையப் புடைத்தார்கள். கடைசியில் அவளைக் கொன்றுவிடுவதுதான் அவர்கள் நோக்கம். இந்தப் பயங்கரமான தண்டனையில் அகப்பட்ட பெண் தெரு வழியாக நடந்துகொண்டே இருந்தாள். கூட்டமும் அவளைப் பின்தொடர்ந்து கொண்டேயிருந்தது. வழியில் ஓரிடத்தில் ஒரு நாய் வெய்யிலின் கொடுமை தாங்காமல் இரைத்துக் கொண்டு படுத்திருந்தது. அந்தக் கோடை வெப்பத்தில் நா உலர்ந்துபோய் ஒட்டகங்களும் அழுதன. காக்கைகளும் அலறின. நாய் தண்ணீர் குடிப்பதற்காக ஒரு கிணற்றின் பக்கம் வந்தது. கிணற்றில் தண்ணீர் ஆழத்தில் இருந்ததால் அதன் வாய்க்குத் தண்ணீர் எட்டவில்லை. கடைசியில் ஏமாற்றத்துடன் நாய் அங்கேயே படுத்துத் தாகம் தாங்க முடியாமல் ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

இதைப் பார்த்தாள் அந்தப் பெண். தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் பொருட்படுத்தாது அந்தக் கிணற்

றின் பக்கம் சென்றாள். தன் ரவிக்கையி லிருந்த பட்டுக் கறையைக் கிழித்தெடுத்தாள். தன் காலில் கிடந்த கிண்ணம் போன்ற ஜோட்டையும் கழற்றினாள். அந்த ஜோட்டில் அந்தப் பட்டுத் துணியைக் கட்டிக் கிணற்றுக்குள் விட்டு, அந்த ஜோடு நிறைய நீர் மொண்டாள். அந்தத் தண்ணீரை நாய்க்குக் கொண்டு வந்து ஊட்டி அதன் தாகத்தைத் தணித்தாள். பிறகு அந்த நாய் எழுந்து அவளைப் பின் தொடர்ந்தது. நன்றி விசுவாசத்துடன் நடந்து வந்தது.

இதையும் பார்த்தான் ஸலாஉத்தீன். உடனே அவளை இம்சித்துக் கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து "அவளுக்குப் போட்டிருக்கும் விலங்கைக் கழற்றுங்கள். அவளுடைய பர்தா முக்காட்டைப் பழைய படியும் போட்டு, அவள் முகத்தை மூடுங்கள். அவளை அவள் வீட்டில் கொண்டு போய் அமைதியாக விட்டுவிடுங்கள்" என உத்தரவிட்டான்.



அவன் அந்தப் பெண்ணைப் பார்த்துப் பின் வருமாறு கூறினான்:

"உன்னைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பதுதான் சட்டம். ஆனால் உன்னைத் தொடர்ந்து நடந்து வரும் இந்த நாய் உன் அரிய இயல்பைப் பறைசாற்றுகிறது. மரணத்தின் வாசலில் நின்றுகொண்டிருக்கும்போது கூட உன் மிருதுவான இதயம் மரத்துப் போய்விட வில்லை. சகோதரியே! அல்லாஹ் கருணையாளர்; அப்படியிருக்க நான் உன்னிடம் கருணை காட்டாமல் இருக்க முடியுமா? ஆகவே கஷ்டங்களிலிருந்து விடுதலை பெற்று, சுதந்திர ஆத்மாவாக நீ செல்வாயாக!"

சொல்லுவது எப்படி?

ஒருவன் கோவிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும்போது, சுவர்க்கத்தையும் அல்லாவையும் பார்ப்பது போல் கனவு கண்டான். அவன் விழித்து எழுந்ததும், அங்கு இருந்தவர்களிடம் அந்த விவரத்தைச் சொன்னான்.

"அப்படியா? அப்படியானால் தாங்கள் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எங்களுக்குச் சொல்லுங்களேன்" என்று அங்கிருந்தவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

அவன் சொல்லத் தொடங்கினான்:

"எங்கு பார்த்தாலும் ஒரே ஜோதி மயமாக இருந்தது. அங்கே உலாவிக் கொண்டிருந்தேன். என்னென்னவோ கேட்டேன். அதன் பலனாக இப்போது உலகின் இயல்பையும், சகல லோகங்களின் இதயத்திலும் மூண்டு கொண்டிருக்கும் கடவுளின் அன்பு எப்படிப்பட்டது என்பதையும், எப்படித் துன்பங்கள் யாவும் ஒழிந்து இன்பமே நிலவப் போகிறது என்பதையும் அறிந்து கொண்டேன். இதற்கு மேல் என்னால் எதையும் சொல்ல இயலவில்லை. என் அநுபவத்தை ஓர் உபமானம் மூலமாகச் சொல்லி நிறுத்திக் கொள்ளுகிறேன்:



"ஒரு ரோஜாத் தோட்டம். அங்கே கொள்ளை கொள்ளையான மலர்கள் பூத்துக் குலுங்கின. அவற்றின் நறுமணமோ ஒரே போதைதான். இப்படி அப்படி என்று சொல்வதற்கில்லை. அந்தத் தெய்வ மணம் கமழும் பூக்களைப் பறித்து மூட்டை கட்டிக் கொண்டு வரவேண்டும் என்று தீர்மானித்து மலர்களைப் பறித்தேன். ஐயோ! அவற்றின் அழகும், அவற்றின் வாசமும்!...அந்தப் பூக்களை என் உடையில் கட்டினேன். மலர்களின் சுகந்தத்தை என்னால் தாங்க முடியவில்லை. அந்தச் சுகானுபவத்தில் என் பஞ்ச புலன்களும் உருகி விட்டன. தன்னை மறந்த நிலையில் என் உடையின் ஒரு நுனியை எப்படியோ நழுவ விட்டு விட்டேன். பூக்களெல்லாம் கீழே கொட்டி விட்டன. கடைசியில் உங்களுக்கு நான் எதையும் கொண்டு வர முடியாமல் போய் விட்டது."

அனுபவம்



நாம் நம்முடைய பொருள்களை எல்லாம் இழந்த பின் மிஞ்சியிருப்பதுதான் அனுபவம்.

— அரக்கோணம் தங்க. சங்கரபாண்டியன்

நமக்கு எந்தக் காரியம் ஆக வேண்டியிருந்தாலும், அதற்காகச் சம்பந்தப்பட்ட அலுவலகத்துக்கு மனுச் செய்ய வேண்டியிருக்கிறது. நமது வீட்டிலே திருமணமா? அதற்காக மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் நடத்த லைசென்ஸ் வாங்கியாக வேண்டும். லைசென்ஸ் சுலபமா கிடைத்து விடுகிறதா? போலீஸ் இலாகாவுக்கு நாலணா கோர்ட் ஃபீ ஸ்டாம்புடன் மனு எழுதி அனுப்ப வேண்டும். ஒலிபெருக்கி லைசென்ஸ் தேவையானால், அதற்கென உள்ள மனுவைப் பூர்த்தி செய்து ஒரு ரூபாய் கோர்ட் ஃபீ ஸ்டாம்பு ஒட்டிச் சமர்ப்பிக்க வேண்டும்.

குழந்தைகளைப் பள்ளியிலே சேர்க்கவும் மனு உண்டு. நமக்குக் கிடைக்கும் ரேஷன் அதிகரிக்கப்பட வேண்டுமானாலும், மனுச்செய்து கொண்டால் அன்றி நடைபெறாது.

இப்படியாக, எதற்கெடுத்தாலும் மனுச்செய்து கொள்ளும் பழக்கம் ஏற்பட்டுவிட்ட நமக்கு, நமது குடும்பத்துக்குள்ளும் இந்த மனுச் செய்யும் பழக்கம் ஏற்பட்டு விட்டால், எத்தனை சுவாரசியமாயிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்!

உதாரணத்துக்குச் சில மனுக்கள் கீழே தரப்படுகின்றன:

1

பிரசவத்துக்குப் பெண்ணைப் பிறந்தகம் அனுப்ப வேண்டாம் என்று முன்கூட்டியே ஒரு மாப்பிள்ளைக்கு மாமனார் செய்யும் மனு.



1. பெண்ணின் பெயர்: ராஜி
2. வயது: 28
3. பிரசவத்தின் எண்: 5-வது
4. ஏன் பெண்ணைப் பிரசவத்துக்குப் பிறந்தகம் அனுப்பக் கூடாது என்பதற்குக் காட்டும் காரணம்:
   ஏற்கனவே முந்திய நான்கு பிரசவத்துக்காக ஏற்பட்ட கடனே இன்னும் அடைபட்டபாடில்லை. போதாததற்கு மாமியார் வேறு பிரசவித்திருக்கிறாள்!
5. (அ) அப்படியானால் இப்போது அனுப்பவே கூடாதா: கூடவே கூடாது.
   (ஆ) அனுப்பினால்....?
   மறு ரயிலிலோ அல்லது பஸ்ஸிலோ திருப்பி யனுப்பிவிடுவேன். ஆமாம்.
   (இ) பெண்ணைப் பிறந்தகம் அனுப்ப வில்லையானால், பிரசவச் செலவு யாருடையது....?
   ஓய், மாப்பிள்ளை! நீர் வருஷம் தப்பாமல் பெற்றுத் தள்ள வேண்டியது. பிரசவச் செலவுக்காக நான் அழ வேண்டியது! நல்ல நாணயம்! என்னும் ஆனது ரூ. 50க்கு இத்துடன் ஒரு செக் அனுப்பியிருக்கிறேன். இனி என்னை நம்ப வேண்டாம்.

விசேஷக் குறிப்பு ஏதேனும் இருந்தால் குறிப்பிடவும்.

தயவுசெய்து குடும்பக் கட்டுப்பாடு அதிகாரிகளைச் சந்தித்து அவர்களுடைய உதவியை உடனே நாடவும். தாமதம் கூடாது. (இத்துடன் பிரத்தியேகமாய் எழுதப்பட்ட கடிதத்தை சௌ. ராஜியிடம் கொடுக்கவும்.)

பி. கு.: வறட்டு வேதாந்தம் தேவையில்லை. நம்மால் ஆவது ஒன்றுமில்லை என்று கூறுவது அபத்தம். நம்மால் ஆவது எவ்வளவோ இருக்கிறது.

சீனிவாசன்
(பெண்ணின் தந்தை)
கையொப்பம்



2

மனைவி புடவை வாங்குவதற்காகக் கணவனுக்குச் செய்யும் மனு:

1. எத்தனை தேவை? ஒன்றே ஒன்று.
2. நூலா, பட்டா? எல்லாம் நூல்தான்! (உங்களை மணந்து கொண்டதற்குப் பட்டு ஒரு கேடா? நாலுக்கே வழியைக் காணுமாம்!)
3. விலை விவரம்: சுமார் முப்பதுக்கு மேல், நாற்பதுக்குள்.
4. எந்தக் கடையிலே வாங்க உத்தேசம்?

கார்த்திகை டெக்ஸ்டைல்.

5. அந்தக் கடையிலே கடன் தருவார்களோ ?
பேஷாய்த் தருவார்கள்.

6. எத்தனை தவணைகளில் பணம் தரவேண்டியிருக்கும்?
மூன்று தவணைகள்.

7. (அ) பழைய பாக்கி அடைபட்டுவிட்டதா ?
இந்தக் கடையிலே ஏது பாக்கி ?
(ஆ) வேறு கடைகளில் ஏதேனும் பாக்கி உண்டா ?
ஏன் இல்லை? சித்திரை ஸ்டோர்: முப்பது; வைகாசி ஸ்டோர்: நாற்பத்தேழு; ஆனி ஸ்டோர்ஸ்: பத்தொன்பது. ஆடி ஸ்டோர்: ஏழே முக்கால்.
(இ) பழைய பாக்கியே இன்னும் கொடுபடாமலிருக்கையிலே மேலும் கடன் சுமத்திக்கொள்வது உசிதமா ?
பழைய கடைகளிலா வாங்கச் சொல்கிறேன்? இது புதுக் கடைதானே ?

8. உன் தேவையைச் சற்றுத் தள்ளிப்போட்டால் என்ன?
வீட்டிலே அமைதி நிலவ வேண்டுமானால் உடனடியாய் என் மனுவைச் சாதகமாய்க் கவனிக்கவும்.

ராஜீ
மனுதாரின் கையெழுத்து





3

சரஸா அடுத்த வீட்டு அஞ்சலையிடம் சாமான்கள் கடன் கேட்கச் செய்து கொள்ளும் மனு :

1. விண்ணப்பதார் பெயர் — சரஸா
2. தேவையான பண்டங்களின் பெயர்:
காப்பிப்பொடி, சர்க்கரை, நெய், உ. பருப்பு.
3. எவ்வளவு தேவை?
காப்பிப் பொடி — இரண்டு கரண்டி; சர்க்கரை — ஒரு டம்ளர் (தலை வழிக்காமல்); நெய் — இரண்டு டேபிள் ஸ்பூன்; உ. பருப்பு — உள்ளங்கை அளவு.
4. இதற்கு முன்பு ஏதாகிலும் பாக்கி உண்டா ?
பேசக் கூடாது. (ஆனால் எதிர் வீட்டு எச்சுமியிடம் கொஞ்சம் பாக்கி. அதைப்பற்றி இங்கு ஏன் தெரிவிக்க வேண்டும்? அது எப்போதோ வாங்கியது. அவள் மறந்தும் போயிருக்கலாம்.)
5. நீ ஏதாவது அடுத்த வீட்டு அஞ்சலைக்குக் கொடுத்திருக்கிறாயா ?
ஏன் இல்லை? உடைந்த அரிவாள்மனை, துருப்பிடித்த தேங்காய்த் துருவல், அறுந்த தாம்புக் கயிறு, உலர்ந்த கறிவேப்பிலை.
6. பிரத்தியேகக் குறிப்பு : அஞ்சலை இல்லை என்று கூறட்டும். பிறகு வெளியிடுகிறேன், தன் கணவனை அடிக்க மோர் கடையும் மத்தை ஓங்கிய செய்தியை.

சரஸ
மனுதாரின் கையெழுத்து





4

திடுதிப்பென்று முன் எச்சரிக்கை ஏதுமின்றி ராஜா எடுத்துக் கொள்ளும் வேலைக்காரி வாசுகிக்கு எஜமானியம்மாள் தையல்நாயகி செய்து கொள்ளும் மனு:

1. எஜமானியம்மாளின் பெயரும் வீட்டு விலாசமும்.
தையல்நாயகி,
நெ. 12. கல்லில் நார் உரித்தான் வீதி,
கல்மண்டபம், சென்னை

2. வேலைக்காரி வாசுகி இதுவரையில் சொல்லாமல் நின்ற நாட்கள் :
பிரதிமாதமும் சராசரி ஏழு நாட்கள்.



3. வேலைக்கு வராமல் நின்ற நாட்களுக்குச் சம்பளப் பிடித்தம் உண்டா?

கிடையாது. சம்பளத்தைப் பிடிப்பதாய்க் கூறினால், அவள் கையில் சிக்கும் பாத்திரங்களுக்கு வந்தது வினை!

4. சம்பளம் தவிர வேறு கிடைக்கக்கூடிய சலுகைகள்

பிரதி தினம் இரு வேளை காப்பி. மிச்சம் உள்ள சாதம், குழம்பு முதலியன. சற்றுக் கிழிந்த புடவை, ஜாக்கெட் இவையும்.

5 இந்த மனுவின் நோக்கம் என்ன?

ரஜா தேவைப்பட்டால், மூன்று நாட்கள் முன்னதாய்த் தெரிவிக்க வேண்டும். அல்லது வேறு நபரை நியமித்து விட்டுச் செல்லட்டும்.

6. பிரத்தியேகக் குறிப்பு:

நான் கொடுக்கும் சலுகைகளின் பொருட்டுக் கூட என் மீது நன்றியுணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டாம். அவளைப் போல் நானும் ஒரு பெண். அதுவும் சதா நோயாளி. ஏழு பிசாசுகளுடன் (என் குழந்தைகள்தான்!) மல்லாடுகிறேன். அதற்காகவாவது என் மீது இரக்கம் காட்டட்டும். அதுபோதும். ரஜா நாட்களைச் சற்றுக் குறைத்துக் கொள்ளவும். கோடி புண்ணியம் உண்டு.

தையல்நாயகி
கையொப்பம்

5

மாடியிலே குடியிருக்கும் மதுசூதனனுக்கு, கீழே குடியிருக்கும் கும்பேசுவரன் ரேடியோ சங்கீதம் சம்பந்தமாய் அனுப்பும் மனு:

1. ரேடியோ ஒலிக்கும் நேரம் -

எந்நேரமும்.

2. கேட்கும் இசையின் இனம்:

கர்நாடகம்.

3 குடியிருப்பவர்களுக்கு ஏற்படும் இன்பம் அல்லது துன்பம்:

'இன்பம்' அடிக்கப்பட்டுள்ளதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

4. கோரிக்கை என்ன?

சினிமாப் பாடல்களை வைப்பதாய் இருந்தால் வையும். இல்லையேல் எனக்கு வேறு வீடு பார்த்துத் தாரும்.

5. என்னுடைய கோரிக்கைக்குச் செவிசாய்க்கா விடில் நான் செய்யப் போவது என்ன தெரியுமா?

சிவனே என்று சகித்துக் கொண்டிருப்பதுதான்!

கும்பேசுவரன்
கையொப்பம்

6

பால்காரர் பார்த்தசாரதிக்கு வாடிக்கைக்காரர் விசுவநாதன் மனு:

1. வாடிக்கைக்காரர் பெயர்:

விசுவநாதன்

2. (அ) வீட்டு எண்: 5

(ஆ) வீதி நடு வீதி

(இ) பேட்டை:

நாராயண நகர், சென்னை—65

3. பால் தேவையான விவரம்:

காலை ஒரு லிட்டர்
மாலை அரை லிட்டர்

4. பசுவா, எருமையா?

இது என்ன ஐயா, ஒரு கேள்வி? உம்மிடம் எல்லாம் ஒன்றுதானே?

5. முன் பணம் எவ்வளவு தர முடியும்?

நீரா, நானா?

6. இதற்கு முன்பு யாரிடம் பால் வாங்கினீர், எவ்வளவு? பாக்கி ஏதாவது உண்டா? (முடியுமானால் உமது வீட்டு மறுபகுதியில் குடியிருக்கும் நபரிடம் ஓர் அத்தாட்சி வாங்கி, மனுவுடன் இணைக்கவும்.)

இது (சம்பந்தமிருப்பினும்) அநாவசியமான கேள்வி என்பது என் கருத்து. என் வீட்டு மறு பகுதியில் குடியிருக்கும் பேர்வழி என் ஜன்ம விரோதியாயிற்றே! அவரிடம் அத்தாட்சிவாங்க முடியுமா? (வேணுமானால் என் மனைவியிடம் வாங்கி அனுப்பட்டுமா? அவளுடனும் சண்டை — பேச்சு வார்த்தை கிடையாது கடந்த இரண்டு மணி நேரமாக!)

7. பிரதிமாதம் எந்தத் தேதியில் பணம் கொடுப்பீர்கள்?

இதை எப்படி நிர்ணயித்துக் கூற முடியும்? ஏனெனில், என் கம்பெனி அதிகாரிகளுக்கே அது தெரியாதே! ஒன்று மட்டும் நிச்சயம் கூற முடியும். எத்தனை வருஷமானாலும் உமது பணம் போகாது. வேணுமானால் இன்னும் நண்டையாய் நடக்கும் என் பழைய பால்காரர்கள்

ஆறுமுகம், சிவப் பிள்ளை, செங்கமனி, வடிவேல் ஆகியோரைக் கேட்டுப் பார்க்கலாம்.

விசுவநாதன்
வாடிக்கைக்காரரின்
— கையொப்பம் —

7

புதிதாகத் திருமணம் செய்து கொண்டு, புதுக் குடித்தனம் செய்ய ஆரம்பித்திருக்கும் பங்கஜவல்லி, பிறந்தகம் போகத் தன் கணவனுக்குச் செய்யும் மனு :

1. பிறந்தகம் போகக் காரணம்:
   என் அண்ணாவின் கைக்குழந்தைக்கு ஆண்டு நிறைவு.
2. பயணம் மேற்கொண்டே ஆக வேண்டுமா? தவிர்க்க முடியாதா ?
   எப்படித் தவிர்ப்பது? எட்டுப் பெண் குழந்தைகளுக்குப் பிறகு அபூர்வமாய் ஒரு பிள்ளைக் குழந்தை பிறந்திருக்கிறது ? எப்படிப் போகாமல் இருப்பது? நீங்களே சொல்லுங்கள்!
3. நிகழ்ச்சி நடைபெறும் தினம்
   அடுத்த ஞாயிறு.
4. எத்தனை நாட்கள் முன்னதாகப் போக வேண்டும் ?
   நான்கு தினங்கள். (நீங்கள் கேட்கலாம், எதற்கு இத்தனை முன்னதாய்ப்போவது என்று! நம் திருமணம் ஆகி இரண்டு மாதங்கள் ஆகின்றனவே ! என் பிறந்தகத்து மனிதர்களைக் காணாமல் என் கண்கள் பூத்துப் போகாதா ?)
5. நிகழ்ச்சிக்குப் பின் திரும்பும் தினம்:
   ஆண்டு நிறைவு முடிந்து பத்து தினங்களில்.
6. சொல்படி வரத் தவறினால்?
   'உடல் நிலை அபாயம். உடனே புறப்பட்டு வரவும்' என்றோ, அல்லது உங்கள் மாமனாருக்கு, 'உம்முடைய பெண்ணை அனுப்பத் தேவை இல்லை; அங்கேயே இருக்கட்டும்' என்றோ தந்தி அடிக்கலாம்.

பங்கஜவல்லி
விண்ணப்பதாரர்

பி. கு.: 6-வது காலத்தில் குறிப்பிட்டபடி, தந்தி அடித்து என்னை அவமானப் படுத்தவேண்டாம்; அரட்டுப் பட்டமும் கட்டிக் கொள்ள வேண்டாம் !

நிகழ்காலக் குபேரபுரி

உலகிலேயே மிகையான கோடீசுவரர்கள் வாழும் நாடு எது என்றவுடன் அமெரிக்கா என்பீர்கள். அதுதான் இல்லை!

அது பாரசீக வளைகுடாவைச் சேர்ந்து அமைந்து பொன் கொழிக்கும் சிறு நாடான 'குவெய்ட்'தான் என்றால் அசந்துவிடுவீர்கள்.

இந்தச் சிறு நாட்டின் ஜனத் தொகை 4,68,000தான். ஆனால் உலகிலேயே ஒரு வருஷத்திய மிக அதிக சராசரி வருமானம் இந்த நாட்டில்தான். அதாவது இந்த நாட்டில் ஓராண்டு சராசரி குடும்ப வருமானம் 30,000 டாலர்கள்!

இங்குள்ள மக்கள் வருமான வரியோ, அல்லது சமூகப் பாதுகாப்பு வரியோ செலுத்த வேண்டாம்.

குவெய்ட்டார்கள் இலவசமாக ஃபோன் செய்கிறார்கள். குவெய்ட்டார்களின் குழந்தைகள் இலவசப் படிப்புப் படிப்பதுடன் நன்னடத்தைக்காக இருநூறு டாலர்கள் வரை வெகுமதி பெறுகிறார்கள்.

கடந்த ஆண்டில் மட்டும் லெபனானும், நைஜீரியாவும் குவெய்ட்டிடமிருந்து பதினான்கு மில்லியன் டாலர்கள் தனித்தனியே கடனாகப் பெற்றன. மொராக்கோ இருபத்தி எட்டு மில்லியன் டாலர்கள் கடன் வாங்கிக் கொண்டது. எகிப்தோ ஐம்பத்தாறு மில்லியன் டாலர்கள்வரை வாங்கியிருக்கிறது. சூடானும் விடவில்லை. அதுவும் பதினான்கு மில்லியன் டாலர்கள் கடன் வாங்கிக் கொண்டது. இதற்கெல்லாம் மேலாக குவெய்ட் ஓர் ஆயிரம் மில்லியன் டாலர்களைப் பதினைந்து அயல் நாடுகளில் ரயில்வே, பெருஞ்சாலை, தொழிற்சாலை, நீர்ப்பாசனம் போன்றவைகளுக்கு உதவி முதலீடுகளாகச் செய்திருக்கிறதாம்.

இந்தத் தற்காலக் குபேரப்பட்டினத்தின் பழங் கதையையும் கேளுங்கள். சுமார் இருநூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே வறட்சியாலும் யுத்தங்களினாலும் மத்திய அராபிய நாடுகளிலிருந்து விரட்டப்பட்ட பழங்குடிகளாய்க் குவெய்ட்டில் குடியேறியவர்கள் ஆடுகள் மேய்த்தும், படகுகள் ஓட்டியும் பிழைத்தார்கள். யூப்ரெடீஸ், டைக்ரிஸ் நதி முகத்துவாரங்களிலிருந்து கலங்கிய தண்ணீரை ஆட்டுத் தோல் பைகளில் நிரப்பிக் கொண்டு வந்து திண்டாடினர். பிறகுதான் அங்குள்ள எண்ணெய் வளம் தெரிந்து, பூமிக்கடியில் இருக்கும் எண்ணெய் சமுத்திரங்களைக் கொண்டு இன்று குவெய்ட்டைப் பெரிய கோடீசுவரபுரி ஆக்கிவிட்டார்கள்.

உலகின் நாலில் ஒரு பங்கான எண்ணெய்ச் செல்வம் குவெய்ட்டில் மாத்திரம் இருக்கிறது. தினசரி கம்பெனிகள் செலுத்தும் எண்ணெய்க் காணிக்கையும், வரியும் மாத்திரம் 18,25,000 டாலர்கள்!

குபேரபுரி குவெய்ட்டில் பிறக்கத் தவம் செய்ய நினைக்காதீர்கள். நம் நாடும் அப்படி ஆக உழைப்போம் ; பிரார்த்திப்போம்.

ஆதாரம்: லைப் இன்டர்நேஷனல்
தகவல்: புது. ரா. கைலாஸ்

அவளை அவன் வெறுக்கிறானா? அல்லது விரும்புகிறானா? அவனுக்கே புரியாத புதிர்.

கடவுள் அவனுக்கு அழகையும் அந்தஸ்தையும் ஆடம்பர வாழ்வினையும் அளித்துள்ளார். ஆயினும் ஏதோ ஒரு குறை அவன் இதயத்தை முள்ளாக உறுத்தியது.

ஊமைத் தாயை எண்ணியா? இல்லை... தன் 'அழகு' மனைவியை நினைத்தா? அல்லது ஊர் சுற்றும் உதவாக்கரைத் தம்பியை நினைத்தா? அவன் சிந்தித்தான்.....

ஊர் சுற்றும் தம்பி! பொறுப்பற்றவன்! 'தான்' மட்டும் என்ன! ரொம்பப் பொறுப்பு வாய்ந்தவன் என்று கூறிவிட முடியாது. போலியானதொரு வேஷம், சோகத்தை மூடிமறைக்கும் மெல்லிய மேலெழுந்த சிரிப்பு. உள்ளம் நாற்றம் எடுத்தாலும் உடல் மணக்க 'செண்ட்'. இவற்றுடன் அவனும் உல்லாசப் பேர்வழியாக ஊர் சுற்றித் திரிந்தவன்தான். இருந்தாலும் அவ்வப்போது ஓரளவு பொறுப்புணர்ச்சி ஏற்படுவதுண்டு.

''எப்போது கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்?'' என்று ஊமை ஜாடையில் கேட்டுக் கேட்டு உயிர் வாங்கும் தாயாருக்குப் பதில் சொல்லாமலே இஷ்டப்படி காலம் கழித்தவன்தான் அவன்.

செண்டின் மணம் மங்க, உடலில் வியர்வைத் துளிகளோடு, சராசரி வெறும் மனிதனாய், லட்சியமற்ற அற்பப் பிறவியாய் ஓர் இரவு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது அவனுக்கு அவன் மீதே எரிச்சல் வந்தது!

எது உண்மையான வாழ்வு என்று புரியாத தவிப்பு!

மறு நாள் —

ஏதோ ஒரு 'வெறி'யில் திருமணம் செய்து கொண்டு விடுவது என்ற அவசர முடிவுக்கு அவன் வந்தான்.

ஒரு முடிவுக்கு வந்த பிறகு காலம் தாழ்த்துவது என்பது அவனால் முடியாத காரியம்!

தன்னைத் தான் கட்டுப்படுத்தித் தன் உணர்ச்சிகளை வெல்லும் உயர்ந்த மனிதன் அல்ல அவன்!

வெறும் மனிதன்! சராசரி சாதாரண மனிதன்!

அவன் அந்த முடிவோடு அன்று வெளியே கிளம்பியபோது அவன் கண் எதிரில் தட்டுப்பட்ட முதல் பெண் வனிதா.

இதற்குமுன் அவளை அவன் சந்தித்ததுண்டு. ஒரே 'பஸ் ஸ்டாப்'பில் இருவரும் பஸ்ஸுக்காகக் காத்திருந்தனர்.

ஒடிந்து விடுவது போன்ற உடல் அமைப்புடன் இடுப்பைச் சுற்றித் தழுவிய அந்தப் புடவை இன்னும் அவளை மெல்லியதாகக் காட்ட, ஒரு கூடைப் புத்தகங்களுடன் அவள் நின்ற காட்சி அவன் கண் முன் வந்தது.

எல்லோரையும் போல் அவனும் அன்று அவளை அலட்சியமாகத்தான் பார்த்தான். பஸ்ஸில் ஏறும்போது நழுவி விழுந்த புத்தகங்களை அவன்தான் எடுத்து அவளிடம் தந்தான். அப்போதுகூட அவளைப் பற்றியோ, அவள் உருவ அமைப்பைப் பற்றியோ அவன் சிந்திக்கவில்லை. ஏதோ பீகார் பிராந்தியப் பஞ்ச உருவத்தைப் பார்க்கும் இரக்கம்தான் அவன் உள்ளத்தில் ஏற்பட்டது.

அதற்குப் பிறகு இன்னொரு நாள் —

'எக்ஸிபிஷ'னில் அவள் 'ரீச் ரூச்' என்று ஏதோ ஒரு கடையில் பேரம் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டான்.

அவளது குழி விழுந்த எலும்பு தெரியும் கன்னங்களையும், சதைப் பிடிப்பற்ற மெல்லிய கரங்களையும், எவ்வித உருவ அமைப்புமின்றிச் சப்பிட்டுக் கிடக்கும் உடலின் அழகற்ற தன்மையையும் பார்த்து 'ஐயோ பாவம்' என்று இரக்கப்பட்டான்.

கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற தீவிரத்தன்மையுடன் மன அமைதிக்காக அவன் சினிமா பார்க்கக் கிளம்பியபோது தான் அவள் மீண்டும் அவன் கண்களில் தட்டுப்பட்டாள். அவன் அவளை இப்போது உற்றுப் பார்த்தான்.

உடனே திருமணம் செய்து கொண்டுவிட வேண்டும் என்ற அர்த்தமற்ற பரபரப்பு! ஊமைத் தாயிடம், உதவாக்கரைச் சோதரனிடம் இறக்கி வைக்க முடியாத என் இதயச் சுமையை யாரிடமாவது இறக்கி வைக்க வேண்டும் என்ற தவிப்பு!

அவள் கிடைத்தாள்.

அடுத்த முகூர்த்தத்திலேயே ஊமைத் தாயின் உள்ளம் மகிழ, ஊர் கூட, உற்றமும், சுற்றமும் சூழ அவன் திருமணம் நடந்தேறியது.

அவனுக்குக்கூடப் பிரமிப்பாகத்தான் இருந்திருக்க வேண்டும் — அவனுடைய 'திடீர்' முடிவைக் கேட்டு.

ஏதோ மகத்தான காரியம் ஒன்றினைச் சாதித்துவிட்ட மகிழ்ச்சி சில தினங்களுக்குத்தான் அவனுள் இருந்தது.

பிறகு.....?

அவன்தான் சராசரி மனிதனாயிற்றே! அவளைப் பார்க்கும்போதெல்லாம், அவள் அவன் அருகில் நெருங்கும்போதெல்லாம் தான் ஏதோ ஓர் அர்த்தமற்ற இக்கட்டில் தன்னைச் சிக்க வைத்துக் கொண்ட பிரமை அவனுள் எழுந்தது.

இப்போதெல்லாம் கண்ணாடி முன் நின்று தன்னை வெகு நேரம் பார்த்துக் கொண்டான். தனக்குத் தானே ஏதோ அநீதி இழைத்துவிட்ட தவிப்பு அவனுள் பரவியது. அழகான, பருத்த, திரண்ட தன் உடல் அமைப்பு, சிவந்த மேனி, சுருள் கேசம், சுழலும் விழிகள் — இவை அத்தனைக்கும் ஈடாக அவளிடம் என்ன இருக்கிறது? மனத்தராசு எடை போடுவதை அவனால் தடுக்க முடியவில்லை.

இல்லறம் என்பதற்குத் தேவையானது அன்பு ஒன்றுதானா? அழகு வேண்டாமா?

வெறும் மனிதன்

விமலா ரமணி

'ஓ! நான் எத்தனை பெரிய முட்டாள்! என் வாழ்வை அழித்துக் கொண்டேனே!'

சும்மா இரவுகளில் மட்டும் உல்லாசமாய் வெளியே போய்விடுவது போலல்ல உண்மை வாழ்வு! விலக்க விலக்க ஒட்டிக் கொள்ளும் அர்த்தமற்ற பசையாகவல்லவோ இருக்கிறது!

"ஏன் இன்று இவ்வளவு நேரம்?" என்று என்றாவது அவள் கேட்டால் அவனுள் எரிமலை மூளும். இந்தக் கேள்வியைக் கேட்க அவள் யார்? கேட்டால் ஊர் சிரிக்கும்! 'அவள் உன் மனைவி' என்ற உரிமையை நிலை நாட்டும்!

ஐயோ! எவ்வளவு பெரிய தப்பு! அவன் அழகுவாழ்வே அழிந்து விட்டதே!

தனக்காக அவன் அழுத நேரத்தில், தன்னால் அவள் வாழ்வும் அழிக்கப்பட்டு விட்டதே என்ற உண்மையைப் பற்றி எண்ணிப் பார்க்க அவனுக்கு அவகாசமில்லை.

அன்று —

ஏதோ அதிசயமாய் இருவரும் சினிமாவுக்குப் போனார்கள். உள்ளத்துக்கு வாழா விட்டாலும் ஊருக்காவது வாழவேண்டியிருக்கிறதே!

இதே போன்ற ஒரு சினிமாவினால்தான் தன் வாழ்வு அழிந்து விட்டது என்ற அர்த்தமற்ற வெறுப்பு அவனுள் எழுந்தது.

"ஓ! அன்று இந்தச் சனியன் வராமல் இருந்திருந்தால் எத்தனை நன்றாக இருந்திருக்கும்! ஏன்? வேறு யாராவது ஒருத்தி அழகாக வந்திருப்பாள். என் அருகில் அமர்ந்திருப்பாள். நான் அவசரப்பட்டு விட்டேன். ஏன்? இப்போது மட்டும் என்ன? ஓடி விடலாமா எங்கேயாவது? ஓடு.... ஓடு...." உள்ளம் பேயாய் ஊளையிட்டது.

பாதிப் படத்தில் எழுந்து விட்டான்.

"ஏன்? படம் நன்றாகத்தானே இருக்கிறது?"

அவள் கேட்ட கேள்வி சாதாரணமானதுதான். ஆனால் அதில் கனல் கக்கும் எரிமலை ஒளிந்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

முன்பெல்லாம் அவனை இப்படி யாராவது கேட்பார்களா? எத்தனை படங்களில் பாதியில் எழுந்து வந்திருக்கிறான்? படம் முழுவதையும் பார்ப்பதும், பார்க்காததும் அவன் சொந்த விருப்பம்! அதில் தலையிட அவள் யார்? யார் அவள்? இந்தக் கேள்வி அவன் கண் முன் விசுவரூபம் எடுத்துச் சிரித்தது.

முழுக்க முழுக்கத் தனக்காகவே வாழ்ந்தவன்; பிறரின் இன்ப துன்ப பாகத்தில் பங்கெடுத்துக் கொள்ளாதவன்; பிறருக்காக எதையும் வாழ்வில் செய்யாதவன்.

இன்று எங்கோ பிறந்து இங்கு வந்த ஒருத்திக்காகத் தன் உரிமைகளை, உணர்ச்சி



களைப் பங்கிட்டுக் கொள்வதோ அல்லது தன் உரிமைகளை விட்டுக் கொடுப்பதோ, தனக்குத் தானே இழைத்துக் கொள்ளும் அநீதியாக, துன்பமாகத் தோன்றியது.

அவன்தான் சராசரி வெறும் மனிதனாயிற்றே !

''வாயை மூடிக் கொண்டு வா.'' — அவன் கத்திய கத்தலில் அங்கமெல்லாம் நடுங்க அடங்கிப் போனாள் அவள்.

ஓ! திருமணம் என்ற பந்தம் எத்தனை சிக்கல் நிறைந்தது ! எல்லாவற்றையும் உதறிவிட்டுக் காட்டாற்று வெள்ளமாக,'ஓ'வென்ற பேரிரைச்சலுடன் கத்திக் கொண்டு ஓடும் ரயிலாக எங்காவது ஓட வேண்டும் என்ற ஆவேசம் அவனுக்கு!

வெள்ளத்துக்கும் அணை உண்டு. ரயிலுக்கும் தண்டவாளம் உண்டு என்ற உண்மை மறந்துவிட்டது அவனுக்கு.

அவனோடு ஆபீஸில் வேலை பார்க்கிறாளே, சரளா. புதிதாகச் சேர்ந்தவள். அவள்தான் என்ன அழகு! இதற்கு முன்னால் அவள் வேலைக்கு வந்திருக்கக் கூடாதா? அதனால் என்ன? இப்போதாவது வந்தாளே!

அவனுள் ஒரு புது உற்சாகம் பொங்கி வழிந்தது.

* * *

என்றுமில்லாத திருநாளாய்க் கணவன் தன் மீது சொரியும் அன்பு மழையைக் கண்டு திகைத்தாள் வனிதா. தன் கணவனுக்குத்தான் புத்தி பேதலித்து விட்டதோ — அல்லது தான் காண்பதுதான் கனவோ ? — சந்தேகம் வந்துவிட்டது அவளுக்கு.

அருகில் நெருங்கி வரும் அந்த முகத்தை.. அதில் தெரிந்த சிவந்த விழிகளை.... அதற்குள் தெரிந்த தன் சின்னஞ்சிறு உருவத்தை அவள் பிரமிப்போடு பார்த்தாள்.

''சரளா!'' — என்ற குமுறலோடு அவன் கைகளை இறுகப் பற்றினான்.

பலி வாங்கும் ஆட்டினைப் புலி அடிப்பது போல் இருந்தது அவளுக்கு!

அவன் கரங்கள் அவள் கைகளை மேலும் முறுக்கின. அவனுக்குத் திடீரென்று ஞானோதயம் பிறந்தது. ஓ! எவ்வளவு மெலிந்த கரங்கள்! இவள் வனிதா அல்லவா?

மயக்கநிலை மாறிச் சட்டென விழிப்படைந்தான் அவன். ஒரே நிமிடத்தில் அவளைவிட்டு விலகினான்.

''வனிதா!'' — நிதானத்தோடு பேச ஆரம்பித்தான் அவன்.

''வனிதா.... தெரிந்தோ தெரியாமலோ நாம் பிணைக்கப்பட்டு விட்டோம்.... ஆனால் ஆனால்..... எனக்கு உன்னிடம் காதல் ஏற்படவில்லை.... நான் உன்னை..... முழு மனத்தோடு.....'' — எப்படி முடிப்பது என்று தெரியாமல் அவன் தவித்தபோது அவள் முடித்தாள்.

''தைரியமாகச் சொல்லுங்கள். வெறுக்கிறீர்கள். அப்படித்தானே?'' அவனால் பதில் சொல்ல முடியவில்லை. முழு மனத்தோடு அவளை ஏற்க முடியவில்லை. ஆனால் முழு மனத்தோடு அவன் வெறுக்கவும் இல்லை.

''சொல்லுங்கள்.... நான் என்ன செய்ய வேண்டும் ?''

''நான் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் உனக்குத் தெரியும்..... நாம் முழு மனத்தோடு நிம்மதியாய் வாழவில்லை... ஏதோ ஒரு பிளவு நம்மிடையே இருக்கிறது. இல்லையா ?''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை. ஒரு வேளை உங்கள் கண்களுக்கு அப்படித் தெரிந்திருக்கலாம். நான் எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறேன்.....''

அவனுக்கு எரிச்சல் வந்தது.

அவள் ஒரே மாதிரியாக இருக்கிறாளாம். அவன்தான் சில சமயம் 'ஒரு மாதிரியாக' இருக்கிறானோ ?

''நான் சொல்வதைக் கேள்.... இப்படி நமக்குள் புழுங்கி ஊருக்காகப் போலி வாழ்வு வாழ்வதைக் காட்டிலும்......''

''காட்டிலும்...?'' — அவள் குறுக்கிட்டபோது அவன் மேலே தொடரத் தயங்கினான்.

தான் காட்டும் முடிவு தனக்கே சரியில்லை என்பது போல் தோன்றியதோ ?

தான் தேர்ந்தெடுத்த முடிவு சரியானதுதான்..... ஆனால் அவளுக்குக் காரணம் காட்டத்தான் சரியாகத் தெரியவில்லை. இப்படி இந்த நரகத்தில் எத்தனை நாட்கள் உழலுவது? இதற்கு ஒரு முடிவு....?

''நான் சொல்வதைக் கேட்க உனக்கு ஆச்சரியமாக இருக்கலாம். புதுமையாகத் தோன்றலாம். ஒட்டாத உறவை ஒட்ட வைப்பதைக் காட்டிலும் வெட்டிவிடுவது நல்லதில்லையா?''

நேரடியான பேச்சுக்கு வராமல், தான் கேட்பது தனக்கே தவறாகத் தோன்றுவதால் ''இல்லையா?'' என்ற கேள்விக்குறியோடு அவன் 'முடிவை'ச் சுட்டிக் காட்டியவிதம் அவளுக்குப் புரிந்தது !

''ஒட்ட வைப்பதற்கும், வெட்டுவதற்கும் நாம் யார் ? திருமணம் என்ற புனிதச் சடங்கின் மூலம் ஏற்பட்ட இந்த உறவை அன்பெனும் பசை போட்டு ஒட்ட வைப்பதுதான் அழகு! பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதுதான் வாழ்க்கை! மீறுவது என்பது ஏற்பட்டால் பழைமைக்கும், அன்புக்கும்—என்ன அர்த்தம்? கரையின்றி நிற்கும் சமுத்திரம்கூட ஒரு சட்டத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நிற்கிறது; அசுரப் புயல்கூட ஓர் ஆவேசத்துக்குப்பின் அடங்கித்தான் போகிறது! வாழ்க்கைக்கு ஒரு வரையறை வேண்டும்.....''


அவள் முடிக்கவில்லை. ஆனால் அவன் முடித்து விட்டான்.

''நிறுத்து! உன் உபதேசம் கேட்க வரவில்லை. உன் பழைமைப் பேச்சுக்கள் ஏதும் எனக்குத் தேவையில்லை. இப்படிப்பட்ட பத்தாம் பசலியாக மக்கள் இருந்தால் இந்தியா என்றுதான் முன்னேறப்போகிறதோ? நான் உன்னை விவாகரத்து செய்வதென்று முடிவு செய்து விட்டேன்.

அவள் அதிர்ச்சியடையவில்லை. அவள் எதிர்பார்த்ததுதான்.

ஆனால்.... ஆனால்...

விவாகரத்திலும், தினம் தினம் ஒரு பெண்ணை நாடுவதிலும்தான் இந்தியா பின் தங்காமல் முன்னேற முடியும் என்பதோ



ராணிக்கும் தெரியாது ரகசியம்!



பிரிட்டிஷ் ராணி சமீபத்தில் வெள்ளோட்டம் விட்ட கப்பலின் பெயர் ''ராணி எலிஸபெத்—2''. இந்தப் பெயரைக் கப்பலுக்கு வைத்திருந்த விஷயம் அரசிக்கே கடைசிவரையில் தெரியாது. அவ்வளவு ரகசியமாக இருந்தது. என்ன பெயராக இருக்கும் என்று மக்கள் பந்தயம் கட்ட ஆரம்பித்தார்கள். ஏராளமானவர் 'சர்ச்சில்' என்று நினைத்திருந்தார்கள். 'சார்லஸ்' 'மார்க்கரெட்' என்ற பெயர்கள் அடுத்தபடியாகவும், 'எலிஸபெத்' என்ற பெயர் பதினொன்காவதாகவும் இருந்தனவாம்! — டைம்

'ஆவாரா'

அவனுக்கு இதுவரையில் தெரியாமல் இருந்தது! இன்றுதான் புரிந்தது !

அவள் நிதானமாகப் பேசினாள்:

''உங்கள் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் மணமில்லா இந்த மணம் யாருடைய வற்புறுத்தலின் பேரிலும் நிகழ்ந்ததல்ல. என்னைக் குற்றம் சாட்டவோ, என் மீது பழியைச் சுமத்தவோ உங்களால் முடியாது. உங்கள் முடிவு அவசர முடிவாக இருக்கலாம். ஆனால் நான் உங்களை வற்புறுத்தவில்லை. இவ்வளவு பலவீன மனம் படைத்தவராக இருக்கும் பட்சத்தில் எதிர்காலத்தை முன்பே சிந்தித்திருக்க வேண்டும். நான் அழகற்றவள் என்பதோ, உங்களுக்குப் பொருத்தமற்றவள் என்பதோ திடீரெனத் தெரிந்த உண்மையல்லவே! இரண்டு மாதங்களுக்குமுன் இதைச் சொல்லி இருந்தால் நான் கூட இதை வரவேற்றிருப்பேன். ஆனால்... ஆனால்... என் வயிற்றில் வளர்ந்து வரும் உங்கள் குழந்தைக்காக நான் இப்போது இந்த ஏற்பாட்டை ஏற்க முடியாமல் இருக்கிறேன். எனக்கு மனைவி என்ற உரிமை இல்லாமல் இருக்கலாம். ஆனால் என் வயிற்றிலுள்ளதற்கு உங்கள் குழந்தை என்ற உரிமை என்றும் உண்டு. அது வளர்ந்து ஆளாகும் வரை எனக்கும் இங்கு உரிமை உண்டு. பிறக்கப் போகும் குழந்தையின் உரிமைகளில் தலையிட எனக்கு அதிகாரம் இல்லை....''

அவள் உள்ளே போய் விட்டாள்!

அவன் திகைப்பின் எல்லையில் நின்றிருந்தான். **அவள் ஒரு தாய்! அவன் ஒரு தந்தை! உரிமையைக் கழற்றி எறியும் தருணம் முடிக்க இன்னும் இருக்கிறதே! என்றோ அவன் அறிவிழந்த அரை விநாடிக்கு ஆண்டவன் தந்த தண்டனையா? பரிசா?**

அவன் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு விட்டானே? நாளுக்கு ஒரு 'டானிக்' பாட்டிலும், வைடமின் மாத்திரைகளும், வேளைக்கு ஒவ்வொரு பழமுமாக அவன் வாங்கி வந்து கொண்டிருந்தான். அவள் உடம்பு மேலும் இளைக்காமல் இருக்க, உடம்பை வலுப் படுத்த என்ன என்னமோ 'இன்ஜெக்ஷன்'! அவனே ஊசி போட்டான். அவனால் அவனைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

எப்படியோ விவாகரத்துப் பிரச்னை தாற்காலிகமாக ஒதுக்கப்பட்டது பற்றி அவளுக்கு மகிழ்ச்சியே !

அன்று —

தன்னை மறந்த அசதியில் சனிசேரில் சாய்ந்தபடியே உறங்கி விட்டிருக்கிறான்!

'பிள்ளைத்தாய்ச்சி'ப் பெண்ணுக்கு உறக்கத்துக்குக் கேட்பானேன்! அவள் கண் விழித்த போது.....?

வீட்டில் ஒரே அமளி.

அவள் மைத்துனன், ஊர் சுற்றும் 'அவர் தம்பி' மோட்டார் சைக்கிளில் வரும் போது அடிபட்டு 'ஆக்ஸிடெண்ட்' ஆகியிருக்கிறதாம்.... அண்ணன் ஓடியிருக்கிறான்.

'பகீர்' என்றது அவளுக்கு. தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. அடிவயிற்றை என்னவோ செய்தது.

பழகிய தோஷத்துக்கே இப்படி என்றால் பெற்ற வயிறு என்னமாய்ப் பற்றி எரியும்?

கடவுளே ! அவர் நல்ல சேதியுடன் வர வேண்டுமே..... அதோ.... அதோ அவன் வருகிறான். ஆனால்.... நடை ஏன் இப்படித் தளர்ந்திருக்கிறது ? கண்கள் ஏன் இப்படிச் சிவந்து கிடக்கின்றன? அவன் வந்து என்ன சொல்லப் போகிறான்.....?

''அம்மா !''

தாயைக் கட்டிக் கொண்டு 'கோ'வெனக் கதறி விட்டான் அவன். ''நம்மை யெல்லாம் ஏமாற்றிட்டுப் போயிட்டான் அம்மா....''

ஒரு கணம் அந்த ஊமைத்தாய் திகைத்து நின்றாள். உண்மை உணர்ந்த உள்ளம் சிலிர்த்தெழுந்து பொங்கு கடலாய்ப் பொங்கிய அதிசயம் !

மரத்திருந்த உள்ளம் திடீரென்று செயல்பட்ட விந்தை ! அது அவிழ்த்த இரகசியங்கள் !

கூடி நின்ற கூட்டம் திகைத்து நின்றது !

ஊமை பேசிய விந்தை நிகழ்ச்சி அது ! உள்ளம் அழுது அழுது கூறிய அற்புதக் காட்சி அது!

மெய்சிலிர்த்தது அவனுக்கு!

மகனின் இழப்பில் ஊமை உள்ளம் உணர்ச்சிக் காவியமாய்ப் பொங்கிய விந்தை அவனுக்குப் பிரமிப்பாகத்தான் இருந்தது ! தாய்மைக்கு இத்தனை சக்தியா? வனிதா அன்று சொன்னது உண்மைதானே? சட்டங்களுக்கும், திட்டங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட எல்லைகளுக்கும் கட்டுப்பட்டுத்தான் உலகம் ஊமை உணர்ச்சிகளுடன் வாழ்ந்து வரு

இறந்தோ? இவைகளை மீறுவது என்றால் இதில்? இதில் புதுமை இருக்கலாம்; புரட்சி இருக்க லாம்..... ஆனால் அன்பற்ற வறண்ட பாலை யாகிவிடுமோ உலகம் ?

ஃ ஃ ஃ

ஈர உடையுடன் சொட்டச் சொட்ட அவன் வீட்டில் அடியெடுத்து வைத்தபோது உலகமே சூன்யமாகிவிட்ட நினைப்பு. அவன் தனி மரம்!

இப்படியே ஒவ்வொருவராக அவனைவிட்டுப் போகப் போகிறார்களோ ?

ஏன்? அவனே அப்படித்தானே 'விலக்கி'க் கொள்ளப் பார்க்கிறான் !

'சட்'டென நினைவில் உறைத்தது ஒன்று.

ஆமாம்..... வனிதா எங்கே? அவன் அவ னுடன் 'அங்கெல்லாம்' வரவில்லையே !

உள்ளேயிருந்து வேலைக்காரி வந்தாள்.

''வனிதா அம்மா திடீர்னு 'வயித்து வலி'ன்னு துடிச்சாங்க.... டாக்டர் அம்மா வந்தாங்க. திடீர்னு மயக்கமும் போட்டி டுச்சு...... டாக்டர் அம்மா வனிதா அம்மாவை அவசரமாத் தன் காரிலே ஆஸ் பத்திரிக்கு அழைத்துப் போயிருக்காங்க...''

அந்த டாக்டர் அம்மாளின் விலாசம் தேடி அவன் ஆஸ்பத்திரிக்கு ஓட்டமாய் ஓடினான்.

அந்த அறையை அவன் நெருங்கும் சமயத்தில்....

''அவர் மேலே தப்பில்லே, டாக்டர்.... நான்தான் அந்த மருந்தெல்லாம் வாங்கி வரச் சொன்னேன். எனக்கு என்னமோ குழந்தை பிறந்தால் இருக்கிற பலமும் போயிடுமோன்னு பயம்.... அதனால்தான்... தவிர அவருக்கே 'இன்ஜெக்ஷன்' போடத் தெரியுமாதலால் வெளி உதவியை நாடா மலே!'' வனிதாவின் மெலிந்த குரலை அடுத்து லேடிடாக்டரின் கண்டிப்பான குரல் கேட்டது.

''ரொம்ப அழகுதான் போ. ஒரு பெண்ணே இப்படிச் செய்வான்னு நான் நினைக்கவேயில்லே. ஏதோ தற்செயலாய் நான் அந்த அறையின் அலமாரியைத் திறக்க நேர்ந்ததே ஓர் அதிசயம்தான் ! கெட்டிக் காரி..... வெளியார் பார்த்தால் தெரியாத படி பாட்டிலை மாற்றி மருந்துகளை வைத்திருக் கிறாயே..... நான் மட்டும் டாக்டராக இல்லாது போயிருந்தால் அந்தக் கருத்தடை விஷ மாத்திரைகளை 'வைட்டமின் பில்ஸ்' என்றுதான் நினைத்து ஏமாந்திருப்பேன். நல்ல பெண் !''

வனிதாவின் மெல்லிய அழுகை சோக கீதமாய்ப் பின்னணி பாடியது !

''டாக்டர்! என்னை மரணவாயிலிருந்து காப்பாற்றினீர்கள். என் வயிற்றில் வளரும் சிசுவையும்தான். இன்னுமோர் உதவி டாக்டர்..... தயவுசெய்து அவர் என்னைப் பார்க்க இங்கு வந்தால் இந்தக் கேள்விகளைக் கேட்டு அவரைக் குழப்பாதீர்கள் டாக்டர். அவர் மேல் தப்பே இல்லே... அவர் நல்லவர். ரொம்ப நல்லவர்......'' தனக்குத் தானே சமாதானம் சொல்வதுபோல் அந்தக் குரல் மெலிந்து ஒலித்தது.

உள்ளே நுழைய வந்தவன் அங்கேயே நின்று விட்டான். 'ஐயோ வனிதா.... நீ

எந்தக் கண்டம்?



''வியட்நாம் என்கிறார்களே, அது எந்தக் கண்டத்திலே இருக்கு?''

''அதுவா நித்யகண்டத்தில் இருக்கு!''

எவ்வளவு நம்பிக்கையுடன் நான் தந்த மருந்து களைக் கண்ணை மூடிக் கொண்டு விழுங்கினாய்! 'இன்ஜெக்ஷன்' குழாயை விஷத்தால் நிரப் பியபோது நம்பிக்கையுடன் உன் கரங்களை என்னிடம் ஒப்படைத்தாயே. வனிதா ! நான் உன்னிடம் அரக்கத்தனமாய் நடந்து கொண்டதற்கு உன் அன்பால் இப்படித் தண் டிக்காதே வனிதா..... நீ தண்டிக்காவிட் டால் என்ன? குற்ற உணர்வே என்னைக் கொன்றுவிடும் போலிருக்கிறதே...நீ பெண் என்று நிரூபித்து விட்டாய் ; தாயாகப் போகிறவள் என்று நிரூபித்து விட்டாய் !

சற்றுமுன் அவன் தாய் கதறிய அந்தக் கதறல்.... அவனுள் மீண்டும் எதிரொலித் தது. ''டேய், பாலு! உன்னைப் பத்து மாசம் சுமந்து முழுசா முழு உருவமா நான் பெத்து எடுக்கிறதுக்குள்ளே நான் பட்டபாடு !.... 'இருக்கிற ஒரு பிள்ளை போதும்னு' உன் அப்பா வாங்கித் தந்த கண்ட கண்ட மருந்துகளைக் குடிச்சு.... டேய்..... பாலு, அப்போ என் மனம் பட்ட பாடு உனக்குத் தெரியுமா ? உன் ஆயுள் கெட்டி! உடலெல் லாம் வெந்த நிலையில் நீ பிறந்துட்டே! அந்த விஷ மருந்துகளோட வேகம் என் வாய்தான் ஊமையாச்சு ! பரவாயில்லே... நீ பிழைச்சயேன்னு நான் என் மனசிலே எத்தனை சந்தோஷப்பட்டேன் தெரியுமா? கடைசியிலே?''

தாயின் கதறல் பேரலையாய்க் காதில் மோதியது ! தான் ஊமையாகி மகனுக்கு உயிரளித்தாள் அவன் தாய்.

அவன் மனைவி .....?

தான் குற்றவாளியாகிக் கணவனைக் காப்பாற்றினாள் !

ஆனால் அவனோ....?

எந்த உணர்ச்சியும், தியாகமும் இல்லாத ஓர் அற்ப மனிதன்! ஒரு சாதாரண மனிதன்!

ஒரு வெறும் மனிதன் !

தனக்குள் மெல்ல முணுமுணுத்தவாறு அந்த மெலிந்த, அழகற்ற, எலும்புக்கூட்டு மனைவியை நேருக்கு நேர் சந்திக்கும் துணிவில் லாமல், நெஞ்சில் உரமில்லாமல் — அந்த அவலட்சணத்தின் முன் தன் அத்தனை அழகும் அர்த்தமற்ற ஓர் அழுக்காகிப்போன அருவருப்புடன் அந்த வெறும் மனிதன் வெளியே நடந்தான் !


கண்ணைப் பறிக்கும் புது மோஸ்தர்களும், இடைமுகயமும் கொண்டவை.
அரவிந்த்
தரத்தில் சிறந்த துணிவகைகள்
துணிவகைகள் :
SANFORIZED
TABILIZED* and
TABILIZED double tested.
*Registered Users
Arvind
அரவிந்த் மில்ஸ் லிமி
அகமதாபாத்

படித்துப் பாருங்கள்

ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீ தேவி பாகவதமும்

தெய்வங்களில் அன்பின் உருவமான அம்பிகைக்குத் தனி இடமுண்டு. அதே போல் பதினெண் புராணங்களில் அம்பிகையின் பெருமையைச் சொல்லும் தேவி பாகவதத்துக்குத் தனியிடமுண்டு. மற்றப் புராணங்களைத் தமது சிஷ்யர்கள் மூலம் பிரசாரம் செய்த வியாசர் இதனை மட்டும் தாமே பிரசாரம் செய்தாராம். தேவி பாகவதத்திலுள்ள எண்ணற்ற கதைகளில் அழகும் தத்துவமும் கலந்திருப்பதோடு அவை ஒவ்வொன்றுக்கும் தனிப் பலனும் சொல்லப் பட்டிருக்கிறது. சந்ததி உண்டாவது, செல்வம் பெருகுவது போன்ற இக உலக நலன்களும், உண்மை ஞானம், முக்திப் பேறு முதலிய பர நலன்களும் இத் தெய்வக் கதைகளைக் கேட்டால் உண்டாகும் என்பது ஆன்றோர் நம்பிக்கை. இவற்றில் முப்பத்தேழு பலன்களை எடுத்துக் கூறி, அவற்றுக்குரிய தேவி பாகவதக் கதைகளையும் இந்நூல் சுவைபட அளிக்கிறது. ஆங்காங்கு அழகிய விளக்கங்களும், அரிய புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன. பிற்சேர்க்கையில் புராணத்தின் பல மூல சுலோகங்களும், வேறு பல உத்தமமான தேவித் துதிகளும், நாமாவளிகளும் இடம் பெற்றுள்ளன.

[தொகுப்பாசிரியர்: பிரம்மஸ்ரீ வ. கை. கேதாரீசுவர சர்மா; வெளியீடு: தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை—17; விலை: ரூ. 2.25.]

வைதீக தர்மவர்த்தினி

இக்காலத்தில் எந்தத் தொழில் நடத்துவதுமே கஷ்டம். பத்திரிகைத் தொழில் நடத்துவது வெகு கஷ்டம். ஆஸ்திகப் பத்திரிகை நடத்துவது அதனினும் கஷ்டம். ஆஸ்திகத்திலும் கூட நவ நாகரிகங்களுக்கு விட்டுக் கொடுக்காமல் பூரண ஆசார சீலத்தை வற்புறுத்தி ஒரு பத்திரிகை நடத்துவது அசாமானியமான கஷ்டம். இந்த அசாமானியமான கஷ்டத்துக்கு இருபதாண்டுகளாக ஈடு கொடுத்து வந்திருக்கிறார் பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ சோமதேவ சர்மா என்பது ''வைதிக தர்மவர்த்தனி'யின் இருபத்தொன்றும் ஆண்டு மலரைப் பார்க்கும்போது தெரிகிறது. இந்தக் கஷ்டத்தைத் தாங்கும் சக்தியை அவர் எங்கிருந்து பெற்றார்? உண்மையாகவே ஆஸ்திகத்திலும் ஆசாரத்திலும் அவருக்குள்ள அசையா நம்பிக்கையும், ஆசாரியப் பெருமானிடம் உள்ள அநன்யமான பக்தியும்தான் அவருக்கு இத்தகைய சக்தியைத் தந்து, பல நூறு வீடுகளில் இந்த வைதிகப் பொக்கிஷமான மாதப் பத்திரிகையைப் பல்லாண்டுகளாகப் பரவ வைத்திருக்கிறது. வேத சாஸ்திர புராணங்களிலிருந்து அற்புதமான விஷயங்களைத் தக்கோரைக் கொண்டு எடுத்துரைக்கும் இந்தச் சஞ்சிகைக்கு இன்னும் பெருமளவில் மக்கள் ஆதரவு வேண்டும். இது வெறும் ஆதரவல்ல; இதற்குப் பிரதியாக —அதிகமாகவே — வாசகர்கள் நமது சாஸ்திரங்களின் உட்கிடைகளை அறிந்து பயன் பெறுவர்.

[கிடைக்குமிடம்: ஸ்ரீவத்ஸ சோமதேவ சர்மா, 2, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை—33; வருட சந்தா: ரூ. 5.]

ஸகல காரிய ஸித்தி தரும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

பரமபத நாதனின் பேராயிரமும் எங்கும் பரவியிருப்பது உண்மை. ஆயினும் அந்த அற்புத ஸஹஸ்ரநாமத்தைப் பற்றிப் பலரும் அறிந்திருக்க முடியாத அபூர்வமான, நுணுக்கமான விஷயங்களையெல்லாம் இந்நூலிலிருந்து அறி●ரும். பெரு மதிப்புக்குரிய பல ஆசாரியர்களின் ஆசியுடன் வந்திருக்கும் இந்த நூலில் ஸஹஸ்ர நாம மூலம் தேவநாகரி, தமிழ் இரு லிபிகளிலும் தரப்பட்டிருக்கிறது. தமிழில் நாமங்களின் பொருளும் தனியாக விளக்கப்பட்டுள்ளது. பலவிதமான பலனை எதிர்பார்த்துப் பாராயணம் செய்வோருக்கும் துணை நூலாகும் இது. திருமாலின் திரு மார்பில் உறையும் தேவியைக் குறித்தும், மற்றும் பல சுலோகங்களும் இந்நூலில் காண்பது மிகவும் பொருத்தம். பிற்பகுதியில் ஆயிர நாமம் குறித்த பாசுரங்களைச் சேர்த்துத் திருமாலிடமும், தமிழிடமும் அன்பு கொண்டவர்களை யெல்லாம் உருக வைத்திருக்கிறார்கள்.

[தொகுப்பாசிரியர்: கிழாத்தூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாச்சாரியார்; வெளியீடு: தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை—17; விலை ரூ. 5.]

□ □ □ □ □ □ □ □ □ □ □

அட்டமாசித்திகள் என்னென்ன தெரியுமோ?

அணிமா: பூதவுடலை அணுவளவாக்குதல்.

மகிமா: மேரு போன்று பெரியதாக்குதல்.

இலகிமா: காற்றுப் போல இலேசாக்குதல்

கரிமா: பளுவாக்குதல்.

பிராப்தி: அனைத்தையும் அளுதல்.

வசித்துவம்: எல்லாரையும் தன்வயப்படுத்துதல்.

பிராகாமியம்: கூடுவிட்டுக் கூடு பாய்தல்.

ஈசித்துவம்: விரும்பியதனை எல்லாம் செய்து முடித்து அனுபவித்தல்.

ஆதாரம்: 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'; தகவல்: ச. கணேசன்

□ □ □ □ □ □ □ □ □ □ □

வட்ட மேஜை

- ☐ தலைவர்களும் தலையங்கமும்
- ☐ கற்புக்கொரு கதை
- ☐ தலைகீழ்க் கட்டுரை
- ☐ இடமாற்றம்

சென்ற 12–11–67 'கல்கி' இதழில் வெளியான 'நேருஜியும் ராஜாஜியும்' என்ற தலையங்கம் இந்த இரு பெருந் தலைவர்களிடையே நிலவிய, என்றும் அழியாத, ஆழமான, தூய்மையான அன்பைக் காட்டுகின்றது. ஒருவர் மற்றவரிடம் எவ்வாறு பழக வேண்டும் என்பதற்கு இந்தத் தலையங்கம் ஓர் அருமையான எடுத்துக்காட்டு. தவறான அபிப்பிராயம் உள்ளவர்கள் இந்தத் தலையங்கத்தைப் படித்த பிறகாவது தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்வார்களா?

தூத்துக்குடி — ப. க. வைத்தியநாதன்

கல்கி 12–11–67 இதழில் தலையங்கமாக அச்சேறியிருக்கும் அமரர் நேரு அவர்களின்—அருந்தலைவர் ராஜாஜி அவர்களின் எண்ணங்களையும், கருத்துக்களையும் படித்தபோது பரவசமாகி விட்டேன் நான். சுதந்திர பாரதத்தின் உதயகாலத்தில் நமது பெரும் தலைவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையாகவும், உள்ளம் திறந்தும், வேற்றுமையில் ஒற்றுமையுணர்வு கண்டும் வாழ்ந்ததை எண்ணும்போது, என்ன இருந்தாலும் அந்தக் காலம் அந்தக் காலம்தான் என்று ஒரு பெருமூச்சு விடவேண்டியதாகவே இருக்கிறது.

சென்னை — அருணகிரி

கல்கி 12–11–67 இதழ் தலையங்கம் என்ற உருவில் இருபெரும் தோன்றல்களின் வாழ்க்கைப் பொன்னேட்டின் சில பக்கங்களைப் படித்த பின்பு பதினேழாண்டுகளுக்கு முன் தில்லியில் நடந்த நிகழ்ச்சிகளை நேரில் கண்டு மீண்ட உணர்வே எழுகிறது.

ஆசிய ஜோதிக்குப் பிறந்த நாள் நினைவஞ்சலி செலுத்தும் அதே நேரத்தில் பீஷ்ம பிதாமகர் ராஜாஜியின் வரவிருக்கும் தொண்ணூறாவது பிறந்த நாளுக்கு வரவேற்புக் கூறும் வாழ்த்திதழாகவும் அமைந்துவிட்டது இது.

பல்லாவரம் — இரா. பாலாஜி

இவ்வாரக் கல்கி (12–11–67) இதழின் தலையங்கம் 'நேருஜியும் ராஜாஜியும்' படித்து முடித்தபோது என் உள்ளம் உணர்ச்சி மேலீட்டால் ஒரிரு நிமிடங்கள் செயலிழந்து விட்டது. இதைப் போல் எந்தத் தலையங்கமும் நெஞ்சைத் தொட்டதில்லை.

தஞ்சை — க. இராமநாதன்

சென்ற 5–11–67 இதழில் வெளியான திரு தி. சா. ராஜு அவர்களின் 'துணை நலம்' ஓர் அற்புதப் படைப்பு. எந்த நாட்டினளாயிருந்தாலும் பெண்ணுக்குத் தனிச் சிறப்பு கற்பு என்பதை மிக எளிய முறையில் கூறியிருக்கிறார். கதையின் முடிவு எதிர்பாராததாக இருப்பதுடன் தாய்க் குலத்தின் உயர் தியாகத்துக்கு நம்மைத் தலைவணங்கச் செய்கிறது.

இரிம்பனம் — என். வெங்கடரமணன்

சென்ற 5–11–67 இதழில் 'செவ்வாய் கிரகத்திலிருந்து' என்ற 'நாடோடி'யின் கதை (கட்டுரை?) உண்மை கலந்த நகைச்சுவையாக ருசித்தது. ''நாடோடி அவர்கள் உலகத்தின் செயல்களைத் தலைகீழாகப் பார்த்துக் கொண்டு எழுதுகிறார்'' என்று ரசிகமணி டி. கே. சி. அவர்கள் பாராட்டியதாகப் படித்த ஞாபகம். உலகத்தின் செயல் ஒரு புதிர். அதன் விடை 'தலை கீழாக' எழுதப் பட்டிருக்கலாம். அதைத் 'தலைகீழாக'ப் பார்த்தால்தானே உண்மை விளங்கும்?

மதனபள்ளி — ஆர். சுப்பராமன்

கல்கி 5–11–67 இதழில் 'செவ்வாய் கிரகத்திலிருந்து' என்ற தலைப்புடன் நாடோடியால் எழுதப்பட்ட கட்டுரை சிந்தனைக்குரியது. பத்திரிகைகள், விளம்பரங்கள், சினிமாக்கள், வானொலி எல்லாம் எவ்வளவு தூரம் ஆண் பெண் உறவைத் தூண்டி வருகின்றன என்பது தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பத்திரிகைகளும் சினிமாக்களும் தமிழனின் பண்பாட்டையும் ஒழுக்க நெறிகளையும் வளர்ப்பது போய்த் தங்களின் வருவாய் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு காம உணர்ச்சிகளைப் பரப்புவது மிகவும் வருந்தத்தக்கது.

அனுப்பப்பட்டி — சின்னகிருஷ்ணசாமி

கல்கி 12-11-67 இதழில், 45ம் பக்கத்தில் உள்ள துணுக்கில் ''நேரு ஹார்வர்டு சர்வகலாசாலையில் படித்துக் கொண்டிருந்தார்'', என்று கண்டிருக்கிறது. இது அமெரிக்காவில் உள்ளது. நேரு படித்ததோ இங்கிலாந்தில். 'ஹாரோ பள்ளி'யில் என்று இருந்திருக்க வேண்டும்.

எர்ணாகுளம் — பி.வி. கோபாலகிருஷ்ணன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்

தபால் செலவு தனி